
கல்கி

கோடை சிறப்பிதழ்

KALKI 5-4-81 ரூ. 1.20



ISI தர முத்திரை பெற்றது
விநிபா சந்தன முகப்பவுடர்

IS 3959
ISI
CM/L/8273

விநிபா சந்தன முகப்பவுடர்
தரமாகத் தயாரிக்கப்படு கின்றது. சான்றாக இப்போது
ISI-யின் தரமுத்திரை பெறுகின்றது.
சருமத்திற்கு மென்மையும்,
பொலிவும் அளிக்கவல்ல தூய
100% மைக்ரோ:.பைன்
செய்யப்பட்ட மைசூர் சந்தனம்,
இந்தியாவின் அபூர்வ மூலிகைகள்.
மேனுட்டு வாசனை திரவியங்கள்,
உயர்ந்த அத்தர் வகைகள், தூய
புனுகு, ஜவ்வாது, அரகஜா
இவற்றை ஒருங்கே கலந்து நவீன
விஞ்ஞான ரீதியில்
தயாரிக்கப்படும் நறுமணம்
கமழும் பவுடர் விநிபா.



விநிபா ப்ராடக்ட்ஸ்
''கோகுல் கார்டன்ஸ்,'' கும்பகோணம்.





பங்களா தேசத்தின்
புதிய இளம் தலைவி

முஜிபுரின் மகள்

✻ முஜிபுர் ரஹ்மான் படத்தின் முன் அவரது மகள் ஹஸீனா, மகனுடனும் மகளுடனும். கையில் குழந்தையுடன் இருப்பவர் அவரது தங்கை ரேஹானா

பட உதவி நன்றி: டைம்ஸ் ஆப் இந்தியா

அடுக்களையிலிருந்து அவசரமாகவெளிப்பட வரும் எளிமையான இந்தப் பெண்மணியை எதிர்காலப் பிரதமராக ஒரு கணம் கற்பனை செய்து பார்க்கிறேன். யார் கண்டது? இன்றைய பங்களா தேசத்தின் முக்கிய எதிர்க் கட்சியான அவாமி லீகின் தலைவராக ஏகமனதாக் சென்ற மாதம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஹஸீனா அந்நாட்டின் பிரதமராக வேண்டும் என்று எதிர்பார்ப்பவர்கள் ஏராளம்.

ஐந்தாண்டுகளாகப் புதுதில்லி பண்டோரா ரோடின் அரசாங்கக் குடியிருப்பு ஒன்றில் மத்தியதரக் குடும்பத்தினர்களோடு ஒருவராய் வாழ்கிறார் ஹஸீனா. (வயது 33). கணவர் டாக்டர் வாஜெத் ஒரு விஞ்ஞானி. இந்திய அணு சக்திக் கமிஷனில் பணி புரிகிறார்.

கல்கி பத்திரிகைக்காகச் சிறப்புப் பேட்டி அளிக்க ஒப்புக் கொண்டார் திருமதி ஹஸீனா.

இரண்டு நாள் முன்னரே கேட்டும் பார்க்க முடியாததற்கு மன்னிப்புக் கேட்கும் குரலில், ''மார்ச்சு 17 அப்பாவின் பிறந்த நாள். அன்று நிஜாமுதீன் மசூதியில் 200 ஏழைகளுக்கு சாப்பாடு போட்டோம். அந்த ஏற்பாடுகளில் இருந்து விட்டேன். அதனால் தான் உங்களை இன்று வரச் சொன்னேன்'' என்கிறார்.

கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கான பாராட்டைப் புன்னகையுடன் ஏற்கிறார். ''என் தந்தையார் மீது மக்களுக்கும் மற்ற தலைவர்களுக்கும் உள்ள மதிப்பையே இந்த முடிவு காட்டுகிறது. என் அப்பா எவ்வளவோ கனவு கண்டார். எங்கள் ஏழை மக்களின் நிலை உயர. பதவியில் இருந்த சொற்ப நாளில் எத்தனையோ பணிகளைத் தொடங்கினார். அவற்றைத் தொடர எனக்கு வாய்ப்புக் கிடைத்தால் என்னால் முடிந்ததைச் செய்வேன். எந்தக் கஷ்டத்தையும் அதற்காக ஏற்கத் தயார்.''

''உங்கள் தேர்தலின் பின்னே இந்தியப் பிரதமரின் கை இருப்பதாக நேற்று ஒரு குற்றச்சாட்டு பத்திரிகையில் வந்ததே.''

''அது அபாண்டம். வெறும் கற்பனை. எங்கள் நாட்டுக் கட்சித் தேர்தல் உள் விவகாரம். இதில் எப்படி இந்தியப் பிரதமர் குறுக்கிட முடியும்? எனக்கே இந்தத் தேர்தல் ஒரு சர்ப்ரைஸ். சொல்லப் போனால் இந்திராஜிக்கு நான் தனிப்பட்ட முறையில் கடமைப்பட்டிருக்கிறேன். 1975ல் என் குடும்பத்தினர் அனைவரும் கொடுமையாகக் கொல்லப்பட்டதும் எனக்கும் என் தங்கைக்கும் இந்தியாவிலே தஞ்சம் அளித்து இந்த வீட்டையும் கொடுத்திருக்கிறார். இந்திய மக்களுக்கோ எங்கள் நன்றி எப்போதும் உரியது.

''1975 ஆகஸ்டு 15தான் எங்கள் குடும்பத்தையும், எங்கள் நாட்டையும் உலுக்கும் அந்த நிகழ்ச்சி நடந்தது. என் தகப்பனார், தாயார், என் மூன்று சகோதரர்கள் எல்லோரையும் மொத்தமாகக் கொலையாளிகள் சுட்டுக் கொன்று விட்டார்கள். அதற்குப் பதினைந்து நாட்கள் முன்புதான் வெளி நாட்டிலிருந்த என் கணவரிடம் நானும் என் தங்கையும் போயிருந்தோம். அதனால் உயிர் பிழைத்தோம்.

''அப்புறம் இன்னும் பங்களா தேசத்தில் காலடி வைக்கவில்லை. திரும்பும் நாளை எதிர் பார்க்கிறேன்.''

இப்போது பங்களா தேசத்தில் ஜனநாயகப் போர்வையில் சர்வாதிகாரம் நடைபெறுகிறது என்கிறார் ஹஸீனா. ''இந்த ஜியாவுர் ரஹ்மான் அப்பா இருக்கும்போது எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். அப்பா பிரசிடெண்டாக இருந்தபோது அம்மா சமைத்து அனுப்பும் பகல் சாப்பாட்டை இந்த ஜியாவும் சாப்பிட்டிருக்கிறார். அப்பா தம் கையாலேயே மீன் கறியைப் பாதி வெட்டித் தருவதை நானே பார்த்திருக்கிறேன். எப்படி மாறிவிட்டார்! பங்களா தேசம் சுதந்திரமடைந்தவுடன் பாகிஸ்தானுக்கு ஓடிப்போய் அங்கே குடிமக்களாகிவிட்ட விரோதிகள் இன்று ஜியாவுக்கு ஆலோசகர்கள்! அப்பாவைக் கொலை செய்தவர்கள் மீது நீதி விசாரணை செய்ய மறுக்கிறார். இங்கிலாந்தில் அமைந்து அனுப்பப்பட்ட ஒரு விசாரணைக் குழு டாக்கா வரத் தடை விதித்து விட்டார். இவர்களைப் போன்றவர்கள் மக்கள் அன்பைப் பெற்றுத் தலைவராகவில்லை. அதிகாரத்தால், பின்புற வாசல் வழியே ஆட்சியைப் பற்றினால் இப்படித்தான்'' என்று சீறுகிறார் ஹஸீனா.

இன்று பங்களா தேசத்தில் ஆளும் தேசிய கட்சிக்கு (பங்களா தேச நேஷனலிஸ்ட் பார்ட்டி) சட்ட சபையில் 210 இடம் இருக்கிறது. ஹஸீனாவைத் தேர்ந்தெடுத்த முக்கிய எதிர்க் கட்சியான அவாமி லீக் 39 இடங்களே பெற்றிருக்கிறது. இதற்கு ஹஸீனாவின் விளக்கம்: ''நேர்மையான தேர்தல் நடத்தவில்லை ஜியா. அதனால் கணக்கு இப்படித்தான் இருக்கும். மக்களின் ஆதரவு இன்றைய ஆட்சிக்கு இல்லை. எது எடுத்தாலும் விலை அதிகம். எங்கள் நாடு விவசாய நாடு. உர உற்பத்தியை ஒதுக்கிவிட்டு முக ஒப்பனை தயாரிப்பு நிலையத்துக்கு ஆறு கோடி ஒதுக்கும் ஆட்சியை என்ன சொல்வது? ஆறு ஆண்டுக்கு முன் ஒரு மில்லியனர் இருந்த எங்கள் ஊரில் இன்று 52 கோடீஸ்வரர்கள் இருக்கிறார்களாம். இது எப்படி? கஷ்டப்படும் மக்கள் கஷ்டப்பட்டுக் கொண்டே இருக்கிறார்கள்.''

ஆழ்ந்த சிந்தனையில் அடிக்கடி மூழ்கிவிடும் திருமதி ஹஸீனா கடந்த காலத்தைப் பற்றிச் சிந்திக்கையில் இனிமையான நினைவுகளும் எழுகின்றன. கசப்பான நினைவுகளும் வருகின்றன.

மூன்று சகோதரர்களுடனும், தங்கையுடனும் இளமையில் டாக்காவில் கழித்த உற்சாகமான இளம் பருவத்தை நினைத்துப் பார்க்கிறார். ''அப்பா எப்போதுமே பாகிஸ்தான் ஆட்சிக்கு எதிரானவர். பலமுறை சிறையில் இருந்திருக்கிறார். எங்களையெல்லாம் அம்மாதான் வளர்த்தார். நான் வங்க மொழி இலக்கிய மாணவி. ஆனர்ஸ் வகுப்பு முடிக்கும் நேரத்தில் விடுதலை இயக்கம் வலுவாகி, படிப்பை நிறுத்த வேண்டியதாயிற்று. ரவீந்திர நாத் டாகூர், காஜி நஸ்ருல் இஸ்லாம் பாடல்களில் எனக்குப் பிரியம் அதிகம்.


''1967ல் எனக்குத் திருமணம் ஆயிற்று. பெரியவர்கள் பார்த்துவைத்த ஏற்பாடுதான். அப்பாவின் நண்பர் ஒருவர் முன்னின்று பிரயத்தனம் செய்ததில் திருமணம் நடந்தது. என் கணவர் பங்களாதேசிதான். அப்போதுதான் வெளி நாட்டில் படித்து டாக்டர் பட்டம் பெற்றுத் திரும்பியிருந்தார். கல்லூரியில் அடிவெடுத்து வைத்த என்னை எளிய முறையில் மணக்க இசைந்தார். கல்யாணத்துக்கு அழைப்புக் கூட அச்சிடவில்லை நாங்கள். அப்பாவோ டாக்கா மத்திய சிறையில் இருந்தார். எங்கள் திருமணத்திலே எழுத்து மூலமான ஒப்பந்தச் சடங்குகள் வீட்டிலேயே நடந்தது. பிள்ளையும் பெண்ணும் மாலையிட்டுக் கைப்பிடிக்கும் சடங்கு அப்பா எதிரே சிறையிலேதான் நடந்தது!

''மூத்தவன் பங்களா தேஷ் விடுதலையான சில மாதங்களில் பிறந்தான். அப்போது ''ஜாய் பங்களா!'' என்பதே முழக்கம். எனவே அவனுக்கு ''ஜாய்'' என்றே பெயரிட்டோம். (ஜாய் என்பது ஜெய் அல்லது விஜய் என்பது போல வெற்றியைக் குறிக்கும் வங்கச் சொல்.) இப்போது தில்லி பால பாரதியில் படிக்கிறான். வகுப்பில் முதல்.

''என் பெண் இப்போது இரண்டாவது படிக்கிறாள். பெயர் 'புத்லி' (கண்ணின் கருமணி). அவள் படிப்பது போதாது என்று எனக்குத் தோன்றுகிறது. அவர் (டாக்டர் வாஜெத்) இப்போது ஒரு விஞ்ஞானப் புத்தகம் எழுதி வெளியிடுவதில் மும்முரமாக இருக்கிறார். உங்களிடம் உண்மையைச் சொல்லட்டுமா? அது என்ன என்று கூட எனக்குத் தெரியாது. அவர் சப்ஜெக்ட் விஞ்ஞானம். என்னுடையது இலக்கியம்!''

தன் பலமும் பலவீனமும், செய்து முடிக்க வேண்டிய மலைப்பான பணிகளின் அவசியமும் அவசரமும் தெரிந்த தலைவியாகத் தெரிகிறார் ஹஸீனா. ''என் பலமெல்லாம் மக்களின் பலம்தான். என் அப்பாவிடம் எவ்வளவு இயல்பாக மக்களுக்கு அன்பு பொங்கி வரும் என்பதைப் பார்த்திருக்கிறேன். அதுவே அவரின் பெரும் சக்தி. எவ்வளவு கஷ்டத்தையும் தாங்கும் பொறுமை அளித்தது. அது எனக்கும் கிடைக்க வாழ்த்துங்கள். நான் சொந்த நாடு திரும்பும் நாளை ஆவலுடன் எதிர்பார்க்கிறேன்.''

பேட்டி: தம்பி சீனிவாசன்



அவர்: "நீங்க சொன்னதை என்னாலே ஜீரணிக்கவே முடியலே!"


இவர்: "அப்படி என்ன சொல்லிட்டேன்?"

அவர்: "உங்க மனைவி சமைக்கறதாச் சொன்னீங்களே, அதைத்தான்!"

–சுசீலா நாதன்

முதல்வர் அறையில்...







✖ டாக்டர் எல். எம். சக்திவேல்

✖ புருஷோத்தமனும் சின்னாபின்னமான முதலமைச்சர் அறையும்

பிப்ரவரி முதல் தேதி காலை சுமார் பத்தரை மணி. தலைமைச் செயலகத்தில் உள்ள முதலமைச்சர் அறைக்குள் நுழைந்தார் ஒருவர். முதலமைச்சரின் இருக்கையில் அமர்ந்து தொலைபேசி எண்களைச் சுழற்ற ஆரம்பித்தார்! முதலமைச்சர் இல்லாத நேரத்தில் யார் உள்ளே தொலை பேசி எண்களைச் சுழற்றுகிறார்கள் என்று சந்தேகம் கொண்டு பார்த்த காவலாளி தொலை பேசியில் பேசியவரைப் பிடித்தார். ''நான் முதலமைச்சர் அறையிலிருந்து பிரதம மந்திரியுடன் பேசிக் கொண்டிருந்தேன்'' என்றாராம் அத்துமீறி உள்ளே நுழைந்த நபர்.

அவரைப் போலீசார் விசாரித்ததில் அவர் மிக மிக அதிகமாகப் படித்தவர் (எம்.ஏ. பட்டம்) என்று தெரிந்தது. அவர் தமிழக அரசில் மிகப் பெரிய பொறுப்பிலுள்ள அதிகாரி. தற்போது தற்காலிகமாக மனோதத்துவ மருத்துவ மனையிலிருந்து விடுதலை பெற்றிருக்கிறார். இது தலைமைச் செயலகத்திலும் காவல் துறை அலுவலகங்களிலும் பேசிக் கொண்டிருந்தபோது கிடைத்த தகவல். அவர் உயர் அதிகாரியாக இருந்த காரணத்தால் இந்தச் செய்தி அன்றே வெளிவரவில்லையோ?

மறுபடி மார்ச் இருபத்தி நான்காம் தேதி, புருஷோத்தமன் என்ற நபர் விடியற் காலை ஐந்து மணிக்குத் தலைமைச் செயலகத்திலுள்ள முதலமைச்சர் அறையைச் சின்னா பின்னமாக்கியிருக்கிறார்.

புருஷோத்தமனின் செயலுக்கு மனோ தத்துவ ரீதியாக விளக்கமென்ன? டாக்டரும், மனோ தத்துவ நிபுணருமான எல்.எம். சக்திவேல் கூறினார்:

இந்த வியாதிக்குப் பெயர் Schizo Phrenia (ஸ்கிட்ஸோ ஃப்ரீனியா). இதில் பாரனாய்ட் (Paranoid) ஸ்கிட்ஸோ ஃப்ரீனியா என்பது ஒரு வகை. இந்த மனோ தத்துவ நோய் நூற்றுக்கு இரண்டு பேர் வீதம் உலகம் முழுவதிலும் இருக்கிறது. பணக்காரன் ஏழை போன்ற எந்தப் பாகுபாடுமில்லாமல் இந்த நோய் வரும். பாரனாய்ட் நோய்க்கு இரண்டு குணாதிசயங்கள் உண்டு. ஒன்று டெல்யூஷன் (Delusion). திடீரென்று உலகமே தனக்கு எதிராக இருப்பதாக நினைத்தல். உதாரணமாக இந்த நோயுள்ள மனிதர் ஒரு அறைக்குச் செல்கிறார். அங்கு ஒரு மேஜை இருக்கிறது என்று வைத்துக் கொள்வோம். மேஜையைப் பார்த்தவுடன் அதற்கு அந்த நான்கு கால்களும் மிகவும் பருமனாக இருப்பது தம் தலையையே தாக்குவதற்காகத்தான் என்று நினைக்க ஆரம்பிப்பார்!

மற்றொரு வகை ஹாலூஸினேஷன் (Hallucination). இது ஒரு பயங்கரமான மனோ வியாதி. திடீரென்று யாரோ தன்னை அழைப்பது போலவும், கட்டளையிடுவது போலவும் தோன்றும். முதலில் தன்னை அந்தக் குரலின் அழைப்பிலிருந்து விடுவித்துக் கொள்ள முயற்சி செய்வான். ஆனால் கடைசியில் அந்தக் குரலுக்கு அடிமையாகி அது சொல்வதை யெல்லாம் செய்வான்.


முதலமைச்சர் அறைக்குள் நுழைந்து சகலத்தையும் நொறுக்கிய புருஷோத்தமனை நான் பரிசோதிக்கவில்லை என்றாலும் பத்திரிகைச் செய்திகளை வைத்துச் சில விஷயங்களைச் சொல்லலாம். அறையில் நிர்வாணமாக இருந்தார் என்பதே அவர் மனோ நிலை சரியில்லை என்பதற்கு முதல் சாட்சி.

அறையைச் சின்னாபின்னப் படுத்தியிருக்கிறார். திட்டமிட்டு இதைச் செய்திருக்க முடியாது. கேட்ட கேள்விகளுக்குச் சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஏடாகூடமாகப் பதிலளித்திருக்கிறார். யார் அறை அது என்று தெரியாமலே கூடச் செய்திருக்கலாம்.

இப்படி வெறியும், கோபமும் அதிகம் உள்ள மனோ வியாதியஸ்தர்களை முதலில் மருந்து கொடுத்துச் சமாதானப் படுத்துவோம். சமாதானமாகாவிட்டால் மின் தாக்குதல் (Shock) முறையில் சிகிச்சை அளிப்போம். ஒரு நிலையில் நோயாளி தனக்கு ஒன்றுமேயில்லை எனச் சொல்லித் தப்ப முயல்வார்.

இந்த வியாதி வருவதற்குக் காரணமே யாருடனும் பேசாமல் ஏகாந்தமாயிருந்து அபரிமிதமான கற்பனையில் ஏடாகூடமாகச் சஞ்சரிப்பதுதான். பேட்டி: ''சலன்''

...அத்துமீறல் முதல் முறை அல்ல!


ஐயா! ரஷ்யா இருக்கிற திசையைக் கவனமா பாரு!
இந்தியா
ரஷ்யா
ரேகன்
உள்நாட்டில் நெருப்பு
அம்பது.. அம்பத் தொண்ணூறு..
நூறு ஆனதும் வாங்கிட்டுப் போ!
ராஜீவ்
விருது
சி.பி.ஐ
மது விலக்கு பிரச்சார விழா
உய்... ய்ய்ய்!
குடிக்கலாம்!.. ஆனா குடியிலே தீமை வரும்னு தெரிஞ்சுகிட்டு குடிக்கணும்!.. அதுக்குலே குடிக்க வேணும்னு அர்த்தமில்லே! இது தான் புரட்சி தலைவரின் தெளிவான திட்டம்!

மதுவிலக்கு ரத்தாகவில்லை!

கள்ளுக்கடைகள், சாராயக்கடைகள், பிறவகை மதுக்கடைகள் திறப்பதற்கும் குடிப்பதற்கும் உரிமை அளித்துவிட்டு மதுவிலக்குச் சட்டம் ரத்தாகவில்லை என்று கூறுவது, மாடிக்கதவு, தோட்டக்கதவு, வீட்டின் இருபுறமும் உள்ள கதவுகள் அனைத்தையும் திறந்து விட்டு விட்டு, தெருக்கதவுக்கு மட்டும் பூட்டை மாட்டி விட்டு அதன் பக்கத்திலேயே சாவியையும் தொங்க விட்ட மாதிரி இருக்கிறது! — கலைஞர் தாக்குதல்

கொஞ்சம் சரியாகப் பாருங்கள் கலைஞர் ஸார்! தெருப் பக்கக் கதவும் திறந்துதான் இருக்கிறது! சாத்தப்பட்டிருப்பது ஒரே ஒரு ஜன்னல், அதிலும் குறுக்குக் கம்பியோ கதவுக்குக் கொக்கியோ இல்லை!

எம்.ஜி.ஆர். தாயின்மேல் செய்த சத்தியம் என்ன ஆயிற்று தெரியவில்லை! — மு.க. சந்தேகம்

இது கூடத் தெரியவில்லையா? மேலே அச்சுக் கோக்கப்பட்டுள்ள வரியில் —தான் இருக்கிறது!

சுற்றுப்புற மாநிலங்களெல்லாம் மதுவிலக்கை அமல் படுத்தாதபோது தமிழகத்தில் மட்டும் அமல் படுத்துவது ரொம்ப சிரமம். அதனால்தான் மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது! — ஒரு வாதம்

பேஷ்! 'உங்கள் வீட்டுப் பையன் குடிக்கிறானே' என்று யாராவது புகார் செய்தால் 'பக்கத்து வீட்டுப் பையன் குடிக்கும்போது இவனை மட்டும் குடிக்காதே என்று கண்டிப்பது ரொம்ப சிரமம்' என்று இனி நாம் சமாதானம் சொல்லலாம்!

அரசின் வருவாய் பெருகத்தான் மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது. அபிவிருத்தித் திட்டங்களுக்குப் பணம் வேண்டுமல்லவா? — ஒரு தர்க்கம்

போடு தப்பல்ன்னான்! இனி தமிழகத்தில் சுபிட்சம் பெருகி பாலும் தேனும் பெருக்கெடுத்து ஓடப் போகிறது! மில்லிகளைத் தாராளமாகப் போட்டால் கள்ளும் சாராயமும் கூட பாலும் தேனும் போல் தோற்றமளிக்கும்!

மதுவிலக்கை முழுமையாக ரத்து செய்ய இந்த அரசுக்குத் துணிவில்லை. தளர்த்துகிறது. — சட்டசபையில் எம்.எல்.ஏ. புகார்

என்னய்யா விஷயம் புரியாம பேசறீங்க? அடியோடு ரத்து செய்து விட்டால் அவரவரும் பணம் பண்ண வாய்ப்புக்கள் குறைந்து விடாதா? குடிக்கலாம் ஆனால் உளவாக்கட்டைக்குச் சில நிபந்தனைகள் என்றால்தானே உள்ளங்கை நமைச்சலுக்கு மருந்து கிடைக்கும்?

கள்ளச்சாராயம் அதிகரித்து விட்டது. அதனால்தான் மதுவிலக்கு தளர்த்தப்படுகிறது. — மற்றொரு நியாயவாதம்

'திருட்டுப் புரட்டு அதிகரித்து விட்டாலும் இதே போல் சட்டத்தைத் தளர்த்தலாமே' என்று யோசனை சொன்னாலும் சொல்லுங்கள் ஆனால்...

'மதுவிலக்கு இல்லாத இடங்களிலும் மலிவான நாட்டுச் சரக்கை மக்கள் குடித்துச் செத்ததாகவோ அல்லது பார்வை இழந்ததாகவோ செய்திகள் வருகின்றனவே என்று மட்டும் கேட்காதீர்கள்!

மதுவிலக்கைத் தளர்த்துவானேன், பிறகு குடிப்பதால் விளையும் கேடுகள் பற்றிப் பிரசாரம் பண்ண ஒரு கோடி ரூபாய் ஒதுக்குவானேன்? — சட்டசபையில் எம்.எல்.ஏ. கேள்வி

'படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோயில்' என்ற வசனம் பொய்க்கலாமா? அதற்காகத்தான்!

மதுவிலக்கைத் தளர்த்துவதிலேயே அரசுக்கு ஏராளமான புதிய வருமானம் கிடைக்கப்போகிறது; இதைத் தவிர விற்பனை வரியையும் உயர்த்துவானேன்? — சட்டசபையில் எம்.எல்.ஏ. வியப்பு

புரட்சித் தலைவர், சாணக்கியத்தில் ராஜாஜியையும் வென்று விட்டார் என்று சரித்திரம் பேச வேண்டாமா? ராஜாஜி மது விலக்கை அமுல் படுத்தி அதனால் அரசுக்கு ஏற்படும் நஷ்டத்தை ஈடு கட்ட விற்பனை வரி விதித்தார். புரட்சித் தலைவரோ மதுவிலக்கைத் தளர்த்தி அரசுக்கு வருவாய் தேடுவதுடன் அதற்கும்

1981 ஏப்ரல் 5

ரௌத்திரி பங்குனி 23

மலர் : 39 இதழ் : 36



கல்கி



தமிழ்த்திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா - பாரதியார்

மேல் விற்பனை வரியை அதிகரித்தும் வருவாய் தேடுகிறார்! இப்போது சொல்லுங்கள் யாருக்குச் சாமர்த்தியம் அதிகம்?

தமிழகத்தில் தண்ணீருக்கு ரேஷன்!

— செய்தி

தங்கத் தமிழ் நாட்டில் தண்ணீர்ப் பஞ்சம் வந்தாலும் வரும், இனி மதுவுக்குப் பஞ்சமே வராது. குடிக்கத் தண்ணீர் இல்லையென்றால் என்ன? கள் குடிக்கலாமே!

ஏன் ஸார்! இப்ப தமிழ் நாட்டில் மதுவிலக்கு இருக்கா இல்லையா?

— ஸ்ரீமான் பொது ஜனத்தின் குழப்பம்

புரட்சித் தலைவரின் நண்பர்களே — ஹிப்பாக்ரிஸி அறியாத நண்பர்களைக் கேளுங்கள், சொல்வார்கள்!

'முதல் மரியாதை'

'முதல் மரியாதை' நாடக விமரிசனத்தில் சேஷாத்திரிக்கு முதல் மரியாதை செய்ய நினைத்திருக்கும் வேளையில் இதுவே அவருக்கு இறுதி மரியாதையாகி விட்டது! 'என்று காண்போம் இனி' என்று ஏங்க வைப்பவர்கள் வரிசையில் சேர்ந்து விட்டார். வாயாடி தங்கை, அவளுடைய அமைதி காக்கும் அக்கா என முறையே பானுமதியும் பிரேமாவும் இணைந்த துருவங்களாக சோபித்தார்கள் என்றால் அவர்களுடைய தகப்பனாராகப் பாசத்தையும் கண்டிப்பையும் ஒருங்கே காட்டி உயர்ந்தார் சேஷாத்திரி. அவர் ஆயுட்காலம் முடிந்தாலும் நமது ஆயுட்காலத்துக்கு மறக்க முடியாத நடிப்பாற்றல்.

கிராமப்புறத்தின் பக்கம் எழுத்தாளர்கள் கவனமெல்லாம் திரும்பி யிருக்கிறது. சௌந்தர்யனும் அப்படியே. கொலை செய்தது யார் என்பது நாடக கதாபாத்திரங்களுக்குப் புதிர் என்றாலும் ரசிகர்களுக்குத் தெரியுமாதலால் தொய்வு. ஆனாலும் குண சித்திரங்களைத் துல்லியமாகச் செதுக்கும் வசனங்களால் தூக்கி நிறுத்தி விடுகிறார், நாடகத்தை.

நல்ல மனம் படைத்திருந்தாலும் உயர் குடும்பத்தின் கௌரவப் பிரச்னைகள் புகுந்து துரைசிங்கத்தை (ராஜசேகர்) ஆட்டிப் படைக்கின்றன. அதனால் கதாநாயகனிடமே வில்லத்தனங்கள் வெளிப்படுகின்றன. நடிகர் ராஜசேகரிடம் பளபளத்தது பட்டு வேஷ்டி மட்டுமல்ல; நடிப்பும்தான்.

நல்லவனுக்கு நல்லவன் பொல்லாதவனுக்குப் பொல்லாதவனை 'பூசாரியாக ஆர். வெங்கட்ராமனின் நடிப்பு பட்ஜெட்டில் பற்றாக்குறை இல்லை!

துரைசிங்கத்தின் தாய் மாமனாக முரளிதரன் தோப்புக் கரணம் போட்டாலும் நடிப்பைப் பொருத்த மட்டும் மன்னிப்பதற்கு ஏதுமில்லை.

கோணண்டி மாயாண்டியாக பத்மனாபனும், சைமனும் சிரிப்புக்குத் துணை.

நல்ல நாடகத்துக்கு மான்யம் அளித்த இயல் இசை நாடக மன்றத்துக்கு ஒரு சபாஷ்!

இயக்குனர் சேஷாத்திரிக்கு அஞ்சலியாக நாடகம் தொடர்ந்து நடந்து நாலுவது அரங்கேற்றத்தைக் காணட்டும்

- குட்டி கிருஷ்ணன்





வட்ட மேஜை



● மதுராந்தகத்தில் ஒரு மரணம் — தலையங்கம் மனத்தை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. ''தமிழ்த் திருநாடு தன்னைப் பெற்ற எங்கள்தாயென்றுகும்பிடடி பாப்பா'' என்ற பாரதியின் வரிகளைத் தலையங்கத்தோடு சேர்த்துப் படித்தபோது என்னை அறியாமலே இரண்டு சொட்டுக் கண்ணீர் கல்கியில் விழுந்தது.

திருவையாறு — எஸ். புகழேந்தி

● அரிஜனப் பெண் ஞானசுந்தரியின் மரணம் குறித்து அருமையான தலையங்கம் எழுதி அரசிடம் நீதி கேட்டிருக்கும் விதம் பாராட்டுக்குரியது. ஜாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டு, சமுதாயத்தில் எந்தப் பிரிவினர் பாதிக்கப்பட்டாலும் அதைக் கண்டு மனம் பொறுக்காமல் நீதி கேட்பதற்கு 'கல்கி' தயங்காது என்று சொல்லாமல் சொல்லிவிட்டீர்கள்.

காரமடை — பா. அன்பழகன்

● காமராஜர் அகில இந்தியாவிலும் பல தலைவர்களை, ஏன் பிரதமர்களையே உருவாக்கியவர். அவர் கிங் மேக்கர். ஒரு பொதுக் கூட்டத்தில் குடந்தை ராமலிங்கத்தின் பேச்சு அவரைக் கவர்ந்தது. இளைஞரை முன்னணிக்குக் கொண்டு வந்தார். இப்படிப் பல சம்பவங்கள். அவர் தீர்க்கதரிசி. கவிஞரைச் சில தருணங்களில் தக்க காரணத்துடன் அழுத்தியிருக்கலாம். அதற்காக அவரது சூட்சும அரசியலைக் கொச்சைப்படுத்திக் கண்ணதாசன் எழுதுவதைப் படிக்க நெஞ்சு வலிக்கிறது. இது அநாகரிகம்.

சிதம்பரம் — சிவ. ராஜகுமார்

● 'நான் படுத்துக் கொண்டே ஜெயிப்பேன்' என்று 1967ல் காமராஜர் சொன்னதோடு தமிழகத்தில் காங்கிரஸ் படுத்ததுதான். இன்னும் எழுந்திருக்கவில்லை. காங்கிரஸாரின் 'உள் சண்டை' என்ற நோயால் காங்கிரஸ் ஒரேயடியாகப் படுத்துவிட்டது.

தூத்துக்குடி — இரணியல் 'கலை'

● டாக்டர் ஹண்டே, டாக்டர் சௌரிராஜன் கலந்துரையாடல் கண்டேன்.

'போலியோ' வியாதியின் மறு பிறவிக்கு முக்கிய காரணம் 'போலியோ சொட்டுமருந்து' சரியாகப் பாதுகாக்கப்படாமல் வைக்கப்பட்டிருப்பதுதான்.

பல மருந்துக் கடைகளில் இரவில் கடை மூடும்போது, குளிர்சாதனப் பெட்டிக்கான மின் இணைப்பை 'ஆஃப்' செய்து விடுகின்றனர். இதனால் 4 டிகிரியிலேயே(C)வைத்திருக்க வேண்டிய சொட்டு மருந்து உயர் வெப்பத்தினால் வீரியம் இழந்து விடுகிறது.

இதை மருந்து ஆய்வாளர்கள் மூலம் சோதனை இடலாம். ஆனால் தமிழ் நாட்டில் மருந்தாய்வாளர்களின் எண்ணிக்கை மிகவும் குறைவு. நம்மை விட சிறிய மாநிலமான கர்நாடகத்தில் நம் மாநிலத்தை விட அதிக ஆய்வாளர்கள் உள்ளதால் நிலைமை அங்கு கட்டுக்குள் உள்ளது.

மருந்துகளை ஆய்வு செய்வதற்காக கிண்டியில் ரூ. 72 லட்சம் செலவில் கட்டப்பட்ட பரிசோதனையகம் கிட்டத்தட்ட இயங்காத நிலையிலேயே (மூன்று ஆண்டுகளாக) உள்ளது. அங்கும் ஆள் பஞ்சம்!

மதுரை-20 — வி. மணி

● நீங்கள் புத்திசாலியா, அசடா, அப்பாவியா?

தரம் வாய்ந்த கல்கி இதழை

(அ) காசு கொடுத்து வாங்கிப் பத்திரப் படுத்துகிறீர்கள்.

(ஆ) ஓசியில் படித்துத் திருப்பிக் கொடுக்கிறீர்கள்.

(இ) படிப்பதே இல்லை.

விடை;

(அ) புத்திசாலிகள்

(ஆ) அசடுகள் (கொஞ்சம் புத்திசாலி கூட)

(இ) என்னத்தைச் சொல்ல?

கோவை-12 — துரை பால்ராஜ்

● 'அவிலன் மனம் அறிவேன்' போட்டியை அறிவித்து அதற்கு ரூ. 500 பரிசு என்றும் அறிவித்து விட்டதால் நான்கு சிறு கதைகளையும் ஆழ்ந்து படிக்கவும் செய்து விட்டீர்கள். மனப்பாடம் செய்யாத குறைதான்! நான்கு சிறு கதைகளுமே முதல் தரம்.

பட்டுக்கோட்டை — பி.எல். ராஜகோபாலன்

● சுப்ரபாலன் எழுதிய ''ஹைஜாக்'' என்னும் கதையை Desmond Bagley's "High Citadel" ன் தமிழாக்கம் என்று பெருந்தன்மையுடன் அவரே போட்டிருக்கலாமே!

ஈரோடு — செம்பகா அருணாசலம்

(சுப்ரபாலன் எழுதத் தூண்டுகோலாக இருந்தவை மேற்படி நூலின் முதல் அத்தியாயமும் பாகிஸ்தான் இன்டர் நேஷனல் விமானம் ஹைஜாக் செய்யப்பட்ட செய்தியும். - ஆர்.)

● சு. சமுத்திரம் 'பாவலாக்கள்' கதையில் அரசாங்க சிவப்பு நாடாவைச் சித்திரித்தார். (15-3-81 இதழ்) பைல்கள் மூன்று இனங்களாகப் பிரிக்கப்படுகின்றன. 'அபி நஹீம் — இப்பொழுது இல்லை', 'மாலூம் நஹீம் — தெரியாது', கபீ நஹீம் — எப்பொழுதுமே இல்லை' — அர்ஜண்ட் என்றால் மூன்று நாள் ஆகும். ஒரு ஃபைலுக்குச் சாதாரணமாக ஒவ்வொரு மேஜையில் ஒரு வாரம் என்று கணக்கு.

ஒவ்வொரு அரசு ஊழியரும் உண்மையாக ஒரு நாளைக்கு இரண்டு மணி நேரம் வேலை செய்தாலே நமது பாரதம் முன்னேறிவிடும்.

சென்னை-90 — வி.வி. கோபால்

ஏதாவதொரு மிக்ஸரை வாங்கிவிடாதீர்கள்...



எல்லா உறுப்புகளும் பேடென்ட் செய்யப்பட்டுள்ளன

... உங்கள் தேவைக் கேற்றது ஸுமீத்

There was no head-on collision between British imperialism and Indian Society, and in consequence there was no resistance to the death. The Indian religio-social systems showed little trace of political nationalism in its modern sense.
–PERCIVAL SPEAR

முன்னால்...

திருவேங்கட மலையின் வட்டாரங்களில் கதை ஆரம்பம். பதினெழாம் நூற்றாண்டின் முற்பகுதி. வெள்ளைக்காரர்கள் வியாபாரிகளாகவும் யாத்திரிகர்களாகவும் நாட்டில் ஊடுருவி விட்டார்கள். அந்நாளைய வாழ்க்கை முறை எப்படி இருந்தது? நிறைய மாறுபட்டிருந்தது. நம்மைச் சில சமயம் அது அதிசயப்படவும் வைக்கிறது. சந்தேகம் கொள்ளவும் வைக்கிறது. (இப்படியா வாழ்ந்தார்கள்!)

இந்தக் கதையில் சில சம்பவங்கள் அத்தகைய அதிசயமோ, சந்தேகமோ கொடுத்தால், அதற்குப் பின் ஏதோ ஒரு சரித்திர ஆதாரம் உண்டு என்று தெரிந்தால் போதுமானது.

இந்த ஆதாரங்களைத் தேடி நான் படித்த, படிக்கிற புத்தகங்கள் சற்று அதிகமானவைதான். ஏனெனில் சமீப நூற்றாண்டுகள் எனும்போது ஏகமாக Reference புத்தகங்கள் கிடைத்து விடுகின்றன.

நான் எடுத்துள்ள ஆதாரங்கள் சில அறிஞர்கள் கருத்துக்கு மாறுபட்டதாக இருந்தால் அவர்கள் என்னை மன்னிக்க வேண்டும்.

ஏனெனில் நான் எழுதுவது சரித்திரமல்ல; கதை, கதை, கதை!

ஸ்ரீ. வே.

1

திருவேங்கட மலையிலிருந்து சுவர்ணமுகி இறங்கிக் கொண்டிருந்தாள்.



அவளிடம் ஒரு அவசரம் இருந்தது.

கால்களைத் தூக்கி வைத்து ஒரே பரபரப்பில் இறங்கினாள்.

இளம் காலை நேரம் அது.

அன்றைக்குக் காற்றில் சலனம் இல்லை.

நெற்றியில் குறுவியர்வைகள் அரும்புகட்ட, அடிக்கடி நீண்ட மூச்சுடன் இறங்கிக்கொண்டிருந்தாள்.

காளி கோபுரம் வந்த பின் திரும்பிப் பார்த்தாள். பூங்கரு பின்னால் வந்துகொண்டிருந்தாள். அவளையும் தாண்டிஅவள்புருஷன் உய்யன் வந்து கொண்டிருந்தான்.

இவர்கள் இருவரும்தான் சுவர்ணமுகிக்குத் துணைகள்.

ஆச்சரியமாக இருந்தது! காளி கோபுரம் கட்டப்பட்ட பிறகு இப்போதுதான் பார்க்கிறாள்.

சமீபத்தில் முடிக்கப்பட்டது அது.

இன்னும் அதன் செங்கல்களும், காரைகளும் சுற்றி வர புதுமை குன்றாமல் கிடந்தன.

கோபுரத்து நிழலில் சற்றே நின்றாள்.

வேங்கட மலையை நோக்கிக் கைகூப்பி, "அப்பா, வேங்கடவா! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். இந்த நாட்டுக்கும் எனக்கும் நல்ல கதியைக் கொடுத்து அருளுவாய்!" என்றாள்.

"சீக்கிரம் சீக்கிரம்" என்றாள் அவள்.

உய்யன் கோலை ஊன்றிப் பல இடங்களில் தாவி ஓடி வந்தான்.

"அம்மா! இந்த விருசல் உனக்கு ஆகுமோ?" என்று அவளை நோக்கிக் கேட்டான்.

"ஒரே பெரிய விஷயம் நடக்கிறது. நாம் உடனே போக வேண்டும்" என்றாள் சுவர்ணமுகி.

ஐம்பது வயதான உய்யனை நோக்கிப் பூங்கரு ஜாடை காண்பித்தாள். ஒரே யுத்தம் நடக்கிறது என்பது அதன் பொருள்.

"சண்டையா?" என்றான் அவன். வாயைப் பிளந்து.

"ஆமெ" என்றாள் அவள்.

பூங்கருவும் உய்யனும் மலை இனத்தைச் சேர்ந்தவர்கள். திடமான மேனி படைத்தவர்கள். விரிவான மார்பு. கைகளும் கால்களும் கல்லைப் போல் வலுவானவை. அவர்கள் கண்களில் காட்டுத் தன்மை தெளிவாகத் தெரிந்தது.

ஒரு நிமிடம் கூட அங்கு இளைப்பாறவில்லை.

கோபுர வாயிலிலிருந்து இறங்க ஆரம்பித்தார்கள்.

"இப்போ தெல்லாம் யாத்திரிகர்கள் குறைந்து விட்டார்களா?" என்றாள் சுவர்ணமுகி.



சுவர்ணமுகி

ஸ்ரீவேணுகோபாலன்

"மூணு வருஷமாச்சு!" என்றான் பூங்கரு.

"மழையே இல்லையே!" என்றான் உய்யன்.

எப்போதும் திருவேங்கட மலை வழியில் யாத்திரிகர்கள் கும்பல் எதிர்ப்பட்டுக் கொண்டே இருக்கும்.

இன்று பாதை நிர்மானுஷ்யமாய் இருந்தது.

இருபுறங்களிலும் மரங்களும் செடிகளும் பட்டுப் போயிருந்தன.

கம்பும் குச்சியுமாக எங்கும் காட்சி. இலையில்லாத மரங்களின் எலும்புக் கூடுகள் பயங்கரமாக இருந்தன.

ஒரு நாழிகையில் மலையின் அடிவாரத்தை அடைந்தாள் சுவர்ணமுகி.

கீழே அனல் வீசியது. எங்கும் எஃகுத் தகடு போல் வெய்யில் ஜொலித்தது. ஒரு பூண்டுப் பச்சை இல்லை. எல்லாம் தரிசையான வெட்டைகள். வானம் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றுவது போல் தீயாக வழிந்தது.

அடிவாரத்தில் பல்லக்குக் காத்திருந்தது. போகிகள் முக்கால் களைப்பில் இருந்தார்கள்.

அவள் ஏறியதும் அவர்கள் தெலுங்கில் ரீங்கரித்துக் கிழக்கு நோக்கிப் பறந்தார்கள்.

சுவர்ணமுகியின் வலது கண் துடித்தது. அடிக்கடி திரையை விலக்கி வெளியே பார்த்தாள். கோவிந்தராசனின் கோபுரம் அவளை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தது.

கண்களில் ஈரம் மல்க, கோபுர திசையை அடிக்கடி வணங்கினாள்.

திருப்பதி எல்லை வந்தது. பல்லக்கு மாட வீதியில் புகுந்தது.

வெளியே எட்டிப் பார்த்த சுவர்ணமுகி, "நிறுத்துங்கள்!" என்று கட்டளை இட்டாள்.

பல்லக்கு நின்றது.

சரிவாக இறங்கி, ஒரு பிராணியைப் போல் தரையில் உட்கார்ந்தது.

"இதென்ன யாரையுமே காணவில்லையே!" என்றாள் அவள்.

பின்னால் பூங்கருவும் உய்யனும் ஓடி வந்தார்கள்.

சுவர்ணமுகி அந்த ராஜ வீதியில் நின்று மேற்கும் கிழக்குமாகப் பார்த்தாள்.

"என்ன இது! ஒருத்தரையும் காணவில்லையே!" என்றாள் ஆதங்கத்துடன்.

உய்யன் அவள் அருகில் வந்தான். அவன் கண்கள் சோகத்தில் சுருங்கின. எதையோ சொல்ல விரும்பாதவன் போல் சிறிதே தயங்கினான்.

பிறகு ஒரே ஒரு வார்த்தையை மட்டும் பயத்துடன் கூறினான்.

"பஞ்சம்."

சுவர்ணமுகியின் கண்கள் தூக்கின.

"பஞ்சம்?" என்றாள் அவள் கலக்கத்துடன். வெறுமையாக வீதியைப் பார்த்தாள்.

வீதி ஒரு வேதாள உலகக் காட்சி தந்தது.

வறண்ட புழுதி எங்கும் குவிந்திருந்தது.

செத்தைகளும் குப்பைகளும் சிதறிக் கிடந்தன.

வீட்டு வாயில்கள் பெருக்கப்படவே இல்லை.

கோலங்கள் அலங்கரிக்கும் பூமியில் இப்போது வெடிப்பின் ரேகைகள் படர்ந்தன.

தென்னைகள் மட்டை உதிர்ந்து நின்றன.

ஒரு வண்டி குடைசாய்ந்து கிடந்தது.

தூரத்தில் ஒரு மாடு இறந்து கிடக்க, அதைச் சுற்றி இரண்டு நோஞ்சல் காக்கைகள் வட்டமிட்டன.

வீடுகள் பூட்டியவாறு இறந்து கிடந்தன.

ஒரு ஜந்துவைக் காணோம்.

பல வருடங்களின் வறட்சியால் ஓடுகளும் சுவர்களும் வெளிறி நூற்றாண்டு கால முதுமையைக் காட்டின.

ஊரே ஒரு பாலைவன நடுவில் மாட்டிக் கொண்டது போல்,

மத்தியான வெய்யிலில் பொரிபட்டுக் கொண்டிருந்தது.

மலைமீது சில ஆட்களையாவது பார்க்க முடிந்தது. இங்கு அதையும் காணோம்.

சுவர்ணமுகி வீதியோடு நடந்தாள்.


மூலை திரும்பிக் கோவிந்தராஜர் கோவில் முன்னால் வந்தாள். அதன் ஆசார வாசல் மூடப்பட்டு இருந்தது.

கதவுப் பூண்கள் மேல் பெரிய சிலந்திகள் தொங்கின.

மாட்டினிக்கு லேட்டானதோடு
சாரலடிக்கும் பஸ் ஸ்டாப்பில்
பவுடர் கரைந்து போன
சோகத்தையும் தாங்கி நிற்கும்
காலேஜ் பாப்பா கவலை வேண்டாம்
காலைக்காட்சி நாளையுண்டு
கட் அடிக்க க்ளாஸுமுண்டு

போர்த்திய புடவைக்குள்
மெல்லியதாய் ஊடுருவி
உடம்பெல்லாம் நீவி விட்டு
உள்ளத்தைச் சிலிர்க்க வைக்கும்
மழைக்கால அனுபவங்கள்
நீர்தோய்ந்த மென்காற்றால்
நெஞ்சத்தை நிரப்பும் சுகம்
மாட்டினியில் கிடைக்காது
ஏட்டினிலும் இருக்காது

வருத்தங்களை மறந்து இப்போ
வானிலிருந்து இறங்குகின்ற
வசந்தங்களை நேசி
இறைவன்
வரிவரியாய் வழங்குமிந்த
கவிதைகளை வாசி



மழை

ஏ.ஏ.ஹெச்.கே.கோரி

கல் திண்ணை மீது அநேக குருவிகளின் சடலங்கள் சருகுகளாகத் தெரிந்தன.

''சுவாமி! இதென்ன அநியாயம்!'' என்று பொருமினாள் சுவர்ணமுகி. கண்கள் கலகலத்தன. நீர் கன்னங்களில் துள்ளியது. சொல்லப் போனால் அந்த ஊர் நான்கு ஆண்டுகளில் பார்க்கும் தண்ணீர் மழை அது.

''இதென்ன சாபமா? கடவுளின் கோபமா? நாட்டில் நடப்பதையெல்லாம்பார்த்து அவர் கண் மூடிவிட்டாரா? ஊருக்குப் பதில் பாழ் இருக்கிறதே! சுவாமி! சுவாமி!'' என்று புலம்பினான் அவன்.

மாட வீதியில் திரும்பினான்.

ராமானுஜர் ஜோடித்த ஊர் இது.

அவரே திட்டம் செய்து,

நாலு ராஜ வீதியும்,

ஒரு மாட வீதியும்

ஒரு சன்னதி வீதியுமாக உண்டு பண்ணிய ஊர் இது.

அந்த மகானின் பாதங்கள் பட்டுப் புனிதம் அடைந்த ஊர் இது.

அவர் செய்து கொடுத்ததைப் பாதுகாப்பதற்கு அறியாமல் மக்களும் மன்னர்களும் பாழ்படுத்தி விட்டார்களே! இந்த அநியாயம் எங்கேயாவது நடக்குமா?

மாட வீதியில் நுழைந்தான்.

ராஜ வீதியின் பிரதி பிம்பம் போல் இந்த வீதியும் இருக்க,

தூரத்தில் சின்னக் குச்சி நிழல்களின் நடமாட்டம் தெரிந்தது.

அருகில் போகப் போக அவை நிழல்கள் அல்ல, மிக எளிய ஜனங்களின் மெலிந்த உடல் கூடுகள் என்று தெரிந்தது.

மூன்று பரங்கியரைச் சுற்றி அவர்கள் நடைப் பிணங்களாக வியாபித்திருந்தார்கள்.

அருகில் போனதும் அங்கே நடக்கும் காரியம் அவனுக்குப் புரிய வந்தது.

அங்கே அடிமை வியாபாரம்நடந்துகொண்டிருந்தது.

ஏழை மக்கள் தங்கள் பிள்ளைகளை அந்தப் பரங்கியரிடம் பணத்துக்கு அடிமைகளாக விற்றுக் கொண்டிருந்தார்கள்.

ஏற்கனவே வாங்கப்பட்ட ஏழு பிள்ளைகள் அழுது கொண்டே பெற்றோர்களைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

இரு பரங்கியர் அவர்களைப் பிடித்து அடிக்கடி அதட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் பிள்ளைகளைத் தங்கள் கப்பல்களில் வேலை செய்வதற்காக அவர்கள் அழைத்துப் போனார்கள்.

அல்லது ஜாவாவிலும் மேற்கு நாடுகளிலும் அடிமைகளாக விற்பனை செய்து வந்தார்கள்.

இந்த வியாபாரத்தைப் பற்றி சுவர்ணமுகி கேள்விப்பட்டிருக்கிறாள்.

ஆனால் இப்போதுதான் நேரிடையாகப் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

அருவருப்புடன் மேலே செல்ல, பரங்கியர் தங்கள் வியாபாரத்தை முடித்து பிள்ளைகளுடனும், தங்களது வாட்ட சாட்டமான குதிரைகளுடனும் திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள்.

அவர்களால் நிராகரிக்கப்பட்ட பிள்ளைகளின் பெற்றோர்கள் அந்த வெள்ளையரைக்



பாரதியார் 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் உதவி ஆசிரியராயிருந்தபோது, குவளைக்கண்ணன் அவரைச் சந்தித்து வினவினார்.

''தங்களுக்கு எவ்வளவு சம்பளம்?''

''நூறு ரூபாய்'' என்றார் பாரதியார்.

''ஏ. ரங்கசாமி அய்யங்காருக்கு சம்பளம் எவ்வளவு?''

''அவருக்கு மாதம் ஆயிரம் ரூபாய்''

''தமிழ்ப்பாஷையில் தங்களைவிட அவர் கெட்டிக்காரரா என்ன? உங்களுக்கு மாத்திரம் என்ன 100 ரூபாய் அவருக்கு 1000 ரூபாய்?''

பாரதியார் சொன்னார்: ''தமிழ்ப் பத்திராதிபருக்கு மாதம் ஆயிரம் ரூபாய் சம்பளம் என்ற காலம் வந்தது பார்த்தாயா! அது பெருமையே தவிர, எனக்கு அவருக்கு என்ற கணக்கில்லை.''

-நன்றி: டி. வி. எஸ். செய்தி

—படித்தவர்: ஆர். ஸ்ரீனிவாசன்

கெஞ்சிக் கொண்டே குதிரைகளுடன் நடந்தார்கள்.

சுவர்ணமுகியைப் பார்த்த சிலர் அவளை அதிசயப் பொருள் போல் சில நேரம் பார்த்து, பிறகு மெதுவாக நிச்சயமில்லாமல் நெருங்கினார்கள்.

உய்யன் எச்சரிக்கு முன் அவர்கள் சுவர்ணமுகி மீது பாய்ந்து அவளது இரண்டு முத்து வடங்களை இழுத்தார்கள்.

முத்துக்கள் மண்ணில் சிதறி ஓட, அந்த ஜனங்கள் ஒரு மிருகத்தன சண்டை போட்டுக்கொண்டு அவைகளைப் பொறுக்குவதில் ஈடுபட்டார்கள்.

விலைகள் ஏக உயரங்களில் விற்றதால் மக்கள் வாங்கும் வகையில்லாமல் ஒரு மிருகமான மட்டத்துக்கு இறங்கி யிருந்தார்கள்.

உய்யன் ஓடிவந்து சுவர்ணமுகியை விடுவித்து, பல்லக்கில் திணித்து, போகிகளை வேகமாக விரட்டினான்.

ஊரைக் கடந்து பல்லக்கு வெளிச் சாலைக்கு வந்து விட்டது.

மத்தியான வெய்யில் எங்கும் தீ பொழிந்தது.

நிழலில்லாத சாலையில் பல்லக்கு போகிகளின் ரீங்காரத்துடன் போக,

உள்ளே சுவர்ணமுகி தன் கண்ணால் கண்ட காட்சிகளை எண்ணி வெதும்பிக் கொண்டிருந்தாள்.

உய்யன் அப்போது ஓடிவந்து. "அம்மா! தூரத்தில் ஒரு குதிரை வருகிறதே!" என்றான்.

சுவர்ணமுகி சட்டென்று கீழே குதித்து, ஒதுங்குவதற்கு இடம் இல்லாததால் பாதையிலிருந்து விலகி, பக்கத்து வயல் தரிசை மேல் பல்லக்கை நிறுத்தச் சொன்னாள்.

அவள் மனத்தில் அப்போது திகில் ஏற்பட்டது.

இதுவரை அவள் ஒதுக்கி வைத்திருந்த அந்தப் போர் நினைவுகள் மீண்டும் அவள் மனத்தில் தோன்றிவிட்டன.

அவளது விதியை நிர்ணயம் செய்யக் கூடிய சண்டை எட்டு நாழிகை தூரத்தில் நிகழ்ந்து கொண்டிருந்தது.

அதன் விளைவுகள் என்ன ஆகுமோ என்ற அச்சம்!

அடிக்கடி அதை மறக்க முயன்றாலும், அது பிரமாத வேகத்தோடு அவளைத் தேடி ஓடிவந்தது.

சண்டை!

அதன் முடிவு என்ன?

நல்ல முடிவு ஏற்பட வேண்டும் என்று திருமலையில் பிரார்த்தனை செய்துவிட்டு வந்திருக்கிறாள். கடவுள் கிருபை பண்ண வேண்டும்.

சாலையில் வருபவன் வேகமாக வந்தான்.

அவன் குதிரை குலுங்கும் விதம் அதன் உடல் சரியில்லை என்று காட்டியது.

நெருங்க, நெருங்க குதிரை மீது ஆத்திரமான வீரன் ஒருவன் உட்கார்ந்து விரைந்து வருவது தெரிந்தது.

அவன் ஆடைகளும் குல்லாயும் புழுதியில் பூத்திருந்தது.

முகம் வியர்வையால் நனைந்து மட்கிய இரும்பு போல் இருந்தது.

வேகமாக வந்தான் அவன்.

ஒரு விநாடி அவர்களைத் தாண்டிப் போய் விட்டான்.

பிறகு பல்லக்கைப் பார்த்துக் குதிரை லகானை வேகமாக இழுத்து நிறுத்த முயன்றான்.

அதுவரை தரித்து வந்த குதிரை அதற்கு மேல் எதுவும் பொறுக்காமல் சடரென்று பூமியில் விழுந்து இரண்டு முறை புரண்டு பிறகு நிரந்தரமாகக் கண்ணை மூடியது.

அதன் விலாவிலிருந்தும் கழுத்திலிருந்தும் ரத்தம் ஏராளமாக வழிந்திருந்தது.

வீரனும் கீழே விழுந்து ஒரு முறை புரண்டு, பிறகு வேதனை தாங்காத முகத்துடன் மேலே நிமிர்ந்தான்.

இதற்குள் சுவர்ணமுகி அவனை நெருங்கியிருந்தாள்.

வீரன் அவளைப் பார்த்ததும் எழுந்திருக்கப் பார்த்தான். முடியவில்லை. அப்போதுதான் அவன் மேலெல்லாம் காயங்கள் என்று தெரிந்தது. வலது கால் முட்டியிலிருந்து ரத்தம் வெள்ளமாக ஒழுகியது.

அந்தக் கால் ஜீவனற்றுத் தரையில் புரண்டது.

வீரன் அவளைப் பார்த்து – "தாங்கள் யார்? அது சுவர்ணமுகியின் பல்லக்கா?" என்றான் வேகமாக.

"ஐயா! இது சுவர்ணமுகியின் பல்லக்குத்தான்! நான் அவள் சேடி!" என்றாள் சுவர்ணமுகி.

"நல்லது. சுவர்ணமுகியிடம் சொல்லுங்கள் சண்டையில் அவள் தந்தை வீர மரணம் அடைந்தார்" என்றான்.

பிறகு நெஞ்சைப் பிடித்து அவன் கீழே சுருண்டான். (தொடரும்)



சினிமா நடிகர்களுக்கும் அரசியல்வாதிகளுக்கும் பல ஒற்றுமைகள் இருக்கின்றன.

ஒருவரையொருவர் தாக்கிக் கொள்வதன் மூலம் இருவருமே மக்களுக்கு 'என்டர்டெயின்மெண்ட்' அளிக்கிறார்கள்.

இருவரும் ஆடம்பரங்களில் வாழ்கிறார்கள்.

இருவருமே வருமானவரி கட்ட மறந்து போகிறார்கள்.

இருவரும் பத்திரிகைகளை வெறுக்கிறார்கள்; ஆனால் விளம்பரத்தை விரும்புகிறார்கள்.

இருவரும் மேடையில் நன்றாக நடிக்கிறார்கள்: மனப்பாடம் செய்ததை ஒப்பிக்கிறார்கள். (ஃபிலிம்பேர் கடிதம்)

- அர்ஜுனன்

ஸ்வீட் ஸெவன்டீன்!

பட்டப் படிப்பின் முதல் ஆண்டு, முதல் நாள், முதல் வகுப்பு. கல்லூரி ஆசிரியர் மூன்று age களை இணைத்துக் கூறியது :

"In this young age you should engage yourself in acquiring more knowledge"

- ஸ்ரீராம்





ரெஜினி கடிதம்

என்றும் பதினாறு
மார்க்கண்டேயன்
கல்கிக்கு இப்படி
கடிதம் எழுதினான்:
''ஸ்வீட் 16ஐ உட்டுட்டு
ஸ்வீட் 17 இன்னா வேண்டிகீது?
நான் ஒண்ணும்
எய்தக் கூடாதுன்னு
கெட்ட எண்ணம்
தானே நைனா?''



நடிப்பும் பதினேழு

நமக்கெல்லாம்
17 போய் 18 வரும்
ஆனால்
நடிகைகளுக்கோ
17 போய் 16 வரும்.

-எஸ். ப்ருந்தா

எனக்கு வயது 17. வயது மட்டுமல்ல; பிறந்த தேதி கூட 17தான். ஒருவேளை ஒரு வருடத்துக்கு 17 மாதங்கள் இருக்குமேயானால், நான் 17வது மாதத்தில் பிறந்திருப்பேனோ என்னவோ? நாளை 17ந் தேதி, காலை ஹிஸ்டரி ரிவிசன் எக்ஸாம். பிரயாசைப்பட்டுப் படிக்கிறேன். எண்ணமெல்லாம் கிரிக்கெட் காமெண்ட்ரி மீது. என் ஆர்வமும் அங்கே திசை திரும்ப அய்யோ... கவாஸ்கர் 17 ரன்னில் அவுட். எவன் எப்படியானால் நமக்கென்ன? மறுபடியும் புத்தகத்தைப் புரட்டுகிறேன். 1776ல் அமெரிக்க சுதந்திரப் பிரகடனம், 1789ல் பிரெஞ்சுப் புரட்சி, 1917ல் ரஷ்யப் புரட்சி அத்தனை புரட்சிகளும் இண்டியன் நியூஸ் ரீல் மாதிரி வரிசையாக வருகிறது. அட நம்ம புரட்சித் தலைவரின் அமைச்சரவையில் கூட 17 பேர்தான். 17ந் தேதி காலை எக்ஸாம் ஹாலில் நுழைகிறேன். 17வது கேள்வியைப் பார்க்கிறேன். கஜனி முகம்மது இந்தியாவின் மீது எத்தனை தடவை படையெடுத்தான்? எனக்கோர் ரஜனி ஞாபகம்தான் வந்தது. பதில் தெரியாமல் கேள்வி எண்ணை 17யே பதிலாக எழுதுகிறேன். எக்ஸாம் எழுதிவிட்டு வந்து வீட்டில் புத்தகத்தைப் பார்த்தால், 17தான் சரியான விடை என அறிந்ததும் மகிழ்ச்சியால் 17 தடவை துள்ளிக் குதிக்கிறேன். மறுநாள் வகுப்பறையில் நுழைகிறேன். ஹிஸ்டரி மாஸ்டரிடமிருந்து தேர்வுப் பேப்பர் என்னிடம் கைமாறுகிறது. மார்க்கைப் பார்த்ததும் ஒரே இன்ப அதிர்ச்சி. ஆம். ஸ்வீட் செவன்டீன்தான்!

-எஸ். வேலுச்சாமி



முன்கதைச் சுருக்கம்

சரித்திரத்தில் ஆரம்பித்து விசித்திரமாகப் போய் விட்டது அந்த ராஜராஜன் கிணறு விவகாரம். வஸந்த் சரித்திரப் பேராசிரியரின் மகள் இனியாவை இம்ப்ரெஸ் பண்ணப்போய் இதில் மாட்டிக் கொண்டான். பேராசிரியர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை சரித்திரத்தோடு சம்பந்தம் ஏதும் இல்லாத சில வெற்றுக் குண்டர்கள் லாவிக் கொண்டு போகிறார்கள். வஸந்த் அதை மீட்கப்போய் பல்லாவரத்தில் ஒரு சிறிய வீட்டில் ஏறக்குறைய உதை படுகிறான். கட்டுரை உக்கல் கிராமத்தில் இருக்கும் ஒரு புராதனமான ராஜ ராஜன் கிணற்றைப் பற்றியது. கணேஷின் கூர்மையான மூளைக்கு இதில் ஏதோ நிழலாக சமாச்சாரம் இருக்கிறது. ''வா அந்த கிராமத்துக்கே போய்ப் பார்க்கலாம்'' என்கிறான். அங்கே போனால் கோவில் வாசலில் ஒருவன் அவர்களை அணுகி ஏதோ சொல்ல, 'சதாசிவம்'என்று ஆரம்பிப்பதற்குள் முதுகில் கத்திக் குத்துப்பட்டு விழுகிறான். காஞ்சிபுரம் ஆஸ்பத்திரியில் உயிரை விடுகிறான். இனியாவும் பேராசிரியரும் சரித்திர ஆதாயங்களை மறு பரிசீலிக்க அங்கு வருகிறார்கள். அவர்களிடம் இப்போது வேலை சரியில்லை என்று சொல்லி அனுப்பிவிட்டு அந்த சதாசிவத்தைத் தொடர்ந்து மறுபடி உக்கல் வருகிறார்கள். சதாசிவம் அவர்களிடம் ஏதோ புரியாத வியாபாரம் பேசி, ஒரு பார்ஸலைக் காட்டுகிறான். நாற்பது கேட்கிறான் அது என்ன என்று தெரிந்துகொள்ள வஸந்த் சதாசிவத்தின் வீட்டுக்கு மறுபடி சென்றபோது சதாசிவம் வீட்டுக் கொல்லைப்புறத்தில் அடிபட்டு மயக்கமாகக் கிடப்பதைப் பார்க்கிறான். போலீஸிடம் சொல்ல இன்ஸ்பெக்டர் அவர்களைச் சந்தேகிப்பது தெரிகிறது. போதாக்குறைக்கு சதாசிவம் மயக்கம் தெளிந்ததும் என்னை அடித்துப் போட்டது கணேஷும் வஸந்தும் தான் என்கிறான். கணேஷ் இன்ஸ்பெக்டரிடம் நிதானமாகப் பேசி, தாங்கள் வந்த காரணத்தைச் சொல்லி, போலீஸுடன் இந்த விநோதமான கேஸில் ஒத்துழைக்கத் தன் விருப்பத்தைக் கூறி இன்ஸ்பெக்ட

வஸந்த்! வஸந்த்!

சுஜாதா



ரிடம் சமீபத்தில் அந்த ஊரில் வெளியூர் ஆட்களுடன் சம்பந்தப்பட்ட கேஸ்களை எல்லாம் காட்டச்சொல்கிறான். உடனே வஸந்தைக் கைது செய்யச் சொல்கிறான் இனி படியுங்கள்.

“14. நல்லகாலம் தப்பிச்சீங்க!”

வஸந்த் அசந்து போய், ''என்ன பாஸ்! ஸேம் ஸைட் கோல் போடறீங்களே? என்னை எதுக்கு அரெஸ்ட் பண்ணணும்?'' என்றான்.

''இந்தக் கிராமத்திலேயோ அல்லது சுத்து வட்டாரத்திலேயோ ஏதோ ஒரு கோஷ்டி ஏதோ ஒரு கெட்ட காரியம் செய்யறாங்க. நடக்கறது அல்லது நடக்கப் போறது என்னன்னு ஒருத்தருக்கும் தெரியாது. ஆனா நம்ம மேலே பழி போடற உத்தேசம் தெரியுது. சதாசிவத்துக்கு விஷயம் தெரியும். ஆனா நம்ம கிட்ட சொல்லப் பயப்படறான். அவனை நல்லாத் தட்டி வெச்சிருக்காங்க. அவன் இனிமேலக் காட்டிக் கொடுக்கிற வகையில் ஏதாவது தகவல் வெளியே சொன்னா அவனைத் தீர்த்துக் கட்டிடுவாங்க. அதுக்குப் பயந்துண்டு நம்ம மேலே பழி போட்டிருக்கான். அவன் சொன்னதைப் போலீஸ் நம்பிட்டாங்கன்னு அவங்களை நம்ப வைக்கணும். அதுக்காக உன்னை அரெஸ்ட் பண்ண மாதிரி காட்டி ஆகணும். என்ன சொல்றீங்க இன்ஸ்பெக்டர்?''

''நான் என்ன காரணத்தைக் காட்டி அரெஸ்ட் பண்ணணும்கறீங்க?''



''சும்மா ஒரு ஸஸ்பிஷன் பேர்ல வாரண்ட் இல்லாத அரெஸ்ட் பண்றதுக்கு உங்களுக்கு எத்தனையோ செக்ஷன் இருக்குதே. ஸி.ஆர்.பி. ஸியிலே 54, 55, 57, 66, 151,401.''

''பரவாயில்லையே? ஞாபகம் வெச்சருக்கீங்களே நல்லா.''

''அதானே தொழில்?''

''அதுவும் வஸந்தை அரெஸ்ட் பண்ணணும்னு எல்லா செக்ஷனும் ஞாபகம் வரும் நம்ம பாஸுக்கு!''

''வஸந்த்! நான் சொல்றதைக் கேளு. ராத்திரி நீ ஸ்டேஷன்லே இருந்தா ஸேஃப்புன்னு தோணுது. இன்ஸ்பெக்டர் உங்களுக்கு இஷ்டமில்லேன்னாக்கூட நியூஸென்ஸ் கேஸ்லயாவது இவனைப் பிடிச்சு உள்ள தள்ளுங்க. காலைல ரிலீஸ் பண்ணிடுங்க!''

இன்ஸ்பெக்டர், ''சரியான ஆளுய்யா நீ! என்ன வஸந்த் வரீங்களா?'' என்றார்.

''பாஸ் சொன்னா வரவேண்டியதுதான்.''

''அவன் லாக் அப்பில் இருக்க வேண்டாம். ஸ்டேஷன்லே படுத்தாப் போதும்!''

''சார்! சோறு கிடைக்கும் இல்லே?''

''கவலைப்படாதீங்க. நீங்க நம்ம கெஸ்ட்! கொஞ்சம் இருங்க. சதாசிவத்தைப் பார்த்துட்டு வந்துடறேன்.''

''தவறும வஸந்த் கைது பண்ணப்பட்ட விவரத்தை அவன் கிட்டச் சொல்லுங்க, அப்புறம் ஆளை விட்டுடுங்க. அவன் வீட்டுக்குப் போயிரட்டும்!''

''நீங்க ஏதோ பிளான் வச்சிக்கிட்டுத்தான் செயல் படறீங்கன்னு தோணுது.''

''ஆறு என்னன்னு சொல்ல மாட்டார்! இருக்கிறவங்களை யெல்லாம் ஜெயிலுக்குப் போ, உடம்புக்கு நல்லதுன்னு சொல்லுவாரு! கேள்வி கேட்காமப் போகணும்!''

''வஸந்த்! காலைல விவரமாச் சொல்றேன். நான் சொல்றபடி கேளு என்ன?''

''ஜெயிலுக்குப் போறது போறேன். சின்னதா ஒருடிராமா ஆடிட்டுப் போறேனே?''

வஸந்த் கண்களில் எச்சில் தொட்டுக் கொண்டான். ''அய்யா என்ன இப்படி அபாண்டமா என் மேலே பழி போட்டுட்டீங்களே! ஏங்க நானா அந்தாளை அடிச்சேன்? நேரே என் கண்ணைப் பார்த்துச் சொல்லுங்க'' என்றான்.

சதாசிவத்தைச் சுட்டிக் காட்டி, ''எல்லாம் நீதான் அடிச்சதுன்னு அவர் ஸ்டேட்மெண்ட் கொடுத்திருக்காரே!'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''அய்யய்யோ அப்படிப் பொய் சொல்லாதீங்க. என்னை அரெஸ்ட் பண்ணாதீங்க! எனக்கு வேற கதி கிடையாதுங்க. நான் நல்ல குடும்பத்தில பிறந்தவன்! இதுவரைக்கும் என் வம்சத்திலே யாரும் ஜெயிலுக்குப் போனதில்லை ஸார். வேண்டாம் ஸார்... நான் இல்லை, நான் இல்லை.''

வாசலில் சின்னக் கூட்டம் கூடிவிட 'என்னங்க தகராறு, என்னங்க ஆச்சு' என்று கேள்விகள் எழ ''ஒண்ணுமில்லை. ஏதோ அடிதடி. பட்டணத்துக்காரர்களைக் கைது பண்ணிக்கிட்டுப் போறாங்க. அதுல கொஞ்சம் கலாட்டா.'' என்றனர்.

''காலைல கத்திக் குத்தைப் பத்தி ஏதும் கண்டு பிடிச்சாங்களா?''

''அப்படித்தான் தெரியுது. இவங்கதான் போல இருக்கு. அதான் அரஷ்ட்டுப் பண்ணிட்டாங்க!''

கணேஷுக்குச் சிரிப்பு வந்தது. கஷ்டப்பட்டான். காரில் ஏறிக் கொண்டு ''குட்பை வஸந்த்! ஸ்வீட் ட்ரீம்ஸ்!'' என்றான்.

வஸந்த் அப்படியா சேதி என்று முறைத்தான்.

கணேஷ் காரில் சற்று நேரம் யோசித்தான். ராத்திரிச் சாப்பாடு எங்கே? தங்கல் எங்கே? அங்கிருந்த ஒரு பெட்டிக் கடையில் நிறுத்தி விசாரித்தான். ''பட்டணங்களைப் போல தங்கற ஓட்டல் எல்லாம் கிடையாதுங்க. ஆறு மடவிளாகத்துக்குப் பக்கத்திலே ஒரு வீட்டில ராத்தங்கறத்துக்கு சௌகரியம் பண்ணிக் கொடுப்பாங்க. வீட்டுச் சொந்தக்காரங்க வடக்க இருக்காங்க. எதித்த வீட்டுக்காரங்கதான் சாவி வச்சிருக்காங்க. அவங்ககிட்ட கேட்டீங்கன்னா ஒதவிபண்ணுவாங்க.''

''சரி, ரொம்ப தாங்க்ஸ். சாப்பிட ரொட்டி ஏதாவது இருக்குங்களா?''

''ரொட்டி கொஞ்சம் பளசா இருக்குங்க. பன்னு தரட்டுமா இனிப்பா இருக்கும்.''

கணேஷ் அகப்பட்டதை வாங்கிக் கொண்டு அந்த மடவிளாகம் முகவரியை நோக்கிப் போனான்.


''வீட்டுச் சாவிதான் எங்கிட்ட இருக்கு. ஓனர் கிட்டச் சொல்லாத வரைக்கும் நீங்க ராத்திரி படுத்துக்கலாம். திண்ணைல படுங்க. கொஞ்சம் கொசுப் பிடுங்கும். பன்னண்டு மணியளவிலே காத்து வரும்.''

கணேஷ் காரைக் கோயில் ஓரத்தில் நிறுத்தி பூட்டிவிட்டுத் திரும்ப அந்த வீட்டுக்கு வந்து சற்று நேரம் வாசலில் போட்டிருந்த கயிற்றுக் கட்டிலில் உட்கார்ந்து கொண்டு பன் சாப்பிட்டான். ''இந்தாங்க பாலு'' என்று கோர்டேக்கரின் மகள் கொண்டு வந்து கொடுத்தாள். அந்தப் பெண் சந்திர ஒளியில் கொஞ்சம் தேவதைத்தனத்துடன் இருப்பதை மனதோரத்தில் கவனித்த கணேஷுக்கு வஸந்தின் ஞாபகம் வந்தது. இந்நேரம் அவள் குலம் கோத்திரம், ஏன் மார்பளவைக்கூட விசாரித்திருப்பான். பாவம், வஸந்தை ஸ்டேஷனில் மாட்டி விட்டு வந்து விட்டேன். இருந்தும் இந்தச் சந்தர்ப்பத்தில் அந்தச் செயல் ஏனோ அவனுக்கு அவசிய

'காலையில் வந்து ரவாதோசை ஆர்டர் செய்தேன். இப்போது மத்தியானம் ஆகி விட்டது. இன்னும் தோசை வரவில்லை. என்ன செய்யப் போகிறீர்கள்?''

'அறை நான் லாட்ஜிங் சார்ஜ் போடுகிறேனே!''

-பிரியாபாலு



மாகப் பட்டது. ''வேற ஏதாவது வேணுங்களா?'' என்று அந்த மகள் கேட்டாள்.

''ஒரு தலையணையும் பெட்ஷீட்டும்'' என்றான். திண்ணையில் படுத்திருந்தவன் திடீரென்று எழுந்தான். ஏதோ யோசித்தான். பின் இரவில் நிலவொளி பால் கொட்டிக் கொண்டிருந்தது. வீதியே அமைதியாக இருக்க கணேஷ் எழுந்தான். தலையணையைத் திண்ணைக்குக் குறுக்கே அமைத்து விட்டு அதை பெட்ஷீட்டால் மூடினான். சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தால் ஆள் படுத்துக் கொண்டிருப்பது போலத் தோன்ற வைத்துவிட்டு அந்த இடத்தை விட்டு நழுவிப் போலீஸ் ஸ்டேஷனை நோக்கிச் சென்றான்.

நிலையத்தில் ஒரு பல்ப் சோம்பேறித்தனமாகக் காற்றில் ஆடிக் கொண்டிருக்க இன்ஸ்பெக்டரைக் காணவில்லை. கான்ஸ்டபிள் மட்டும் பெஞ்சில் உட்கார்ந்த நிலையில் கண்ணயர்ந்து கொண்டிருந்தார். வஸந்தைக் கைது செய்யவில்லை என்று தெரிந்தது. அவன் இன்ஸ்பெக்டர் அறையில் ஃபேனைப் போட்டுக்கொண்டு நிம்மதியாகத் தூங்கிக் கொண்டிருந்தான். அவனருகில் சென்று கணேஷ் அவனை எழுப்பினான்.

''என்ன பாஸ் இந்நேரத்தில?''

''ஷ்! நானும் இங்கதான் படுத்துக்கப் போறேன்..''

''ஏன்? ஒட்டல்ல இடம் கிடைக்கலையா?''

''ஒட்டலா? இந்த ஊர்ல ஒட்டல் எது? ஒரு வீட்டுத் திண்ணையில எடம் கொடுத்தாங்க. படுத்தேன். ஆனா அங்க இருப்புக் கொள்ளலே. உன்னை இங்க அனாவசியமா சேர்த்துவிட்டு வந்திருக்கோமே என்ன கஷ்டப்படறியோன்னு வந்துட்டேன்.''

''எனக்காகப் பச்சாதாபப்பட்டு வந்திருக்கீங்கன்னு சொன்னா அது பரம ரீல்! நான் நம்பலே.''

''வஸந்த்! அந்த காளிதாஸ்ங்கற ஆளைப் பாக்கணும்.''

''எந்த காளிதாஸ்?''

''அதான். பஸ் ஸ்டாண்டிலே பெட்டியைப் பறி கொடுத்துத் திரும்பப் பெற்ற தைல ஸாம்பிள்!''

''ஓ! அவரா? அவரு தஞ்சாவூர் அட்ரஸ்ல கொடுத்திருக்கார்?''

''பொடி நடையாப் போய்ப் பார்த்துட்டு வந்துரேன்.''

''சரிதான். ஒண்ணு ஜெயிலுக்குப் போங்கறீங்க இல்லே தஞ்சாவூருக்கு... காஞ்சி ஜில்லாவிலிருந்து ஆபரேஷன் தஞ்சாவூருக்கு ஷிப்ட் ஆறதா? ஆமா எதுக்கு திடீர்னு காளிதாஸ் மேலே ஈடுபாடு?''

''அந்த ஆசாமி கிட்டயும் வியாபாரம் பேசியிருக்காங்க. அதே பத்துக்கு நாப்பது ஞாபகம் இருக்கா? சதாசிவம் நம்ம கிட்ட பேசினபோதும் பத்து. நாப்பது இந்த ரேஞ்சிலதான் பேசினான். வியாபாரம் ஒண்ணுதான்.''

''எனக்கென்னவோ காளிதாஸ்ங்கறவன் இதில தன்னை அறியாமக் கலந்து போயிட்ட ஆசாமிதான்னு படுது.''

''அது சரிதான். எனக்கு அவங்கிட்ட இருந்து முக்கியமாத் தெரிய வேண்டிய தகவல்... ம்ஹூம். அது காளிதாஸ் கிட்ட இருந்து கிடைக்காது. இங்க உக்கல்லதான் கிடைக்கும்.''

''நீங்க பேசறது பூரா ஜென்னு இருக்கு.''

''இருக்கலாம். கிணறு, பார்ஸல், கூழமந்தல் ஆர்க்கியாலஜி டிப்பார்ட்மெண்ட் காவல்காரன், பேராசிரியர், இனியா, சதாசிவம், அவன் சொன்ன பொய், ம்ஹூம் திரெட்டே இல்லியே. சீட்டுக்குச் சீட்டு சம்பந்தமே இல்லியே!''

''ஸ்கூட் பண்ண வேண்டிய கை பாஸ்! நான் சொல்ற கதை வசனம்தான் சரிப்பட்டு வரது. எல்லாரும் சேர்ந்துண்டு விலை உயர்ந்த சிலையை விக்கறாங்க. அதுக்குக் குறுக்கேதான் நாம வந்துட்டோம். அல்லது கடத்திக்கிட்டுப் போறாங்க.''

''விலை உயர்ந்த சிலைன்னா அதுக்கு சரித்திர பூர்வமான ஆதாரம் இருக்கும். இந்த வட்டாரத்தில் அந்த மாதிரி சிலை இருந்தா நிச்சயம் பேராசிரியருக்குத் தெரிஞ்சிருக்கணும்''

''பேராசிரியரையும் சதாசிவத்தை மாதிரி பயம் காட்டி வெச்சிருக்காங்களோ என்னவோ.''

''இருக்கலாம்.''

''இருக்கலாம என்ன? வேற ஒரு பாஸிபிளிட்டியும் எனக்குத் தென்படலே.''

''எனக்கு வேற சில சாத்தியங்கள் தோன்றது.''

''உதாரணமா?''

''எல்லாத்தையும் இப்பச் சொல்லக்கூடிய நிலையில்லே. படுத்துத் தூங்கு.''

காலை இருவரும் இன்ஸ்பெக்டரால் எழுப்பப்பட்டனர்.

''என்ன கணேஷ்! இங்க இருக்கீங்க! நான் தேடிக்கிட்டிருக்கேன்''

''எதுக்கு?''

''நல்ல காலம் தப்பிச்சீங்க கணேஷ்!''

''என்ன விஷயம்?''

''நீங்க படுத்திருந்த திண்ணை மேலிருந்த தலையணையை ஆளுன்னு நினைச்சு கட்டுக்கத்தியால் குத்திட்டுப் போயிருக்கான் ஒருத்தன். நல்லவேளை தப்பிச்சீங்க. இல்லே, இந்நேரம் நீங்க காலி.''

(தொடரும்)




அவன்: ''மடையன்! அயோக்கியன்' சகோதர ஊழியர்களை நம்பாத சந்தேகப் பேர்வழி!''

இவன்: ''யாரைடா திட்டறே.?''

அவன்: ''டெஸ்பாட்ச் ராமசாமியைத்தான்! தினசரி பூட்டுப் போட்டுப் பூட்டிய டிபன்பாக்ஸில் ஆபீஸுக்கு டிபன் எடுத்துட்டு வர்றானே..?!''

-உ. ராஜாஜி


நடந்து வந்த பாதை

பாக்கியராஜ், 92c, தேனாம்பேட்டை!

ஒவ்வொரு கலைஞரும் தாம் நடந்து வந்த பாதையை நினைவில் கொள்ள வேண்டும் என்று எல்லோரும் சொல்வார்கள். நமது நட்சத்திரங்களை அப்படி நினைக்க வைக்க விரும்பினோம். அதற்காக அவர்கள் சென்னைக்கு வந்த புதிதில் அல்லது படத் துறைக்கு வந்த புதிதில் வசித்த வீட்டுக்கு அவர்களை அழைத்துச் சென்று பழைய நினைவுகளைக் கிளறினோம். இதோ! கிடைத்தன பல புதிய விஷயங்கள்:

தேனாம்பேட்டையில் 92-சி என்றாலே பலருக்குத் தெரியும். அவ்வளவு புகழ் பெற்றது! இங்கு மிகச் சிறிய அறைகள் பல உள்ளன. நடிகராவதற்கு முன் இங்குதான் வசித்து வந்தார் பாக்கியராஜ். காரை விட்டு அவர் இறங்கிய உடனேயே உற்சாகமான வரவேற்பு. "என் சார் வரதேயில்லே?" என்ற அங்கலாய்ப்பு. "நம்ம ரூம் பூட்டியிருக்கா, திறந்திருக்கா?" எனக் கேட்டவாறே குனிந்து வளைந்து வாசற்படியைத் தாண்டி உள்ளே சென்றார் பாக்கியராஜ். "பெரிய அயர்ன் சேப்பா என்ன? திறந்து விட்டால் போச்சு!" இப்படிக் கூறிக் கொண்டே ஒருவர் முன்னாளில் பாக்கியராஜ் இருந்த அறையைத் திறந்தார்.


உள்ளே நுழைவதற்கு முன் கதவிலிருந்த பெயர்ப் பலகையைப் பார்த்தார் பாக்கியராஜ். "கோலப்பன் — சினிமா டைரக்டர்" என்றிருந்தது. அவர் அதைப் படித்தவுடன் எல்லோரும் 'கொல்' என்று சிரித்தார்கள்.


✱ காற்றோட்டமுள்ள இடம்தான், இல்லையா?

சிரிப்பு மறையு முன்னே பாக்கியராஜ் அறையினுள்ளே சென்று அங்கிருந்த ஒரு பாயைத் தாமே எடுத்துப் போட்டுக்கொண்டு அமர்ந்தார். "ஒண்ணும் மாறவேயில்லே. அப்படியேதான் இருக்கு. இந்தப் பாயும், இந்தப் பெட்டியும் கூட என்னுடையதைப் போலவே இருக்கு!" என்று கூறிவிட்டு என்னைப் பார்த்து,

"இந்த அறையின் சொந்தக்காரர் இதோ இவர்தான். பெயர் சாமி. இவரிடம் அனுமதி கேட்டு இங்கு வாடகைக்கு இருப்பவர்தான் கோபாலகிருஷ்ணன். எனக்கு வேலையில்லாத அந்தக் காலத்தில் இந்த அறையைத்தான் நான் பங்கு போட்டுக் கொண்டேன். இங்கு உட்கார்ந்துதான் சிவப்பு ரோஜாக்கள், பதினாறு வயதினிலே, கிழக்கே போகும் ரயில், ஏன், சமீபத்திய கன்னிப் பருவத்திலே ஆகிய எல்லா வசனங்களையும் எழுதினேன்.

"இந்த அறை ரொம்ப ராசியான அறை. இந்த அறையில் தங்க ஒரு போட்டியே நடக்கும்! நான்தான் சார் இந்த சாமி படங்கள் எல்லாம் கையில காசு கிடைக்கும் போது ஒவ்வொண்ணா வாங்கி வச்சேன். இரவு நிம்மதியாகத் தூங்க முடியாது. காரணம் மூட்டைப் பூச்சிகள். ஓரளவாவது தொந்தரவில்லாமல் படுக்க வேண்டுமென்றால் மத்தியானத்திலிருந்தே மெழுகுவர்த்தியைக் கையில் பிடித்துக் கொண்டு சுவரிலிருக்கும் ஒவ்வொரு ஓட்டையினுள்ளும் அனலைச் செலுத்தி மூட்டைப் பூச்சிகளை அழிக்க வேண்டும். இப்பவும் அப்படித் தானே?" என்று கேட்கச் சுற்றியிருந்த நண்பர்கள் தலையாட்டுகிறார்கள்.





⌘ ''என் ஆரம்பகால ஆலயம்''

இதற்குள் பாக்கியராஜுக்கு டீ வருகிறது. ''நம்ம வாசக் கடை டீதானே?'' எனக் கேட்டு ருசித்துச் சாப்பிட்டபடியே வெளியே வந்து விடுகிறார். டீக்கடைக் காரரைக் குசலம் விசாரித்துவிட்டு ''வெய்யில் காலத்தில் இதுதான் சார் என் ''ஏர் கண்டிஷன் படுக்கை அறை'' என்கிறார் என்னைப் பார்த்து. அவர் சுட்டிக் காட்டிய இடம் மௌண்ட் ரோட்டின் பிளாட்பாரம் தான்! திக்கென்றிருந்தது எனக்கு. என் உணர்ச்சிகளைப் புரிந்து கொண்டாரோ என்னவோ பாக்யராஜ், ''ஆமாம் சார், இங்கும் படுத்தவாறே யோசிப்பேன். பல வசனங்கள் கற்பனையில் இங்கு உருவாகியிருக்கின்றன.'' என்றார். தொடர்ந்து, ''எனது அறையின் எதிர் அறையில்தான் அவ்வப்பொழுது கவுண்ட மணி வந்து பார்த்து விட்டுப் போவார். அறிமுகமாகி இரண்டு பேருமே வேலை இல்லாதவர்கள் என்ற ஒற்றுமையில் ஆரம்பித்துப் பின்னர் நெருங்கிப் பழகினோம். கலைத் துறை சம்பந்தப்பட்ட பலர் இங்கு தங்கிவருகிறார்கள். பலருக்கு எனது குழுவிலேயே இடம் அளித்திருக்கிறேன்.'' என்று ஒவ்வொருவராக ''இவர் நடிகர். இவர் ஆர்ட் டைரக்டருக்கு உதவியாளர்'' எனக் கூறிக் கொண்டே வந்தார் பாக்கியராஜ்.

இருபது வருடங்களாக அந்த வீட்டில் வாழ்ந்து அதனுடன் ஒன்றியிருக்கும் ஜெயராமன் பாக்கியராஜை வந்து வரவேற்க, நான் ஜெயராமனிடம் பேச்சுக் கொடுத்துப் பாக்கியராஜைப் பற்றிக் கேட்டேன்.

''கேளுங்கள், கேளுங்கள்! பாக்கியராஜ் இரவில் குடித்துவிட்டு வந்து சத்தம் போடுவாரா? என்று கேளுங்கள்!'' என்றார் பாக்கியராஜ் சிரித்தபடியே.

''இப்ப எப்படியோ தெரியாதுங்க. அப்ப எந்நேரமும் எழுத்துத்தான் வேலை. வேறு எண்ணமே இருக்காது!'' என்றார் ஜெயராமன்.

''உண்மைதான். எனக்கு வாழ்க்கையிலே எப்படியாவது முன்னேறணும் என்ற ஒரே நினைப்புத்தான் அன்று இருந்தது. இன்றும் இருக்கிறது. மது போன்ற பழக்கங்கள் எனக்கு இன்றும் இல்லை; நாளையும் ஏற்படாது'' என்றார் பாக்கியராஜ்.

பேட்டி : சலன்

புகைப்படம் : 'சுபா' நாகையா

⌘ உழைப்புக்கிடையில் சிறிது ஓய்வு. பாக்கியராஜ் நண்பர்களுடன்





T.A/DCM/801/Tam

பதிலில் ஒரு புதுயுகம்

கீதா பென்னெட்

"இன்னும் ஒரு தடவை"—சதீஷின் குரல் வேண்டுகோளாய் ஒலித்தது. அந்த நான்கு வயதுச் சிறுவனுக்குச் சரியாகப் பந்தைத் தூக்கிப் போட்டு ஆடிக் கொண்டிருந்த மோகனை ஒரு கணம் உற்றுப் பார்த்தாள் வனஜா.

ஜன்னல் கதவைச் சாத்திவிட்டு அங்கேயே நாற்காலியில் உட்கார்ந்தாள். இந்த மாதிரி விளையாடுவதற்காகவாவது ஒரு ஆண் மகன் தேவையாய் இருக்கிறதே! என்னதான் அவள் சதீஷுடன் நேரத்தைச் செலவழித்தாலும், அவன் இது போல் உற்சாகமாய் இருப்பதில்லை. மோகனை நினைக்கும்போது அவள் மனம் நன்றி நவின்றது.

ராஜசேகர் இருந்தால் அப்படித்தான் விளையாடுவாரோ? அவனை நினைத்த கணத்தில் அவள் கண்களில் நீர் நிறைந்தது. இவ்வளவு சிறிய வயதில் விரைவாய் அவன் உயிரைக் கவர இறைவனுக்கு எப்படி மனம் வந்தது? மிக நல்லவர்கள் மிகச் சிறிய வயதிலேயே இறந்து விடுவார்களாமே? ஏன் நல்லவனாய் இருந்தாய் சேகர்?

"ஏம்மா, வனஜா! ஏன் இப்படித் தனியா உட்கார்ந்திருக்கே? சுவாமி விளக்கை ஏத்து" — ராமசுவாமி உள்ளே நுழைந்து குரல் கொடுத்தபோது அவள் சுய நினைவுக்கு வர முயன்றாள். அவர் கால்களைக் கழுவிக் கொண்டு சாயந்திர வேளை பூஜையை ஆரம்பித்து விட்டார். அவள் அவரருகே போய் அமர்ந்து கண்களை மூடிக்கொண்டாள்.

ராமசுவாமி கணீரென்ற குரலில் சுலோகம் சொல்ல ஆரம்பித்தபோது, அவள் மனம் அதில் ஒருசில கணங்களே நிலைத்தன. ராஜசேகரும், அந்த இனிய நாட்களும் நினைவுத் திரையில் ஊர்வலம் வந்தன.

தாயில்லாமல் வளர்ந்ததால் வனஜாவுக்குச் செல்லம் அதிகம். வைதிகக் குடும்பம். இருந்தாலும் ராமசுவாமி அவளுக்கு நிறையவே சுதந்திரம் கொடுத்தார். சிறு வயதிலேயே அத்தனை சுலோகங்களையும் ராகம் போட்டுப் பாடுவாள். ஆறு வயதில் 'பாவயாமி'யை ராகமாலிகையில் பாடுவதைக் கேட்டு அந்தத் தெருவே வாயைப் பிளக்கும். படிப்பிலும் சுட்டி. வயது ஆக ஆக அவள் அழகும் கூடிக் கொண்டு போனபோது, "அம்பிகே! நல்லவனாய் ஒருத்தன் கையிலே குழந்தையை ஒப்படைச்சுடும்மா" என்று பெருமூச்சு விட ஆரம்பித்தார்.

ஸ்காலர்ஷிப்பில் அவள் பள்ளி முடித்து, கல்லூரியிலும் சேர்ந்து படிக்க ஆரம்பித்த



போதுதான் அந்த ''நல்லவன்'' அவள் கண்களில் பட்டான்.

எல்லாக் கல்லூரிகளும் சேர்ந்து நடத்தும் விழா. வகை வகையாய் மாணவர்கள், மாணவிகள். கர்நாடக சங்கீதப் போட்டியில் வனஜாவும் உண்டு.

அவள் மேடையில் வந்து அமர்ந்தபோது நீதிபதிகளை மறந்தாள். மாணவக் கூட்டத்தை மறந்தாள். கண்களை மூடிக் கொண்டு அவள் ''தாரிணி...'' என்று ஆரம்பித்துப் பாடியபோது பாப் இசையையும் டிஸ்கோவையுமே சங்கீதம் என்று நினைத்துக் கொண்டிருந்த அந்த இளைஞர்கள் அமைதியானார்கள்.

அவள் மேடையை விட்டு வெளியே வந்தாள். அழகான அந்தப் பாடலினால் மனம் ஒருவித அமைதியில் ஆழ்ந்திருந்தது.

''கங்கராஜுலேஷன்ஸ் மிஸ்....'' —எதிரே பற்கள் பளீரென்று வெண்மையிட, டீஷர்ட்டில், புஷ்டியான மேனியில் நின்றிருந்தவனை அவள் ஒரு நிமிடம் ஏறிட்டுப் பார்த்தாள்.

''கர்நாடக சங்கீதம் இவ்வளவு இனிமையானது என்று நான் நினைக்கவில்லை. என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்...'' அவன் பேசியது புகழ்ச்சிக்காகச் சொன்னது மாதிரி இல்லை. ஒருவித யோகத்தில் ஆழ்ந்த மாதிரி வெளிவந்தன அவன் வார்த்தைகள்.

விழா முடிவடையப் போகிறது. மாணவர்கள் கையைத் தட்டிக் கோஷம் போட்டார்கள். ''வி வாண்ட் ராஜ சேகர்....''

அவள் புரியாமல் என்னவென்று மேடையை எட்டிப் பார்க்க முயன்றாள்.

ராஜசேகர் — வெண் பற்கள் — டீஷர்ட்— கிடாருடன் மேடைக்கு வந்தான்.

மாணவர்களின் நேயர் விருப்ப முழக்கத்துக்குப் பின் அவன் கிதாரின் பிரடைகளை முடுக்கி, சுருதி சேர்த்துக் கொள்ள ஆரம்பித்தான்.

ஒரே நிசப்தம்.

மிக சுத்தமான சுருதியில் கிதார் ஒலிக்க ஆரம்பித்தது. ஸ்பஷ்டமான அமெரிக்கன் ஆங்கிலத்தில், நின்று கொண்டு மைக்ரோஃபோனின் மலைப் பாம்புத் தலையின் அருகே உதடுகளைக் குவித்து அவன் பாட ஆரம்பித்தான்.

வனஜா ராஜ சேகரையே கண் கொட்டாமல் பார்த்தாள். அந்த நிகழ்ச்சி முடிந்தபோது அவனே அவளைத் தேடி வந்தான்.

''வெஸ்டர்ன் மியூஸிக் இவ்வளவு இனிமையானது என்று நான் நினைக்கவில்லை. என் வாழ்க்கையில் மறக்க முடியாத நாள்...!''— அவள் சொல்லியபோது அவன் அருவியாய்ச் சிரித்தான். அவன் மருத்துவக் கல்லூரி மாணவன் என்று அறிந்து கொண்டாள்.

அதன் பின் அவர்கள் அடிக்கடி சந்திக்க ஆரம்பித்தார்கள். எல்லாம் தற்செயலாக நிகழ்ந்தது என்றுதான் அவள் நினைத்திருந்தாள். ஆனால் முதன் முறையாகத் தமிழ் வகுப்பை 'கட்' பண்ணிவிட்டு அவனுடன் மோட்டார் பைக்கில் காந்தி மண்டபம் வந்த அன்று அவன் குட்டை உடைத்தான். அவள் அழகும் பாட்டும் அவன் மனத்தை விட்டு அகலவே இல்லையாம்.

இருவருக்கும் பரஸ்பரமாய்த் தோன்றிய அன்பு, ஏதோ ஒரு நாளில் ஏற்பட்டதாய்த் தோன்றவில்லை. சேகர் இல்லாமல் வாழ முடியாது! அந்தணர்களிலேயே உள் ஜாதி பார்க்கும் இந்தக் காலத்தில், ஒரு கிறிஸ்துவனை மணக்க ராமசுவாமி விடுவாரா? அவள் சேகரைப் பார்க்காமல் கொஞ்ச நாட்கள் இருக்க முயன்றாள். அவனை மறக்குமா இந்த நெஞ்சம்?

ஒரு புதனன்று மாலை அப்பா பூஜை அறையில் சுலோகம் சொல்ல, அவள் பக்கத்தில் அமர்ந்து கண்களை மூடிக் கொண்டு மனமாரப் பிரார்த்தித்தாள். ''ராஜசேகரை என்னோடு இணைத்து வையேன்...''

அப்போது வாசலில் வந்து நின்ற மோட்டார் பைக்கின் ஒலி அவளுக்கு மிக பழக்கமானது. வாசற்படியில் தலை இடிக்காமல் குனிந்து உள்ளே நுழைந்தான் சேகர்.

ராமசுவாமி மிகவும் கத்தியதும், சேகர் விடாப் பிடியாக வனஜாவைக் கல்யாணம் பண்ணிக் கொடுக்கும்படி கேட்டதும்... எத்தனையோ வருடங்களுக்கு முன்னால் நடந்தது போல் இருக்கிறது.


அவருக்கும் தெரியாமல் அவனுடன் எழும்பூர் மாதா கோவில் ஒன்றில் மோதிரம் மாற்றிக் கொண்டு ரிஜிஸ்தர் ஆபீஸுக்கும் போனபோதுதான் ராமசுவாமிக்கும் அவளுக்கும் தொடர்பு விட்டுப் போனது.

அந்த ஒரு குறை மட்டும்தான் வனஜாவுக்கு. மண வாழ்க்கை இவ்வளவு இனிமையானதா? அதனால்தான் 'ஷார்ட் அண்ட் ஸ்வீட்'டாக முடிந்து விட்டதா?

அவன் எளிமையானவன், மிக நல்லவன் என்று அவளுக்குப் புரிந்தது. அவன் மனம் நோகாமல் நடந்து கொண்டான்.

பிப்ரவரி மாதம் 29ந்தேதி பிறந்தவர்களுக்கு நான்கு வருடங்களுக்கு ஒருமுறைதான் பிறந்ததினம் வருகிறது என்று வருந்துகிறோம். 2000-ம் வருடத்தில் பிப்ரவரி மாதத்திற்கு முப்பது நாட்களாம். 30-2-2000 அன்று பிறப்பவர்கள் பிறந்த நாளே கொண்டாட முடியாது! ஆயிரம் ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் பிப்ரவரி மாதத்திற்கு 30 நாட்கள் வருமாம்.

-பிரியா பாலு



எல்லாவற்றுக்கும் அவர்கள் சங்கீதம் ஒரு பாலமாக அமைந்தது. அவளை 'ஸரஸ ஸாம தான' பாடச் சொல்லி அவன் கிடாரில் கார்ட்ஸ் (Chords) கண்டு பிடிப்பான். அவளை பைக்கின் பின்னால் உட்கார வைத்து ஊர்வலம் வருவான். அவனுக்காக மரக்கறி மட்டும் சாப்பிட ஆரம்பித்தாள். அம்மா அப்பா இல்லாமல் அத்தனை சிறிய வயதில் தன் முயற்சியாலேயே டாக்டரானவனுக்குப் பிடிவாதம் அதிகம் என்று உணர்ந்தாள். அந்தப் பிடிவாதக்காரன் சதீஷுக்குத் தந்தையான அன்று அவளை ஒரு தாயாய்க் கவனித்துக் கொண்டது இன்னும் அவளுக்கு ஞாபகம் இருக்கிறது.

பூஜை மணி 'கணகண' என்று ஒலித்த போது, வனஜா கனவுகளிலிருந்து மீண்டாள். சாம்பிராணிப் புகை, ஊதுவத்தி மணம்! சுவாமி விளக்கு! அப்பாவைப் பார்க்க அவளுக்குப் பாவமாக இருந்தது. சேகரோடு வாழ்ந்த நாட்களில் பராமுகமாக இருந்தவர், மோட்டார் பைக் விபத்தில் ஒரு நிமிடத்தில் சேகர் உயிரை விட்ட போது அவளையும் சதீஷையும் கூட அழைத்து வந்து விட்டார். அவள் சந்தோஷமாக இருந்த போது, மன்னிக்காதவர், அவள் துன்பத்தில் மட்டும் பங்கு போடச் சம்மதித்தது ஏன்? அதுதான் பெற்ற பாசமோ?

அவர்கள் பூஜை அறையை விட்டு வெளியே வந்தபோது, சதீஷ் ஓடிவந்து அவள் கால்களைக் கட்டிக் கொண்டான். மோகன் வாசலிலேயே நின்றான். அவனுடைய எல்லை அவனுக்கே தெரியும். ராஜசேகர் போல் அவன் துணிந்தவன் அல்ல.

சேகர் மறைவுக்குப் பின், அவள் பல்கலைக் கழகத்தில் எம்.ஏ. சேர்ந்தபோது மோகன் அவளுடைய தமிழ் பேராசிரியராக அறிமுகமானான். நல்ல உயரம். கறுப்பு நிறமானாலும் களையான முகம். அமைதியானவன். சிறு வயதிலேயே விதவையானவள் என்று வனஜாவிடம் பச்சாதாபம்! சிறு குழந்தைக்குத் தாய் என்றும் அவனுக்குத் தெரியும். ஒரு முறை அவளது வற்புறுத்தலில் அவள் வீட்டுக்கு வந்தவன் சதீஷிடம் ஒட்டிக் கொண்டு விட்டான். ''உனக்காக அல்ல சதீஷுக்காக'' என்று சொல்லிக்கொண்டு அவன் அடிக்கடி வர ஆரம்பித்தபோது, இதற்கு மேல் காரணம் ஒன்று இருக்கிறது என்று அவள் உள் மனம் சொல்ல ஆரம்பித்தது.

வனஜாவுக்கு ஒரே பயம்! ராஜ சேகரைத் திருமணம் செய்து கொண்டது — விதவையாகி திரும்பி வந்தது அந்த அதிர்ச்சியை இரண்டு வருடங்களுக்குப் பிறகு இப்போதுதான் ராமசுவாமி மெல்ல மறக்க ஆரம்பித்திருக்கிறார். இந்தப் பயத்துக்குக் காரணம் — மோகன் ஒரு மாதமாய் அடிக்கடி விதவா விவாகம் பற்றி வாதம் புரிய ஆரம்பித்ததுதான்.

அவள் நினைத்துப் பயந்தது சரியாகிவிட்டது. உள்ளே நுழைந்த மோகன் சட்டென்று அவரைக் கேட்டான். ''ஸார்! உங்களோட ஒரு நிமிஷம் தனியாப் பேசலாமா?''

வனஜா மிக அதிர்ந்து போனாள்.

அவள் சதீஷை அள்ளிக்கொண்டு வெளியில் போனாள். அவன் அவளை விவாகம் செய்து கொள்ள அவர் சம்மதிக்க வேண்டாமா? சதீஷ் அவனை அப்பாவாக ஏற்பானா? கடவுளே! இது என்ன புதிய சோதனை?

மோகன் மறுபடி உள்ளே நுழையக் கதவை லேசாய் விரலால் தட்டியதைப் பார்த்த போது சதீஷைத் தோளில் கிடத்திக்கொண்டு எழுந்தாள்.

ராமசுவாமி பூஜை அறையை விட்டு வெளியே வந்தார்.

''அம்மா, வனஜா! இவர் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கணும்னு கேட்கிறார்! நீ கிறிஸ்தவனைக் கல்யாணம் பண்ணிண்டு குழந்தையும் பெத்துண்டுட்டேன்னு நான் இவருக்குச் சொல்லத் தேவையில்லே. உன்னையும், உன் குழந்தையையும் ஏத்துக்கிறேன்னு சொல்ற தெய்வமா எனக்குப் படறது. 'எனக்கு வைதீகத் தொழில் நடக்கலேங்கிறதும் நல்லதாப் போச்சு. நீங்க என் பெண்ணைத் தாராளமாக விவாகம் பண்ணிக்கலாம். அக்னி வளர்த்து, மந்திரம் சொல்லி, நானே தாரை வார்த்துத் தரேன். இந்தத் தடவையாவது என் பெண் தீர்க்க சுமங்கலியாய் வாழணும்'னு சொன்னேன்.''

அவர் குரல் கம்ம, கண்களில் நீர் தாரையாய் வழிந்தது.

மோகன் அவர் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டான். தான் ''தாழ்த்தப் பட்டவன்'' என்பதை மறந்தான்.

''பண்ணுங்க! முதல் மனைவி இழந்தவங்க ஆடம்பரமா இரண்டாவது கல்யாணம் பண்ணிக்கலேயா? நான் தயார்! உங்க பெண்ணையும், பேரனையும், எங்களுக்குப் பிறக்கப் போகும் உங்கள் பேரன் பேத்திகளையும் என் கண்ணைப் போல் காத்து வளர்ப்பேன். இது நீங்க வணங்கற அம்பாள் மேலே சத்தியம்.''

அவள் அவர்களையே பார்த்தாள்.

''நீ என்னம்மா சொல்றே?'' ராமசுவாமி வனஜாவை நேராய்க் கேட்டார்.

மோகன் அவளையே — அவள் பதிலுக்காக — ஆவலுடன் உற்று நோக்கினான்.

அவள் பதிலில்தான் ஒரு புது யுகம் பிறக்க வேண்டும்!!

ஏப்ரல் பூமாலை



● இந்தியாவில் மார்ச் மாதம் 20ம் தேதி ஹோலிப் பண்டிகை கொண்டாடப் படுகிறது. புராதன ரோமானியர்களால் சம இரவு-பகல் நாளான மார்ச் மாதம் 21ந் தேதி ஹிலாரியா பண்டிகை கொண்டாடப் பெற்றது. ஐரோப்பாவில் தோன்றிப் பிற கண்டங்களிலும் பரவியுள்ள ஏப்ரல் முட்டாள் தினம் ஏப்ரல் மாதம் முதல் தேதியன்று கொண்டாடப்படுகிறது. குளிர் காலம் முடிந்து வசந்த காலம் தொடங்கும் பருவத்தில் மக்கள் தங்களுடைய கவலைகளையும் துன்பங்களையும் மறந்து உற்சாகத்துடனும், குதூகலத்துடனும் இருக்கும் வகையில் இந்த மூன்று பண்டிகைகளின் தேதிகளும் ஒன்றுடன் ஒன்று நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பது குறிப்பிடத் தக்கது.

'ஏப்ரல் மீன்'

● *1564*ல் ஃபிரான்ஸில் பஞ்சாங்கம் சீர்திருத்தப்பட்டது. அதை அனுசரித்துத்தான் யாராவது ஒருவரை முட்டாள் ஆக்குவது என்னும் வழக்கம் தோன்றியது எனக் கிராமியக் கதைகளையும், நாடோடிப் பாடல்களையும் தொகுத்தவர்கள் நம்புகிறார்கள். அதற்கு முன்பு வரையிலும் பிரெஞ்சுப் பஞ்சாங்கத்தின்படி ஏப்ரல் முதல் நாள் புத்தாண்டின் பிறப்பாக இருந்தது. சீர்திருத்தப்பட்ட புதிய பஞ்சாங்கத்தின்படி ஜனவரி முதல் நாள் புத்தாண்டு தினமாக ஏற்றுக்



கொள்ளப்பட்டது. இந்தப் பஞ்சாங்க மாறுதலை எதிர்த்த ஒருவன் குறும்புக்காரர்களால் ஏப்ரல் முதல் தேதியன்று கேலிக்கும் இண்டலுக்கும் ஆளாக்கப்பட்டு 'ஏப்ரல் மீன்' என்று அழைக்கப்பட்டான்.

'குக்கூ' வேட்டையாடுதல்

● 'குக்கூ' பறவை அப்பாவிகளுடைய அடையாளச் சின்னம். அது ஏப்ரல் மாதத்தில் வெப்பப் பிரதேசங்களிலிருந்து குடிபெயர்ந்து ஸ்காட்லாந்துக்கு வருகிறது. எனவே, ஸ்காட்லாந்தில் ஒருவனை ஏப்ரல் முட்டாளாக்குவதைக் 'குக்கூ பறவையை வேட்டையாடுதல்' என்று குறிப்பிடுவார்கள்.

ஏப்ரல் முட்டாள் ஆக்குவது எப்படி?

சுலபமாக நண்பரை ஏப்ரல் முட்டாளாக்க வேண்டுமா? 88ம் பக்கம் பார்க்க.


-எஸ். கே. சதானந்தம்




சித்திரை மொழிகள்

● சித்திரை மழை பெய்தால் பொன்னேர் கட்டலாம்.
● சித்திரைப் புழுதி மெத்தவும் நன்று.
● சித்திரை மாதப் புழுதி பத்தரை மாத்து தங்கம்.
● சித்திரை மாதத்தில் கூர்எள் விதை.
● சித்திரை மின்னலாகாது, மார்கழி இடிக்கவுமாகாது.
● சித்திரை மழை சின்னப்படுத்தும்.
● சித்திரை மாதத்து மழை சிவத்துரோகம்
● சித்திரை மாதத்தில் சீராய்விதைவிதைத்தால் பத்தரை மாற்றுப் பசும் பொன் அதில் விளையும்.
● சித்திரை பத்துக்கு மேல் சிறந்த பெருங்காற்று ஐப்பசி பத்தில் அடங்கும்.
● சித்திரை மாதம் சிறந்து மழை பெய்யாது போனால் வில்லாததை விற்று வெள்ளாடு கொள்.
● சித்திரை மாதத்தில் சிறந்துழுத புழுதியிலே கத்தரி நடாமல் கரும்பு நட்டு விளைனேன்.
● பங்குனி என்றும் பருக்கிறதும் இல்லை, சித்திரை என்றும் சிறுக்கி[illegible]யும் இல்லை.

-கே. எம். இளங்கோ




கன்னத்தில் என்னம்மா சிவப்பு
அது, சின்னக் கொசு கடிச்ச தடிப்பு
கொசுக்களைத் 'தலை தெறிக்க' ஓட்டிடும் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்.
ஐயா...சாமி...தயவு செஞ்சு ஒண்ணே ஒண்ணு, டார்டாய்ஸ் கொசுவர்த்திச் சுருள். பட்டினியாக்கூட இருப்பேன், ஆனால் கொசுக் கடியை மட்டும் தாங்க முடியலே...
நல்லதைச் செய்வீர்..........வாங்குவீர் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
விபத்து இன்ஷூரன்ஸா? முதல்ல, கொசுக்கடிக்கு ஏதாவது இன்ஷூரன்ஸ் இருக்கா?
கொசுத் தடை இன்ஷூரன்ஸ் டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருள்
கொளுத்துவீர் டார்டாய்ஸ்-விரட்டுவீர் கொசுக்களை!
டார்டாய்ஸ் கொசு வர்த்திச் சுருளினால்.
தயாரிப்பாளர்:
பாம்பே கெமிகல்ஸ் ப்ரைவேட் லிமிடெட்
:.போர்ட், பம்பாய்-400 023. :.போன்: 273831

இம்முறை ஆஸ்திரேலிய சுற்றுப் பயணத்தில் வெற்றி தோல்விகளை இந்திய அணி சமன்படுத்தி விட்டது உண்மைதான். ஆனால் 1967-68லும் 77-78லும் தோல்வி கண்ட இந்திய அணி சுற்றுப் பயணத்தின் முடிவில் இன்றைய அணியை விடப் பலம் வாய்ந்ததாகவே காணப்பட்டது! அந்த ஆண்டுகளில் சுற்றுப் பயணத்தின் முடிவில் இந்திய அணி தனது பிரச்னைகளை வெற்றி கொண்டு டூரின் தொடக்கத்தில் இருந்ததை விட அதிக பலம் வாய்ந்ததாக விளங்கியது. இதற்கு நேர் மாறாக கவாஸ்கரும் அவரது தோழர்களும் மெல்போர்னில் யாரும் எதிர்பாராத ஒரு வெற்றியைப் பெற்ற போதிலும் நியூஸிலாந்து சுற்றுப் பயணத்தின் தொடக்கத்தில் இந்திய அணியில் ஒரு நிச்சயமற்ற தன்மையே நிலவியது. பிரதான பிரச்னைகள் தீர்க்கப்படாமலே இருந்தன. முன்னணி பாட்ஸ்மன்களின் முழு ஆற்றலும் விகசிக்காத நிலை. முக்கியமான பந்து வீச்சாளர்கள் காயம் பட்டதால் தங்கள் திறமையைக் காட்ட முடியாத சூழல்.

சந்திப் பாட்டில், சேதன் சௌஹான் தவிர மற்றவர்களுடைய பாட்டிங் நியூஸிலாந்திலும் ஏமாற்றமே அளித்தது. முதல் டெஸ்டின் இரண்டாவது இன்னிங்ஸில் கிவி பாட்ஸ்மென்களின் முன் யோசனையற்ற காரியங்கள் நமது பந்து வீச்சாளருக்கு உதவ, அவர்கள் அற்புதங்கள் என்றே கருதத் தக்க சாதனைகளைப் புரிந்தபோதிலும் நியூஸிலாந்தே முதல் டெஸ்ட்டில் வென்றது! இந்த டெஸ்டில் மகிழ்ச்சி தந்த ஒரே விஷயம் இளம் இடது கை ஸ்பின்னர் ரவி சாஸ்திரி தமது முதல் டெஸ்ட் பிரவேசத்திலேயே மெச்சத் தகுந்த விதத்தில் பந்து வீசியதுதான். நெருக்கடி நிலை உருவாகியதில் ரவி சாஸ்திரி அவசரமாக அழைக்கப்படவே பறந்து சென்றார்; சிறந்து விளங்கினார்.

கையை நன்கு உயர்த்திப் பந்து வீசுகிறார் இந்த இளைஞர். குறி பிசகாமல் வீசுவதிலும் இவர் திறமை அதிகரித்து வருகிறது. மூன்று டெஸ்ட்களில் பதினைந்து விக்கெட்டுகள் எடுத்துள்ளார். நீண்ட நேரம் களைப்பின்றிப் பந்து வீசுகிறார். பாட்டிங்கிலும் தன்னம்பிக்கையுடன் விளங்கி, மட்டையை நேராகப் பிடித்து, பந்தை வந்த திக்கிலேயே திருப்பி அமைதியாக ஆடுகிறார். ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது நமது எதிர்காலக் கிரிக்கெட்டுக்கு ரவி சாஸ்திரி ஒரு சிறந்த முதலீடு.

இரண்டாவது டெஸ்ட் நனைந்த பட்டாசாகி விட்டது. நமது பாட்ஸ்மன்கள் தங்களுக்குத் தாங்களே பூட்டிக் கொண்ட விலங்குகளிலிருந்து விடுதலை பெற்றுவிட்டார்கள் என்று நினைக்கத் தோன்றிய சமயத்தில் மழை! சௌஹான் ஏமாற்றமளிக்கும் பணியைத் தொடர்ந்து நடத்தினார். அவரது பரம ரசிகர்கூட, இந்தத் தடவையும் அவர் டெஸ்ட் செஞ்சுரி வாய்ப்பைக் கோட்டை விட்டதில் கோபம்கொண்டு படபடப்பார்!

மூன்றாவது டெஸ்டில் ஸ்ரீனிவாசனுக்கு முதல் முறையாக விளையாட வாய்ப்புக் கிடைத்தது. டெஸ்டுக்குத் தகுதி பெற்றவர்தான் இந்தத் தமிழக ஸ்டைல் பாட்ஸ்மன். கடந்த சில ஆண்டுகளாகவே வியக்கத்தக்க விதத்தில் இடை விடாமல் நன்கு ஆடியிருக்கிறார் என்பதை நோக்குகையில் முதிர்ச்சி அடைந்து விட்டார் என்று நிச்சயம் கருதலாம். பெரிய அளவில் ரன்கள் எடுக்காது போனாலும் தமது முதல் டெஸ்ட் பிரவேசத்தில் போதிய அளவு முயற்சியும்



ரவி சாஸ்திரி (படம்: பாலாஜி)

திறமையும் காட்டி டெஸ்ட் மட்டத்தில் தமது தகுதியை நிரூபித்துக் கொண்டார்.

பின்னால் வந்த கிர்மானி, யாதவ்வுடன் சேர்ந்து மீண்டும் ஒரு முறை பிரமாதமான கடைசிக் கட்டப் பாதுகாப்புத் தந்தார். இரு தேசங்களிலும் கிர்மானியின் விக்கெட் கீப்பிங் உயர்தரம்.

கவாஸ்கரும் விஸ்வநாத்தும் தளர்ந்து விட்டிருப்பது செலக்ஷன் கமிட்டிக்குக் கவலை அளித்திருக்க வேண்டும். அவர்கள் ஏற்கனவே நிரூபித்துள்ள தங்கள் ஆற்றலில்

கவாஸ்கர் - விசுவநாத்: ஓய்வு தேவையா?

ஒரு சிறு பகுதியைக் காட்டி யிருந்தாலும் போதும். இந்த இரு சுற்றுப் பயணங்களின் போக்கே வேறு திசையாக இருந்திருக்கும். ஒருவேளை கிரிக்கெட்டிலிருந்து நீண்டகாலம் ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொண்டால் இந்த இருவரும் டிசம்பரில் வரவிருக்கும் இங்கிலாந்து கோஷ்டிக்கு எதிராகத் தங்கள் திறமையைக் காட்டப் புதுச் சக்தி பெறலாம்.

இன்னொரு கலக்கமளிக்கும் அம்சம் நமது பந்து வீச்சில் நெருப்புப் பொறி பறக்காதது தான். நியூஸிலாந்துக்கு எதிரான இறுதி மாட்சில் மூன்று ஸ்பின் போலர்களுமே இருந்தனர். சுழல் பந்து வீச்சுக்கு உதவு படியாகவே இருந்தது ஆடும் இடம். இருப்பினும் முதல் இன்னிங்ஸில் நியூஸிலாந்தைக் குறைந்த ரன்களில் அவுட் ஆக்க முடியவில்லை. இரண்டாவது இன்னிங்ஸில் சுழல் பந்து வீச்சாளர்கள் தங்கள் பணியை இன்னும் சிறப்பாகச் செய்தனர். ஆனால் ஒளி மங்கியதில் ஆட்டம் தடைப் பட்டு, நமது அணி வெற்றி வாய்ப்பை இழந்தது.

இந்தியாவில் விக்கெட்டுகள் கடந்த பல ஆண்டுகளில் பந்தை வேகம் இழக்கச் செய்து, பந்து வீச்சாளருக்குக் கஷ்டத்தையே அளித்து வருகின்றன. அதே நேரத்தில் நமது பாட்டிங் ஆற்றலை மிகைப்படுத்திக் காட்டியும் வருகின்றன. எவ்வளவு சீக்கிரம் இன்னும் ஜீவனுள்ள பிட்சுகளை உருவாக்குவதில் தீவிரமாக இறங்குகிறோமோ அவ்வளவுக்குச் சர்வதேசக் கிரிக்கெட்டில் நமது வெற்றிவாய்ப்புக்கள் அதிகரிக்கும்.

இது ஒருபுறமிருப்பினும் இங்கிலாந்து அணி ஆண்டு இறுதியில் நம் நாட்டுக்கு வரும்போது அதற்குச் சக்தி வாய்ந்த எதிர்ப்பை நம்மால் தர முடியும். ஏனெனில் நமக்குள்ளது போன்றே பிரச்னைகள் இங்கிலாந்து அணிக்கும் இன்று உண்டு. அது பலஹீனமடைந்துள்ள ஒரு கால கட்டம் இது. இங்குள்ள சூழ்நிலையில் இந்தியாவை வெற்றி கொள்வது இங்கிலாந்துக்குச் சுலபமாக இராது. ஆனால் அயான் போதம், பந்தை பிட்ச் செய்வதற்கு வகையான ஒரு இடத்தை விக்கெட்டுகளின் இடையில் கண்டுபிடித்து விட்டால் நிலைமை தலைகீழாகியும் விடலாம்!

ஆங்கிலத்தில் : ராம்
தமிழாக்கம் : குட்டிகிருஷ்ணன்



கோலங்கள் - மலையாளம்

ஒரு கிராமம் கண்முன் விரிகிறது. வதந்திகள் நெருப்பாய்ப் பரவும் கிராமம். ஒன்று ஒன்பதாகிறது. ஒன்பது நூறாகிறது. அடுத்தவீட்டு செய்தி அவலாகிறது. விளைவாய் ஒரு பெண்ணின் வாழ்வு பலியாகிறது. மென்மையான காதல், ஒரு தலை ராகம் எல்லாம் கவிதையாய். படத்தில் ஒரு பாடல்கூட இல்லாதது சிறப்பு. நாயகன் சூபர்மேன் இல்லை. சாதாரண பலூன் வளையல் விற்பவன். ஆடிப் பிடித்து ஓடாமல் அமர்த்தலான நடிப்பு. கிராமத்தையும் ஆற்றில் படகையும் அழகாய்க் காட்டும் காமிரா. மனதில் அழியாத கோலம் போட்டவர் டைரக்டர் கே.ஜி. ஜியார்ஜ்.

— நளினி சாஸ்திரி

கால்ஷியம் சத்துக்
குறைவான எலும்புகள் பலவீனமானவை எளிதில் வலுவிழந்துவிடும்

கால்ஷியம்-ஸாண்டோஸ்
எலும்புகளுக்கு வலுவூட்டுகின்றது.

எலும்புகள் கண்களுக்குத் தெரிவதில்லை. இருப்பினும் அவை உங்கள் குழந்தைகளின் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் மிகவும் ஆதாரமானவை. கால்ஷியம் எலும்புகளுக்கும் பற்களுக்கும் இன்றியமையாத பகுதியாகும். கால்ஷியம் சத்துக் குறைவாக இருந்தால் அது பலவீனமான, எளிதில் நொறுங்கக் கூடிய எலும்புகளுக்குக் காரணமாகிறது அதனால் பற்கள் தளர்ச்சி அடைகின்றன. பற்களில் குழி விழுகிறது.

உறுதியான பற்களுக்கும் ஆரோக்கியமான எலும்புகளுக்கும் உங்கள் குழந்தைகளுக்கு 3 லிருந்து 4 வெனில்லா சுவையூட்டப் பெற்ற கால்ஷியம் ஸாண்டோஸ் வில்லைகளைக் கொடுங்கள். ஒவ்வொரு வில்லையிலும் கால்ஷியம், வைட்டமின்கள் வி.டி. மற்றும் பி 12ம் அடங்கியுள்ளன.

உங்கள் குழந்தை ஒவ்வொரு நாளும் கால்ஷியத்தை இழக்கிறது. இந்த நஷ்டத்தை ஈடு செய்ய வேண்டும். இல்லையேல் குழந்தையுடைய வளர்ச்சி பாதிக்கப்படுகிறது. சாதாரண உணவினால் குழந்தைகளுக்குப் போதுமான கால்ஷியம் கிடைப்பதில்லை.

இன்றே உங்கள் குழந்தைக்கு கால்ஷியம் ஸாண்டோஸ் கொடுக்கத் தொடங்குங்கள். காலதாமதம் செய்யாதீர்கள். பின்னால் எவ்வளவு கால்ஷியம் கொடுத்தாலும் அந்த நஷ்டத்தை ஈடு செய்ய முடியாது.

நினைவிருக்கட்டும், கால்ஷியம் வில்லைகள் எல்லாம் ஒரே மாதிரியானவை அல்ல.

கால்ஷியம் ஸாண்டோஸ்—என்று வற்புறுத்தி வாங்குங்கள். வேறு எதையும் வாங்காதீர்கள்.

கால்ஷியம் ஸாண்டோஸ்—
உலகிலேயே மிகச் சிறந்த
கால்ஷியம்
ஸ்விட்ஸர்லாந்து
நாட்டில்
ஸாண்டோஸால்
உருவாக்கப்பட்டது



கால்ஷியம்-ஸாண்டோஸ்®
வலுவுள்ள பற்களுக்கும்
உறுதியான எலும்புகளுக்கும்

SANDOZ

daCunha/S-25/TM


மேன்மையான பெண்மைக்கு மேன்மையான சுகம் தரும்

ஹெலனா

விஸ்கோஸ் இணைந்த சானிடரி டவல்கள்.

மாதத்தில் 30 நாட்களும் நீங்கள் அசதியை உணராமல் சுறுசுறுப்பாக இயங்க ஹெலனா உதவுகிறது. பட்டுப் போன்ற மிருதுவான மென்மையுடன், மிகவும் உன்னதமாகத் தயாரிக்கப்பட்ட சானிடரி டவல் ஹெலனா. மிகவும் நியாயமான விலையில், அன்னியோன்யமான பாதுகாப்பை அளிப்பது.

ஈரத்தை ஊடுருவ விடாது தடுக்கும் ஒரு விசேஷ நீலவண்ணப் பாப்புடன் கூடியது. பாதுகாப்பு அளிப்பது. வசதி மிகுந்தது. விலையோ மிகவும் மலிவு. எல்லா கடைகளிலும் கிடைக்கும்.



சாகாட் இண்டஸ்ட்ரீஸ், 23, புரசைவாக்கம் நெடுஞ்சாலை, சென்னை - 600 007.

தென் சென்னை : கிரிஜா ஏஜென்சீஸ் 159, ராயப்பேட்டை ஹைரோடு, சென்னை - 600 004

வட. சென்னை : மாதவன் ஏஜென்சீஸ் 28, புது ஆவடி ரோடு, சென்னை - 600 010

கடுகு பதில்கள்!



✖ க. நிர்மலா, திருவான்மியூர்

கே. ஆணுக்கும் பெண்ணுக்கும் அழகும் குணமும் அவசியம் என்று நோக்குகிறீர்கள். ஆனால் ஆணுக்கு ஆண்மையும் பெண்ணிற்குப் பெண்மையும் வேண்டும் என்று நோக்குவதில்லையே (சற்றும் குழப்பாமல், பொறுமையுடன், குதர்க்கமில்லாமல், அர்த்த பிச்சாக இல்லாமல் பதில் சொல்லுங்கள்)

ப: என்னுடைய பதில் சொல்லும் பாங்கைத் துல்லியமாகத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பதற்கு ஒரு சபாஷ். சரி, பதிலுக்கு வருகிறேன். பெண்மை என்பதும் ஆண்மை என்பதும் நற்குணங்கள்தான். குணங்களை எடை போடும்போது இவையும் அதில் உள்ளடங்கி விடுகின்றன.

✖ மணிமேகலை, வேலூர்

கே. உங்களைப் பச்சோந்தி என்று அழைத்தால் கோபிக்க மாட்டீர்களா?

ப: மாட்டேன். தான் இருக்கும் சூழ்நிலைக்கு ஏற்றவாறு பச்சோந்தி தன் நிறத்தை மாற்றிக்கொள்வது ஒரு வரப்பிரசாதம். அதே மாதிரி யாருடன் பழகுகிறோமோ (அல்லது எந்தப் பத்திரிகைக்கு எழுதுகிறோமோ) அவருக்கு அல்லது அதற்கேற்ற மாதிரி அட்ஜஸ்ட் செய்து கொள்ளத் திறமை மட்டுமல்ல; மனப் பக்குவமும் அவசியம். அந்த விதத்தில் பல எழுத்தாளர்கள், ஓவியர்கள் எல்லாரும் பச்சோந்திகள்தான். இதைப் பாராட்டாகக் கூறுகிறேன்.

✖ சி. லக்ஷ்மி, அணுசக்தி நகர் (பம்பாய்)

கே. சோ அவர்களுக்குப் பலஹீனமான ஒரு பழக்கமான சிகரெட் பிடிப்பதை விட்டுவிடும்படி நீங்கள் சொல்லமுடியாதா?

ப: அவருக்குத் தெரியாத சமாச்சாரமா? சுமார் பத்து வருஷங்களுக்கு முன்பு அவர் சிகரெட் பிடித்துக் கொண்டிருப்பதை ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தேன். கையெழுத்துப் பிரதியில் பார்த்த அவர் 'தயவு செய்து சிகரெட் பற்றி எழுதியிருப்பதை எனக்காக நீக்கிவிடுங்கள்' என்றார். நீங்கள் எழுதியிருப்பதைப்பார்க்கும்போது ஒய்ஃபின் கோபத்தைச் சமாளித்து விட்டார் போலிருக்கிறது. எத்தனையோ புதுக் கருத்துக்களையும், நெறி முறைகளையும் இளைஞர் சமுதாயத்தில் புகுத்தியுள்ள சோ, சிகரெட் பிடிப்பது தீமை என்பதைப் பரப்பலாம் — தாமே சிகரெட் பிடிப்பதை நிறுத்திவிட்டு.

✖ த. இளஞ்சேரன், கோபி

கே. சினிமாவுக்குச் செலவழிக்கும் பணத்தில் புத்தகங்கள் வாங்கினால் என் நண்பன் கடிந்து கொள்கிறானே?

ப: அவர் உங்கள் நண்பரல்ல; விரோதி.

✖ சீ. ஜெயராமன், கூத்தநல்லூர்

கே. 1982ம் ஆண்டு கிரக சேர்க்கையினால் விபரீதங்கள் நேரிடும் என்கிறார்களே, அதுபற்றி உங்கள் கருத்து என்ன?

ப: எழுத்து மூலமாகத் தரப்படும் என் ஜோசியத்தைப் பத்திரமாக வைத்திருங்கள். 1982ல் ஒரு விபரீதமும் நேராது. நேரும் என ஜோதிடர்கள் கூறுவதைக் கேட்டு ஏன் இப்போதே மண்டையைக் குழப்பிக்கொள்கிறீர்கள்? நாளைக்குத் தலைவலி வரலாம் என்று இன்றைக்கே மருந்து சாப்பிட யோசிக்காதீர்கள்.

✖ சத்தியபாமா, காட்பாடி-632007

கே. யோசனைத் திலகமே, ஒரு நல்ல யோசனை சொல்லுங்களேன்

ப: (பட்டத்துக்கு நன்றி) பாங்குகளில் காஷியர்கள், தண்ணீருடன் உள்ள ஸ்பான்ஜைத் தொட்டு ரூபாயை எண்ணிக் கொடுக்கிறார்கள். ஆனால் நாம் நோட்டுகளை எண்ணிப் பார்ப்பதற்கு ஸ்பான்ஜ் வசதி இருக்காது. ஏன், கவுண்டருக்கு வெளியிலே ஒரு ஸ்பான்ஜை வைத்தால் என்ன?

✖ கி. எஸ். தங்கமணி, சென்னை-18

கே. நீ தமிழனா, நான் தமிழனா என்று கேட்டுக் கொண்டிருப்பதைவிட நீ இந்தியன், நான் இந்தியன் என்று சொல்லலாம் அல்லவா?

ப: சொல்லலாம். தமிழன் என்று சொன்னாலும் அவ்வளவு தப்பில்லை. நீ வண்ணாரப் பேட்டைக்காரன்; நான் சைதாப்பேட்டைக்காரன் என்கிற அளவு மோசமாகி விடக் கூடாது.

✖ பிரேமா சந்தானம், பாரக்பூர்

கே. ஒரு நகைச்சுவைக் கட்டுரை எழுத ஐடியா கொடுங்களேன்.

ப: அப்புறம் கட்டுரையையே எழுதிக் கொடுக்கச் சொல்வீர்கள். போகட்டும். ஒரு குட்டி ஐடியா கொடுக்கிறேன். கேள்வி - பதில் எழுத்தாளர்கள் மகாநாடு ஒன்று நடப்பதாகக் கற்பனை பண்ணி மகாநாட்டு விவரங்களை எழுதுங்களேன்— நகைச் சுவையாக.



✖ ஆர். மார்க்கண்டன், விழுப்புரம்

கே. கடுகுக்கும் யானைக்கும் உள்ள ஒற்றுமையைச் சொல்ல முடியுமா?

ப: அடி சறுக்கும்!

பரிசு பெறுபவர் :

சி. லக்ஷ்மி
2-பி, அன்னபூர்ணா
அணுசக்தி நகர், பம்பாய்-400094

"அப்புறம்? இன்னும் யாரெல்லாம் கண்ணிலே பட்டா? ஒன்னோட பிரியமான டீச்சரம்மா...பழைய சிநேகிதிகள்..."

"போறுமே! கிண்டலும் கேலியும்... நிஜ மாவே நான் ஒருத்தியைப் பார்த்தேன். யாருன்னு சொன்னப்புறம் உங்களுக்கே ரொம்ப சந்தோஷமா யிருக்கும்... விஜயா! ஞாபகம் வச்சிண்டிருக்கேளா?"

ஒரு சின்னதான சிரிப்பு. கால்களைத் தழுவி ஓடிக் கொண்டிருக்கும் வராக நதியின் சலசலப்புக் குளுமையையும் மீறிக்கொண்டு ஒரு இங்கிதமான சிரிப்பு.

அவளா! அந்த விஜயாவா?

அன்றைக்கு எத்தனை பெரிய உபதேசம் பண்ணித் தன் தோழிக்கு அவள் கடிதம் எழுதியிருந்தாள்? வெறும் கடிதமா அது? ஒரு இனிய ஆற்றுப்படை. தோழி ஆற்றுப் படை என்று சொல்லலாமா?

அந்தக் கடிதம் யாருக்கு எழுதப்பட்டதோ அவளை விடவும், அவளுக்குத் துணையாய் வந்த என்னையே பெரிதும் ஆற்றுப்படுத் தியது.

"வாழ்க்கை என்பது ரெட்டை மாட்டு வண்டி மாதிரி லக்ஷ்மி. ஒரு மாடு சண்டித் தனம் பண்ணினாலும் போக வேண்டிய இடத் துக்குப் போய்ச் சேர முடியாது. இனிமை யான பிரயாணத்தோட ருசியே கெட்டுப் போயிடும்... ஜாக்கிரதையா நடத்துக்கோ."

முதன் முதலில் நானும் லக்ஷ்மியும் தனி மையில் சந்தித்துக் கொண்ட மனோகரமான போதில் இந்த வாழ்த்துக் கடிதத்தைத்தான் எனக்குக் கொடுத்தாள். அதுவும் தயங்கித் தயங்கி எதையாவது பேச வேண்டுமே என் கிற தவிப்பில்.

விஜயாவின் வாழ்த்து வீண் போகவில்லை. ஒரு எழுத்துக்கூடத் தடுமாறவில்லை. ஆரம் பத்தில் 'மாடுகள்' கொஞ்சம் முரண்டு பண்ணியிருக்கக் கூடும். பாதை பழகிய பிறகு 'ஜல்ஜல்' என்று கனஜோராய்ப் பய ணம் வெற்றிகரமாய் முப்பது ஆண்டுகள் கடந்து வந்துவிட்ட பிறகு—

"என்ன ஒரேயடியா அசந்து போய் ஒக் காந்துட்டேள்!"

"ம்... என்ன சொன்னே?"

'களுக்'கென்ற அவளுடைய சிரிப்பில் வயசு காணாமல் போய்விடுகிறது.

"ஏன்னா! சின்ன வயசிலே நீங்களும்தானே மழை ஜலத்திலே கப்பல் பண்ணி விட் டிருப்பேள்... இந்தாங்கோ..."

அளவாய்க் கிழித்த காகிதத்தில் மடித்த கப்பல்களில் ஒன்றை அவளுடைய கரத்தி லிருந்து எடுத்துக் கொள்கிறேன். அவள் கையிலும் மற்றொன்று.

"ஆளுக்கு ஒரு கப்பல்... எது மொதல்லே போறதோ...."

கேலியாய்ச் சிமிட்டும் அவளுடைய கண் ணின் பார்வை ஒளி என்னைச் சுடுகிறது.

'ஒன்...டூ...த்ரீ...' சொல்லிக் கப்பல்களை ஒரே நேரத்தில் அருவி யோட்டத்தில் மிதக்க விடுகிற இதமான விளையாட்டில் மனம் கிடந்து அடித்துக் கொள்கிறது.


'எந்தக் கப்பல் முன்னாலே போகும்?'

சொல்லி வைத்த மாதிரி இரண்டு கப்பல் களும் கனஜோராய்ப் புறப்பட்டுத் தங்கு தடைகளைச் சமாளித்துக் கொண்டு சற்று இடறி ஒரு குறுக்குப் புல் மேட்டில் இளைப் பாறுகிற மாதிரி ஒதுங்கி நின்று...

அடுத்ததாய் ஒரு சின்னச் சுழலில் இரண் டும் ஒன்றாகவே மூழ்கி அமிழ்ந்து போகிற போது... மனம் குதூகலிக்கிறது.

என்னிடம் தோற்றுப்போகிற ஒவ்வொரு கணமும் இவளுக்கு இனிமையானதே. அதேபோல் இவளிடம் தோற்றுப் போகிற ஒவ்வொரு கணமும் எனக்கு இனிமையின் செறிவுதான்.

தோல்வியில் இனிமை காண்கிற இந்த வாழ்க்கையில், யார் அடிமை, யார் தலைவன்?



குறும்பாய்க் கண்களில் சிரிப்பை நிறைத்துக் காட்டுகிற லக்ஷ்மி. இவளுக்கா ஐம்பது வயதாகி விட்டது? இவளுடைய மருமகன் கோபித்துத் தனியாய்ப் போகவேண்டுமென்று கணவனிடம் அடம் பிடிக்கிறாள்?

கொடைக்கானல் மலையடிவாரத்துச் செழிப்புக்குக் கட்டியம் கூற வேண்டிய அந்த நகரம் — நகரசபையாம் — கேட்பாரற்றுக் கிடக்கிறது. நாலாந்தரக் கிராமப்புறத்தின் குண்டு குழிச் சாலையை நல்லவை ஆக்குகிற மாதிரி பராமரிப்பு.

''எங்க ஊரைப் பத்திச் சொல்லவேண்ணு ஒங்களுக்குத் தூக்கமே வராதே'' — உரிமை மேலிட்டால் அவள் அலுத்துக் கொள்கிற போதின் குங்குமச் சிவப்பைக் காண முடியாமல் இருட்டு சதி செய்கிறது.

எழுகிறேன். அவளும் படித்துறை நீரில் ஊறிய கால்களை மெல்லென எடுத்து வைத்துப் பாசி வழுக்கலில் இடறுகிறபோது—

ஐம்பது வயதிலும் ஒரு சுகமான அனுபவம்! தோளில் சாய்ந்தவளை அப்படியே அணைத்துப் பிடிக்கிற சாக்கில், கூந்தலை அளைகிற இனிமையின் செறிவில்—

''போறும்... சின்ன வயசு... யாராவது பார்க்கப் போறா...''

''நிஜமாவே போதுமா...'' போலியான கோபத்தில் விலகிக்கொள்ள முயல்கிறேன். அவளே பிடித்து நிறுத்துகிறாள்.

பிறந்தகம் வந்து... நான்கு நாட்கள் தங்கி விட்டுத் திரும்பவும் நாளை நகரச் சந்தடிகளில் அலைப்புற வேண்டுமே என்கிற வேண்டா மனத்துடன் அவளும் சலிப்படைகிறாள்.

வீடு திரும்ப நடக்கும் போது....

''ஜனனி என்ன சொன்னா... முடிவா என்னதான் செய்யப் போறே...''

பெருமூச்சு விடுகிறாள்.

''மாமியார் — மருமகள் பிரச்னை மட்டுமில்லே. இது மனோபாவத்தோட பிரச்னை. லலிதா யாரையோ காதலிச்சுக் கல்யாணம் பண்ணிண்டுட்டாண்ணப்புறம் இவளுக்கு மனசு விஷமாயிடுத்து. நம்ம கூட இருந்தா கௌரவப் பிரச்னை வேறே... எல்லாம் புரியறது. ரகு ஒரு 'டாட்டு'லெட்'தான். அவனுக்குச் சுயமாய்ப் பிரகாசம் கிடையாது. இவளைச் சுத்திருந்தான் அவனுக்கு ஜீவனே இருக்கும். அதுனாலே பிள்ளையை நம்பிப் பிரயோசனமில்லே. அவா தனியாவே போயிடட்டும்...''

ரகு — லலிதா இரண்டே சந்ததியினர்.

மகன் பெற்றவர்களை விட்டு விட்டுத் தனியாய்ப் போய்விடுவது என்பது இப்போது ரொம்பவும் சாதாரணமாகி விட்டது.

லலிதா ஒன்றும் முறை தவறி நடந்துவிடவில்லை. அப்பாவும் அம்மாவும் நிச்சயம் சம்மதிப்பார்கள் என்கிற நம்பிக்கைதான் அவளுடைய காதலுக்குக் கட்டியம் கூறியிருக்க வேண்டும். தன் மனத்துக் கினியவனைப் பெற்றவர்களிடம் மறைத்து வைக்காமல் அழைத்து வந்து காட்டிய நேர்மையைப் பாராட்டத்தான் வேண்டும்.

ரகுவுக்கு இது ஒரு ஆற்றாமைதான். ஜனனிக்கு இது எந்த வகையிலும் பிரச்னையாக இருக்க முடியாது. அவளுடைய மன வளம் ஆரோக்கியமானதாய் இல்லை என்றே கருத வேண்டியிருக்கிறது.

வீடு வந்து சேர்கின்ற வரை மனம் கிடந்து அலைகிறது. ரகுவும் ஜனனியும் தனியாய்ச் சென்றுவிடுகிறது என்பது என்னை விட அவளுடைய மனநிலையை வெகுவாய்ப் பாதிக்கும். சின்ன ரகுவின் குறும்புகளில் திளைக்காமல் ஒரு பொழுதைக்கூட அவளால் கழிக்க முடியாது. ஜனனி வேறு அடுத்த பிஞ்சு ஒன்றை வளர்த்துக் கொண்டிருக்கிறாள். இந்த நேரத்தில்....

''இந்த பாருங்கோ... ஜனனிக்கு இப்போ பச்சை உடம்பு. தனியாப் போய் இருக்கணும்னு ஏனோ ஆசை வந்திருக்கு. அப்படி எடுத்துப்போமே... ஒரு பத்து நாள் விலகி இருந்தாலே அவளுக்கு என்னோட அவசியம் புரிஞ்சிடும். என்னவோ ஒரு காரணம். லலிதா கல்யாணம் பண்ணிண்டது கெடச்சிருக்கு... போய்த்தான் இருக்கட்டுமே.''


சிரித்துக் கொள்கிறேன்.

அவளைப் பொறுத்தவரை ரகுவும் லலிதாவும் இரண்டுமே இரண்டு புஷ்பங்கள்தான். எது பவழ மல்லிகை?...எது நந்தியாவட்டை? பூஜைக்கு உரியனவான இந்த இரண்டு மலர்களிலும்தான் எத்தனை வித்தியாசம்... வண்ண ஆடம்பரங்கள் நிறைந்திருந்தாலும் எது சாக்கு என்று சொல்கிற மாதிரி தொட்டால் மரத்தை விட்டு உதிர்ந்து விடுகிற பவழ மல்லிகை... முழு எளிமையுடன் வெள்ளையாய்ச் சிரித்துக் கொண்டே காம்பை விட்டு அகல மறுக்கிற நந்தியாவட்டை... பாசப் பிணைப்பின் இரு துருவங்களா?



நந்தியாவட்டையும் பவழமல்லிகையும்

சுப்ர.பாலன்



நவகாளிப் பயணத்தில் ஒருநாள் மாலை நேரு வந்த வேளை.. காந்தியடிகள் நேருவுடன் புறப்பட்டார். இடையே தடையிட்டது ஒரு வாய்க்கால். காந்தியடிகள் நீரில் நடந்தே கடந்தார். நேருவோ..., ''காலில் நீர் படாமல் கடக்கிறேன் பாருங்கள்'' என்று கூறி, பின்னே பத்தடிகள் வந்து ஓடிப்போய் வாய்க்காலைத் தாண்டினார். காந்தியடிகள் புன்னகை செய்தவாறே ''நீ இப்படித் தாண்டி வருவதற்கு எத்தனை 'அடிகள்' பின்னே செல்ல வேண்டியிருந்தது உணர்ந்தாயா?'' என்று கேட்டார்!

தகவல்: க. குமரேசன்

பவழ மல்லிகையாய்க் கழன்றுகொள்ளத் துடிக்கிற ரகுவும், அவனை இயக்கி வைக்கிற ஜனனியும், வெள்ளைச் சிரிப்பு மாறாமல் அம்மாவையே சுற்றி வருகிற நந்தியாவட்டையாய் லலிதாவும்—

கடவுளே இரண்டையும் ஒன்று போல் பாசப் பிணைப்பு மாறாமல் வைக்க மாட்டாயா என்று மனம் அடித்துக்கொள்கிறது.

வாசலில் யாரோ அழைப்பது கேட்கிறது. லக்ஷ்மி விரைகிறாள். ''வினயா?'' ஆவல் மேலிட இவள் அழைப்பது கேட்கிறது.

''இந்த பாருங்கோ.. வினயா வந்திருக்கா. இத்தனை வருஷமாகியும் இவளை ஒங்களுக்கு நான் நேரிலே அறிமுகம் பண்ணவே இல்லியே. நாளைக்கு ஊருக்குப் போகப் போகிறோம்னு சொன்னேன். வந்திருக்கா.'' சின்னக் குழந்தையின் துள்ளலுடன் அந்த அறிமுகம் நிகழும்போது சம்பிரதாயமாக அவளுக்கு வணக்கம் சொல்கிறேன். 'உன்னுடைய கடிதம்தான் எங்கள் இனிமையானவாழ்க்கைக்கு அடியெடுத்துக் கொடுத்தது' என்று சொல்லக் கூச்சமாக இருக்கிறது.

''உங்களைப்பத்தி லக்ஷ்மி நிறையச் சொல்லியிருக்கா... நேரிலே பார்த்ததில்லே...''

''வினயாவுக்கு ஆறு குழந்தைகள்... பெரியவ எங்கேயோ ஆப்பிரிக்காவிலே டாக்டரா இருக்கா... அடுத்தவன் மதுரையிலே தான் வேலை பார்க்கறான். மத்ததெல்லாம் படிப்பை முடிக்கல்லே... குலுகுலுன்னு கரையான் புற்று மாதிரி குடும்பம் இருக்கணும்னு இவளுக்கு ரொம்ப ஆசை.''

''என்னடி இது அறிமுகம்'' என்று கூசுகிறவள் போல் வினயா தலையைத் தாழ்த்திக் கொள்கிறாள்.

''மதுரையிலே மில் மானேஜர். ரொம்பப் பெரிய உத்தியோகம். ஆறு நாள் அவன் கூடப் போய் இருக்கக் கூடாதுன்னு இவர் உத்தரவு. கூடவே போய் இருந்தா பாசம் குறைஞ்சுடும்னு இவரோட வாதம். பிள்ளைகளெல்லாம் ஹாஸ்டலிலே படிச்சிண்டிருக்கு. ரெண்டு பேரும் மட்டும்தான் இங்கே.''

லக்ஷ்மி என்னைப் பார்க்கிறாள். ஜனனி உன்னை விட்டுக் கணவனுடன் பிரிந்து போகத் துடிக்கிறாள். இங்கே பெற்றவர்கள் பிள்ளையிடம் போயிருப்பது நல்லதில்லையென்று எண்ணுகிறார்கள். எது சரியான வாதம்?

வினயாவின் மன நிலையைப் பற்றிச் சொல்லவில்லை. அவளுடைய கணவன் மன நிலைதான் அவளுடையதும். லக்ஷ்மியின் மனநிலையைத்தான் நான் அங்கீகரிக்க வேண்டும். யாருக்கு யார் விட்டுக் கொடுப்பது என்பதில் இது ஒரு வகை.

''இங்கேயும் அதே பிரச்னைதானம்மா. ஆனா வேறே வடிவம். பிள்ளையும் மருமகளும் தனியாப் போகணும்னு ஆசைப்படறா. இவளுக்கு மனசு இடந் தரல்லே. கிடந்து மறுகிண்டிருக்கா.''

தோழியர் இருவரும் தங்களுக்குள் ஏதோ பேசத் தொடங்குகிறார்கள். நான் என்னைத் தனிமைப்படுத்திக் கொள்கிறேன்.

நாளை ஊர் திரும்பியதும் என்ன நிலை இருக்கும்? ரகு தனியாக வீடு பார்த்திருப்பானா? லலிதா கணவனுடன் எங்களிடமே வந்துவிடுவாளா? அல்லது ஒரே கூட்டுக் குடும்பமாய் இரண்டு புஷ்பங்களுடனும் மகிழ்ச்சி பெருகி வருமா?

சின்னதான எத்தனையோ கசப்புக்கள், துவர்ப்புக்கள், இவைகூட இல்லாவிட்டால் வாழ்க்கையின் இனிமைக்கு வேறு என்ன தான் உரைகல் இருக்கிறது?



மூக்குப்பொடி:
இரட்டைக் குழாய்த் துப்பாக்கி
தும்மி வெடிக்கத் திணிக்கும்
வெடிமருந்து

-நெல்லை: சு. முத்து

ஈறு உபாதைகளின் முதல் அறிகுறிகள்



ஊத்தை (Plaque)
ஊத்தை என்பது எப்போதும் உங்கள் பற்களையும் ஈறுகளையும் சுற்றி தோன்றும் கண்ணுக்குப் புலப்படாத கிருமிகளின் மெல்லிய படிவமாகும். இதை அலட்சியம் செய்தால் இப்படிவம் காறையாக உருப்பெறுகிறது.

பற்காறை
பற்காறை பற்களின் அடிபாகத்தில் படிந்து, ஈறுகளில் எரிச்சல் உண்டாக்கி அவற்றை வீங்கச் செய்கிறது. நாளடைவில் ஈறுகளிலும் எலும்புகளிலும் சரிவு ஏற்படுத்தி பற்களை விழச் செய்கிறது.

இரத்தம் கசியும் ஈறுகள்
பிரஷ் செய்யும் போது பலவீனமாகவும் மிருதுவாகவும் உள்ள ஈறுகளிலிருந்து இரத்தம் கசியும். இதனால் வலி ஏற்படாவிடினும் இந்த ஈறுகளின் இரத்தக் கசிவு பெரும் உபாதைகளில் கொண்டு விடலாம்.

பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் உபயோகித்து உங்கள் ஈறுகளை பராமரியுங்கள்

டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஸ்பெஷல் ஃபார்முலா
டாக்டர் போர்ஹென்ஸினுடைய ஃபார்முலாவின் திறமிக்க அஸ்ட்ரிஞ்ஜன்ட் செயல் உங்கள் ஈறுகளை வலுப்படுத்தி ஈறு உபாதைகளைத் தடுக்க உதவுகிறது.

பல் டாக்டர்கள் கூறுகிறார்கள்
ஈறு உபாதையால் ஆரோக்கியமான பற்களைக்கூட இழக்கநேரிடும். ஆகவே, இரவிலும் காலையிலும் போர்ஹென்ஸ் டூத்பேஸ்ட் மற்றும் போர்ஹென்ஸ் டபிள் ஆக்ஷன் டூத் பிரஷ் கொண்டு பற்களைத் துலக்குங்கள்; ஈறுகளைத் தேய்த்துக் கொடுங்கள்.



ஈறுகள்
கெட்டால்
உடல்
நலம்
கெடும்



இலவசம்! "உங்கள் ஈறுகளையும் பற்களையும் பராமரிக்கும் முறை" பற்களையும் ஈறுகளையும் பராமரிப்பது பற்றிய வண்ணப் புத்தகம். 30 பைசா தபால் தலையுடன் இம்முகவரிக்கு எழுதுக.
போர்ஹென்ஸ் டென்டல் அட்வைஸரி ப்யூரோ, த. பை. எண். 11463, டிபார்ட்மென்ட் F197-239 பம்பாய் 400 020. எம்மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்கவும்.


போர்ஹென்ஸ்
பல் டாக்டரால் உருவாக்கப்பட்ட டூத்பேஸ்ட்

239F-203 TM

கோடைச் சிரிப்பு!



"நம்ம நாடு உருப்படும்னு தோணலே! ஃபாரின்லே பெண்கள் மினி டிரஸ்ஸோட பீச்லே அமர்க்களப் படுத்துவாங்க! இங்கே... பட்டாணி சுண்டல்காரன்தான் மொய்க்கிறான்."



"நான் ஆப்பிள்ஜூஸ் சாப்பிட்டா உங்களுக்கு வேர்த்துக் கொட்டுது! நீங்க தர்பூஸ் வாங்கிச் சாப்பிடுங்களேன்.... சரியாப் போயிடும்!"



"'தண்ணி' அடிச்சிருக்கான்!..., அதான் ரெண்டா தெரியற சூரியனுக்கு ரெண்டு குடை பிடிச்சிருக்கான்."

"அப்படின்னு குடை நாலாகத் தெரியுமே! இன்னும் இரண்டு சூரியனைக் கொண்டான்னு கலாட்டா பண்ணப் போறான்."


"என்ன பாட்டி, பைன் ஆப்பிள், பிஸ்தா, மாங்கோ என்ன ஐஸ் க்ரீம் வேணும்?"

"இல்லேப்பா, இதே மாதிரி வடாம் பிழியறதுக்கு ஒரு மிஷின் கிடைக்குமா?"





மனநோய் டாக்டர்: எடிட்டர் சார்! உங்க கார்ட்டூனிஸ்ட் கிட்ட இந்த வெயில் காலத்துல ஸம்மர் ஜோக்ஸ் நீங்க கேட்டது தப்பு! ஆஸ்பத்திரி சுவரை என்ன பாடு படுத்தறார் பாருங்க.



''இன்னுப்பா தொரை! சாராயம் இம்மா விலே?''
''ஸோலார் எனர்ஜியிலே காய்ச்சின சாராயம்பா! சும்மாவா...''
வர் நுங்கம்பாக்கம்! இவர் மீனம்பாக்கம்!''
அதான் இப்படி heated exchanges!...''
''உனக்கென்னப்பா! தொழில்லே நல்லா சம்பாரிச்சுட்டே! குடை புடிக்க ஆள் வெச்சுக் கிட்டுச் சொகுசா உருண்டு போறே! என்னைச் சொல்லு!''
''பையன் 'மீனம்பாக்க'த்துக்காரராச்சே! எந்தப் பொண்ணைப் பார்த்தாலும் 'ஜில்'னு தெரியும்! இவளோ ஊட்டிக்காரி! குளிர்ச்சியா 'ஜில்'னு இருக்கான்னு சொல்லப் போறான்!''





Mudra/RTI/ 219 Tam.

சீவம்-தவம் சுந்தரம்

ஜெயரதன்



காலர் மடிப்பில் இற்றுப் போகத் தொடங்கியிருந்த சட்டையைக் கவனமாக எடுத்துப் போட்டுக் கொண்ட சுந்தரம், அலுவலகத்துக்குக் கிளம்பினான். பின்னாலேயே வந்து நின்ற மரகதம், ஏதோ சொல்ல விரும்பியவளாகக் கூட்டி விழுங்கினாள்.

''சரி... நான் கிளம்பறேன். நாழியாச்சு. கொழந்தைக்குக் கஷாயம் வச்சுக் குடு... குங்குமப் பத்துப் போடு...''

சொல்லிக் கொண்டே காலில் செருப்பை மாட்டிக் கொண்டு கிளம்பினான் சுந்தரம்.

மதன கோபால் பெர்டிலைசர்ஸ் நிறுவனத்தில் கோடௌன் கிளார்க் வேலை. கிடங்கில் இருக்கும் உர மூட்டைகளுக்கு இவனும் மானேஜர் சுந்தரமூர்த்தியுமாய்க் கூட்டுப் பொறுப்பு. ஆளுக்கு ஒரு பூட்டு, சாவி. இவன் இல்லாமல் அவரோ, அவர் இல்லாமல் இவனோ திறக்க முடியாது. கடுமையான பொறுப்பு. சம்பளம் மட்டும் இருநூற்றைம்பது ரூபாய்தான். விற்கிற விலைவாசியில் அப்பா, அம்மா, கல்யாணத்துக்கு நிற்கும் தங்கை லட்சுமி, மனைவி மரகதம், குழந்தை ரகு ஆக இத்தனை பேர் எப்படிச் சாப்பிடுவது? காரில் வந்து, பங்களாவில் இருக்கிற முதலாளிக்கு யார் எடுத்துச் சொல்வது?

நினைவுகள் நெஞ்சை அழுத்த, உருக்கும் வெய்யிலில் வேகமாய் நடந்தான் சுந்தரம்.

குழந்தை ரகுவுக்கு மூன்று நாட்களாய்க் கடுங் காய்ச்சல். கை மருந்தாய் என்னவெல்லாமோ கொடுத்துப் பார்த்தாயிற்று.

'என்ன செய்வேன் ஆண்டவனே! எனக்கு எதற்கு இத்தனை சோதனை? இன்னொருவர் காசுக்கு ஆசைப்படாமல், இன்னொருவர் பொருளில் மனம் வைக்காமல் தப்புத் தண்டா செய்யாமல், நேர்மையாய், பொய் சொல்லாமல் இருந்ததற்கு இதுதானா பரிசு? உண்மைக்கும் நேர்மைக்கும் இதுதானா மதிப்பு?'

மனத்துக்குள் விம்மி வெடித்தான் சுந்தரம். அவன் தகப்பனார் காலத்திலிருந்தே தொடர்ந்து வருவதுதான் இந்த வறுமை. அவர் சொல்வார்:

''சுந்தரம்! பொய் சொல்லப்படாது. இன்னொருத்தர் காசுக்கு ஆசைப்படப்படாது. நம்பிக்கைத் துரோகம் செய்யப்படாது. கஷ்டத்தைப் பொறுமையாகச் சகிக்கணும். அப்பத்தான் சுபிட்சம் வரும். வறுமையும் ஒரு தபசு தாண்டா கொழந்தே!''

நம்பிக்கையும் தீவிரமும் சுடர் விடுகிற அவர் கண்களையே பார்த்துக் கொண்டிருப்பான் சுந்தரம்.

அந்தப் பிரகாசமெல்லாம் கொஞ்சம் கொஞ்சமாய்ப் போய், ஏதோ 'க்ளாகோமா' என்ற பெயரில் கண் பார்வையே போன பின்னும் அப்பாவின் சாம்ராஜ்யம் கயிற்றுக் கட்டிலில் எல்லை சுருங்கிப் போனபோதும் அவர் தம் தவத்தைக் கைவிடவே இல்லை.

பத்தாகி விட்டால் மானேஜர் சுந்தரமூர்த்தி கத்தத் தொடங்குவார். ஏற்கனவே இவன்மீது ஏக எரிச்சல் அவருக்கு. கோடவுன் கீப்பராக ஒரு தூசு, தும்பு கோடவுனை விட்டு வெளியே போக விடாமல் கண்டிப்பாய் இருக்கிறான் என்று அவன்மீது அவருக்கு ஆதங்கம் நிறைய உண்டு. வாய்ப்புக் கிடைக்கிறபோதெல்லாம் தம் கோபத்தை வெளிக்காட்டத் தயங்குவதில்லை அவர்.

வாய்ப்புத் தரக்கூடாது என்ற வேகத்தில் வேக வேகமாய் உள்ளே நுழைந்தான். கட்டடத்தினுள்ளிருந்த குளுமை, வெய்யிலின் எரிச்சலுக்கு இதமாயிருந்தது.

சில நிமிடங்களில் தந்தை சிவத்தையும், தவத்தையும் குழந்தை ரகுவையும் மறந்து வேலையினுள் மூழ்கிப் போனான் சுந்தரம்.

''சார்... உங்களைத் தேடிக்கிட்டு யாரோ ஒரு பையன் வந்திருக்கான் சார்...'' என்று ப்யூன் வந்து சொன்னதும், குனிந்து எழுதிக் கொண்டிருந்த சுந்தரம் விருட்டென்று தலை நிமிர்ந்தான்.

''என்னைத் தேடியா, யாரு?''

பாபுவைக் கண்டதும் சொரேலென்றது.

''என்னடா பாபு?''

''மாமா, மாமி உங்களைக் கையோட அழைச்சுண்டு வரச் சொன்னா. ரகுவுக்கு உடம்பு ரொம்பப் பயமா யிருக்காம்...''

வழக்கத்துக்கு விரோதமாய், வெகு வேகமாய் உள்ளே நுழைந்த சுந்தரத்தை, ஒரு பரபரப்புடன் நிமிர்ந்து பார்த்தார் சுந்தரமூர்த்தி.

''சார்... என் பையனுக்கு உடம்பு சரியில்லேன்னு வீட்டிலிருந்து தகவல் வந்திருக்கு... நான் போறேன் சார்...''

''சீக்கிரம் போங்க சார். நம்ம ஆபீஸ் சைக்கிளை எடுத்துக்கிட்டுப் போங்க. எதுனாச்சும் பணம் வேணும்னா தயங்காமெக் கேளுங்க... வீணா சௌரசம் பார்த்துக்கிட்டு இருந்துடாதீங்க... மொதல்லே கொழந்தையைக் கவனியுங்க.. போங்க...''

பதற்றத்துடன் வீட்டுக்குள் நுழைந்தான் சுந்தரம்.

சுந்தரத்தைப் பார்த்ததும் மரகதத்துக்குத் துக்கம் விம்மலாய் வெடித்து வந்தது.

''நீங்க ஆபீசுக்குப் போனதும் குழந்தைக்குப் பசும் பால்லே வெந்நீரை விட்டுக் கொடுக்கலாம்னு பார்த்தேன். உள்ளேயே செல்லல்லே. தொண்டைக் குழியிலேயே 'களக் களக்'ன்னு சத்தம் கேக்கறது. எனக்கு ரொம்பப் பயமா யிருக்கு. யாராவது டாக்டர்கிட்டக் காட்டலேன்னு...''

ரகுவைத் தூக்கித் தோளில் சாத்திக் கொண்டவன் வேகமாய் வெளியேறினான். துணியை எடுத்துத் தோளில் சாத்திக்கொண்டது மாதிரி உடல் துவண்டு கொண்டிருந்தது.

டாக்டர் சுகவனம் எம். பி. பி.எஸ். முகத்தில் உணர்ச்சிகளே இல்லை. நிதானமாய்க் குழந்தையைச் சோதிப்பதை. ஒரு நடுக்கத்துடன் பார்த்துக் கொண்டிருந்தான் சுந்தரம்.

''மிஸ்டர், இந்த ஊசி மருந்துகளையும், மாத்திரைகளையும் உடனே வாங்கிட்டு வாங்க. நான் இப்போதைக்கு ஊசி போட்டு வைக்கிறேன். கண்டிஷன் சீரியஸ்.. அக்யூட் டிஃப்தீரியா... மூணு நாளா என்ன பண்ணிக்கிட்டு இருந்தீங்க... பாத்தா படிச்ச மாதிரி வேறே இருக்குது... உடனேயே இந்த மருந்துகளைக் கொடுக்காட்டா சில மணி நேரங்களுக்கு மேலே தாங்காது.... ரஷ் அப்!...''

''உங்க கிட்டயே இருந்தா போட்டுடுங்களேன், ப்ளீஸ்....''

சுந்தரத்தின் குரலில் கெஞ்சல் தெரிந்தது.

''எங்க கிட்டே இதெல்லாம் வச்சுக்கிடறதில்லே. காஸ்ட்லி. டயத்தை வேஸ்ட் பண்ணாம உடனே வாங்கிட்டு வாங்க...''

பேசிக்கொண்டே குழந்தையின் தொண்டையில் ஊசி மருந்தை ஏற்றினார் டாக்டர். வலி தாங்காமல் முனகினான் குழந்தை.

''சரி... டென் ருபீஸ் குடுங்க...''

''இப்போ கையிலே ரெடியா இல்லே. மொத்தமா எல்லாத்தையும் சம்பளம் வாங்கிக் குடுத்தடறேன்... நான் மதன கோபால் பெர்டிலைசர்ஸிலே....''

டாக்டர் முகத்தில் கடுகடுப்பு பரவ, முகத்தில் அறையாத தோஷமாக ஸ்பிரிங் கதவைத் திறந்து கொண்டு உள்ளே போனார்.

வாசற்படியிலேயே நின்று வழியைப் பார்த்துக் கொண்டிருந்த மரகதம், குழந்தையை வாங்கிக் கொண்டாள்.

''டாக்டர் என்ன சொன்னார்?''

அவள் குரலில் பரபரப்பு வந்தது.

''மரகதம்... கவலைப்படாதே... குழந்தையைப் பார்த்துக்கோ. நான் போய் மருந்து வாங்கிண்டு வந்துடறேன்...''

சொல்லிக் கொண்டே அலுவலகத்துக்குச் சைக்கிளில் விரைந்தான்.

லஞ்ச் இடை வெளியாதலால் யாரையும் காணோம். வெறிச்சென்ற அலுவலகமே வயிற்றைக் கலக்கியது.

''வாங்க சுந்தரம்!... உங்க பையனுக்கு எப்படி இருக்குது?''

மானேஜர் அறையில் நுழைந்த அவனைச் சுந்தரமூர்த்தி கேட்டார். சொன்னான்.



சுந்தரத்தை உன்னிப்பாய்ப் பார்த்தார் சுந்தரமூர்த்தி. தம் பர்ஸிலிருந்து ஒரு நூறு ரூபாய் நோட்டை எடுத்து அவன் முன்னால் நீட்டினார்.

திகைத்து மலைத்துப் போன சுந்தரத்தைக் கையமர்த்தினார் சுந்தரமூர்த்தி. பேச லானார்.

''பதறாம ஒக்காருங்க. வாழ்க்கையிலே சில விஷயங்களை நான் ஒங்களுக்குச் சொல்லப் போறேன்... உங்க கொளந்தே உசிரு ஊசலாடிக்கிட்டு இருக்குது. அதைக் காப்பாத்த ஒங்களுக்குப்பணம் வேணும். இப்போ விஷயத்துக்கு வரேன்... நம்ப கோடௌன்ல உர மூட்டைங்க புதுசா வந்து எறங்கி இருக்குது. மொதலாளியும் ஊரிலே இல்லே. மெட்ராஸ் போயிருக்காரு. இப்போ ஒரத்துக்கு நல்ல டிமாண்ட். பாதி மூட்டையைப் பிளாக்குலே நல்ல விலைக்கு வித்துருவோம். ஆளுக்குப் பாதியா எடுத்துக்கிடுவோம். பெறகு மூட்டைகளை நெறவிச் சாம்பலைக் கலந்து அடுக்கிட்டோம்னு கணக்குச் சரியாப் போயிடும்... ஒரு பயலுக்குத் தெரியாம நான் பாத்துக்கிறேன்..... தொடர்ந்து ஒத்துழைச்சீங்கன்னு உங்க நெரந்தரக் கஷ்டமும் ஒளிஞ்சு போயிடும்.''

''அக்கிரமம்! அநியாயம்! நம்மை நம்பி வேலைக்கு வைச்சுப் பொறுப்பைக் கொடுத்திருக்கிற மொதலாளிக்குத் துரோகம் பண்ணி, ஏமாத்திப் பணம் சம்பாதிச்சாவது சாப்பிடணுமா? அதுக்கு உயிரை விட்டு விடலாமே?... நான் செத்தாலும் இதற்குச் சம்மதிக்க மாட்டேன்...''

''...எனக்குத் தெரியும், உங்களாலே இதையெல்லாம் ஜீரணிக்க முடியாதுன்னு. போங்க ஒங்க சௌகரியம் போலச் செஞ்சுக்குங்க... ஆனா ஒண்ணு. இதையெல்லாம் மொதலாளிக்கிட்டச் சொல்லி என்னைக் காட்டிக் கொடுக்கலாம்னு நினைச்சீங்கன்னா, ஒங்களுக்குத்தான் ஆபத்தா முடியும். என்னைக் காப்பாத்திக்கிட என்னாலே முடியும். ஜாக்கிரதை.'' மிரட்டும் குரலில் சுந்தரமூர்த்தி எச்சரித்தார்



அருள்வாக்கு

அன்னமும் எண்ணமும்

இன்று நாம் படும் அநேக இன்னல்களுக்குக்காரணம், வெளி நாட்டுப் பழக்க வழக்கங்களையே நாமும் காப்பி அடிப்பதுதான். இவற்றில் ஒன்று பயிர் பச்சைகளுக்கு ரஸாயன எரு போடுவது. இந்த வழக்கத்தை விட்டு இயற்கையான எரு உபயோகிக்க ஆரம்பித்தாலே போதும், நம் தேசத்துக்கே விசேஷமான ஞானத்தைத் திரும்பப் பெறுவதில் வெகுதூரம் முன்னேறிவிடுவோம்.

நம்முடைய மனசு, எண்ணங்கள் சுத்தமாக இருக்க வேண்டுமானால், நாம் உண்ணும் உணவு தூயதாக இருப்பது மிகவும் அவசியம். தானியத்தையும், காய்கறிகளையும் சமைக்கிறபோதில் அவற்றில் பலவிதமாகத் தூய்மைக் குறைவு உண்டாவது ஒரு பக்கம் இருக்கட்டும், முதலில் இந்தத் தானியங்கள் அல்லது காய்கறிகளே எப்படி விளைச்சல் செய்யப்பட்டன என்று கவனிக்க வேண்டும். ரஸாயன உரம் போட்டு விளைவிக்கும் பயிர் பச்சைகள் சுத்தக் குறைவானவைதாம்.

பசும் சாணத்தை உரமாக உபயோகிப்பது தான் நம் பழைய வழக்கம். பசு ஸத்வ குணம் நிறைந்த பிராணி. எனவே அந்த உரத்திலிருந்து விளைந்த பயிரும் நமக்கு ஸத்வ குணம் உண்டாக உதவியது. இப்போது உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்ற ஆர்வத்தில் கெமிகல் பெர்டிலைஸருக்கு மாறியிருக்கிறோம். மனசுக்கு அநுகுணமாகத் தேகத்தை வளர்க்கிற முறையே இதனால் மாறிவிட்டிருக்கிறது. இது மிகவும் கவனத்துக்குரிய விஷயம் என்று நான் கருதுவதால் தான் இந்தத் தவற்றைத் திருத்த வேண்டும் என அடிக்கடி வலியுறுத்தி வருகிறேன். உணவு உற்பத்தியைப் போலவே அல்லது அதை விடவும் மக்களின் மன இயல்பை நல்லபடியாக வளர்ப்பது அவசியமல்லவா?

தூய உணவு என்றால், நன்றாகத் தீட்டி 'பாலிஷ்' செய்த அரிசியை வெள்ளை வெளேரென்று சமைத்துப் போடுவதல்ல. பலவிதமான எச்சில், துப்பல், அநாசாரங்களைச் செய்து கொண்டே ஒரு லாண்டரியில் துணியை வெள்ளை வெளேரென்று ஆக்கிக் கொடுத்து விட்டால் அதை மடி என்று வைத்துக் கொள்வோமா? எனவே பார்வைக்கு வெளுப்பாக இருந்து விட்டாலே ஒன்றை நல்லது என்றோ தூயது என்றோ ஆசாரமானது என்றோ சொல்ல முடியாது. வெளியில்சுத்தமாகத்தெரிவது வேறு, உள்ளே புனிதமாக இருப்பது வேறு.

சமைக்கிறவனின் மனோபாவம் அவன் சமைக்கிற உணவில் இறங்கி, அதை உண்பவன் உள்ளும் சென்று விடுகிறது. ஸத்வ குண அபிவிருத்திக்கு உதவுகிற உணவுகள் என்று கீதை முதலான சாஸ்திரங்களில் சொல்லியுள்ள வஸ்துக்களை நல்ல ஸத்சிந்தனையோடு சமையல் செய்து போட்டால் அது போஜனம் செய்கிறவனுக்குச் சித்த சுத்தியைக் கொடுக்கும்.

—ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி ஜயேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்

வேந்தர்க்கழகு மணிமுடிதரித்தல்-உயர் மாந்தர்க்கழகாம் அணிமுடி வளர்த்தல்!

அணிமுடி வளர்க்கும் ஆற்றல்மிக்க மூலிகை மருந்துகள்



ஹெர்பல் ஹேர் க்ரீம்
(HERBAL HAIR CREAM)
இள நரையும் வழுக்கையதும் இல்லாமல் முடிவளரும் விளைமையினைப் பெறுவதற்கே வகை செய்யும் ஹேர் க்ரீம்

ஹெர்பல் ஹேர் டானிக்
(HERBAL HAIR TONIC)
தேங்காயின் எண்ணெயிலே தேர்ந்த பல மூலிகையால் பாங்காக முடி வளர்க்கும் பைங்கூந்தல் ஹேர் டானிக்

ஹெர்பல் ஹேர் கேர்
(HERBAL HAIR CARE)
வற்றாத நுரை வளமும் வளமார்ந்த நறுமணமும் குற்றால அருவியினில் குளித்த குளுமை தரும் முத்தான மூலிகை ஷாம்பு

★ முடி உதிர்தல் நின்றுவிடும்! ★ இள நரைகள் கருமை பெறும்!
★ வளமான முடி வளரும்! ★ வழுக்கையினைத் தவிர்த்திடலாம்!

கவியரசர் கண்ணதாசன் அவர்கள் குமுதத்தில் (26-6-80) பாராட்டியுள்ள மூலிகை மருத்துவ ஆய்வாளர் டாக்டர் இ ஷாஹுல் ஹமீது அவர்கள் உருவாக்கியுள்ள வலிமைமிக்க சித்த மருத்துவ மூலிகை மருந்துகள்!

தயாரிப்பாளர்கள் :

M/s. CROWN HERBAL PRODUCTS
55, Harris Road, Pudupet, Madras-600 002

CROWN

முன்பணம் கட்டக்கூடிய் வசதியுடன் விநியோகத் துறையில் தகுதியுள்ள விற்பனையாளர்கள் உடனடியாக விண்ணப்பிக்கவும

ஆவேசம் அடங்காதவனாய், கைகள் பதறத் தள்ளாடித் தள்ளாடித் தன் இருக்கைக்கு வந்த சுந்தரம் அந்த ஹாலை விட்டு யாரோ 'சட்'டென்று வெளியே செல்வதைக் கவனிக்கவில்லை.

சோர்ந்து போய்த் தன் இடத்தில் அமர்ந்து கொண்டான். உடலில் இருந்த ரத்தமெல்லாம் வற்றிப் போன மாதிரி உடம்பும் உள்ளமும் ஓய்ந்து போயிற்று. கண்களில் பொங்கி வந்த கண்ணீரைத் துடைக்கக் கூடத் தோன்றாதவனாகக் கற்சிலை மாதிரி அமர்ந்திருந்தான் சுந்தரம்.

ரகுவுக்கு இப்போது எப்படி இருக்கும்? மருந்து வாங்கி வருகிறேன் என்று சொல்லி விட்டு வந்தானே? மரகதத்துக்கு என்ன பதில் சொல்வது? குழந்தை அவ்வளவுதானா? எப்படிக் காப்பாற்றப் போகிறான் அவன்?

மனம் கனத்துப் போயிற்று சுந்தரத்துக்கு.

புயலாய் அவனுள் ஏதோ எழுந்தது.

அவன் கண் முன்னால் குழந்தை ரகு, கொஞ்சம் கொஞ்சமாய் விறைத்துக்கொண்டிருந்தான்.

தீர்மானத்துடன் மானேஜர் அறைக்குள் நுழைந்தான் சுந்தரம்.

மானேஜரிடம் வாங்கிய பணத்தில் மருந்துகளை வாங்கிக் கொண்டு வீட்டுக்கு ஓடினான் சுந்தரம்.

தந்தை: "என்னடா? நேத்து பார்த்துவிட்டு வந்தபெண்ணைப்பத்தி என்ன நினைக்கிறே? பிடிச்சிருக்கா?"

மகன்: "ஆரோக்கியமா ஜம்முனு இருக்காப்பா. நல்ல குடும்பப்பாங்கான பொண்ணுப்பா!"

தந்தை: "அப்ப வர்ற முகூர்த்தத்திலே முடிச்சிட வேண்டியதுதான்!"

மகன்: "ஐயையோ! வேண்டாம்பா!"


தந்தை: "ஏண்டா வேண்டாங்கிறே?"

மகன்: "அவளை முன்னாடியே காதலிச்சுட்டேனே!"

தந்தை: "ரொம்ப நல்லதாப் போச்சு! அப்புறம் ஏன் வேணாங்கிறே?"

மகன்: "நான் காதலிச்ச பெண்ணைக் கல்யாணம் செஞ்சுக்கறதில்லேன்னு முடிவு பண்ணியிருக்கேப்பா!"

- ஆடுதுறை கண்ணன்



தெருவுக்குள் ஓடியதும் அவன் வீட்டு வாசலில் ஒரு கார் நிற்பது தெரிந்தது.

சற்று அருகே போனதுமே தெரிந்துவிட்டது. தனது முதலாளியின் கார் என்று.

முதலாளி ஏன் தன் வீட்டுக்கு வந்திருக்கிறார்? அவர் எப்போது சென்னையிலிருந்து திரும்பினார்?

மனம் படபடக்க, வீட்டுக்குள் நுழைந்தான்.

டாக்டர் சுகவனம் குழந்தை ரகுவுக்கு வைத்தியம் செய்து கொண்டிருந்தார். மரகதமும் அம்மாவும் குழந்தை அருகே நின்று கொண்டிருந்தார்கள். டாக்டரின் சமீபத்தில் ஜரிகை வேட்டி தரையில் புரள, அவனது முதலாளி மதனகோபால் நாயுடு நின்று கொண்டிருந்தார். கண்ணீர் மல்க அமர்ந்திருந்தார் அவன் அப்பா சிவம்.

மரகதம்தான் அவனை முதலில் எதிர்ட்டுப் பார்த்தாள்.

"இதோ அவரே வந்து விட்டார்..." என்றாள் குரலில் மகிழ்ச்சி தெரிய.

சட்டென்று திரும்பி அவனைப் பார்த்தார் முதலாளி.

"...மெட்ராஸ்லேர்ந்து இப்பத்தான் ஆபீசுக்கு வந்தேன். மானேஜர் அறையிலே ஏதோ பேச்சுக் குரல் கேட்கவும் வெளியே நின்று எல்லாத்தையும் கேட்டேன்..."

சொல்லிக் கொண்டே, அவனருகே வந்து அவன் தோள்களைத் தட்டிக் கொடுத்தார்.

"அப்பவே உள்ளே வந்து விஷயத்தை முடிச்சிருப்பேன். உங்க வீட்டுக்கு வந்து நானே ஏற்பாடுகளைச் செஞ்சாத்தான் மனசு கேக்கும்னு நானே நேரே ஒங்க வீட்டுக்கு ஓடியாந்தேன். இப்படி ஒரு ஆளு எங்கிட்ட வேலை செய்யறதை தெரிஞ்சுக்காம விட்டது எவ்வளவு பெரிய தப்புன்னு தெரியுது... அந்த மானேஜர் பயலைச் சீட்டுக் கிழிச்சு அனுப்பிட்டு ஒங்களை அந்த வேலையிலே உக்காத்தி வச்சாத்தான் என் மனசு ஆறும்... என்னை நம்பி இத்தனை நாளு உழைச்சதுக்கு உங்களுக்கு எதுனாச்சும் செய்யலேன்னு பாவம் என்னைச் சும்மா விடாது... ஒங்களைத் தூக்கி நிறுத்தறதுதான் என் முதல் வேலை...புள்ளையை நல்லாக் கவனிச்சுக்கிடுங்க. சொகமான பொறவு ஆபீசுக்கு வாங்க...நல்லவங்க கஷ்டப்படக் கூடாது. நான் பார்த்துக்கிறேன்."

மதன கோபால் நாயுடு வார்த்தைகளைத் தொடுத்து மாலையாக்கிச் சுந்தரத்துக்குச் சூட்டிக்கொண்டிருந்தார்.

வைத்தியம் முடிந்து கிளம்பிய டாக்டர் சுகவனம், மரகதத்திடம் ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார்.

கண்களில் மலர்ச்சி தெரிய அவள் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்தாள்.

கையிலிருந்த மருந்துகளும், பாக்கிப் பணமும் அக்கினியாய் மாறி அவன் கைகளைப் பொசுக்கிக் கொண்டிருந்தன.

அவன் அப்பா சிவம் எப்போதும் சொல்லுறமாதிரி, தவம் பொய்க்கலை, பலனளித்து விட்டது. ஜெயித்து விட்டது.

சுந்தரம்தான் தோற்றுப் போனான்!

அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி 1981


அமரர் கல்கி அவர்களின் நினைவாக ஆண்டுதோறும் நடக்கும் இந்தச் சிறுகதைப் போட்டியில் வழக்கம் போல் இந்த ஆண்டும் எழுத்தாளர்கள் பெருமளவில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு ஒத்துழைக்க வேண்டுகிறோம்.

முதல் பரிசு	**ரூ. 1000**
இரண்டாம் பரிசு	**ரூ. 500**
மூன்றும் பரிசு (இரு கதைகளுக்கு தலா ரூ. 250 வீதம்)	**ரூ. 500**

ஆகமொத்தம் ரூ. 2000 பரிசுகளாக வழங்கப்பெறும். தவிர பிரசுரத்துக்கு ஏற்கப்படும் ஒவ்வொரு கதையும் ரூ. 100 சன்மானம் பெறும். அறிமுக எழுத்தாளருக்குப் போனஸ் உண்டு.

- கதைகள் சொந்தக் கற்பனை என்ற உறுதிமொழி தேவை.
- அறிமுக எழுத்தாளர் எனில் இதற்கு முன் எந்தப் பத்திரிகையிலும் எழுதியதில்லை என்றும் போட்டி முடிவு அறிவிக்கப்படும்வரை எழுத மாட்டேன் எனவும் உறுதிமொழி தரவேண்டும்.
- நடுவர் குழு கதைகளைப் பரிசீலித்துப் பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்கும்.
- முடிவு தேதி ஜூன் 15.
- உறையின் மேல் 'அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டி' என்று குறிப்பிடுதல் அவசியம்.
- பிரசுரத்துக்கு ஏற்கப்படாத கதைகளைத் திரும்பப் பெறப் போதிய அளவு தபால் தலை ஒட்டிய சுய விலாசமிட்ட உறையைக் கதையுடன் கூடவே அனுப்புதல் வேண்டும். பின்னால் தனியே அனுப்பிப் பயனில்லை.
- கதைகள் கல்கியில் நாலு பக்கங்களுக்கு மேற்படாதிருப்பது நலம். ஒருவர் எத்தனை கதைகள் வேண்டுமானாலும் அனுப்பலாம்.
- எவ்விதக் கடிதப் போக்குவரத்தும் கிடையாது.
- சந்தேகம் எழும் விஷயங்களில் கல்கி ஆசிரியர் தீர்ப்பே முடிவானது.

ஆசிரியர் கல்கி, சென்னை-600 032





இருட்டில் அணைத்த விளக்கு

மகரிஷி

22

கோமதியின் படுக்கை யருகில் நின்ற நர்ஸ் அவளுடைய நாடித் துடிப்பைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

மெதுவாக ரத்தம் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். அடிபட்டதில் ஏராளமான ரத்தம் வெளியேறியிருந்தது.

இரண்டு பாட்டில் முடிந்துவிட்டது.

போலீஸ் ஜீப் அருகில் நின்று கொண்டிருந்த நான்கைந்து கான்ஸ்டேபிள்களில் ஒருவரை மட்டும் தனியே அழைத்து அவரிடம் ஏதோ கூறினார், திருமேனி.

அவர் சற்றுத் தள்ளிப் போய் சல்யூட் ஒன்றை அடித்துவிட்டு, அவருடைய உத்தரவைப் பெற்றுக் கொண்டு வெளியேறினார்.

திருமேனி ஓர் உயர் போலீஸ் அதிகாரி. அவருக்குக் குற்றவாளிகளின் மனோ தத்துவம் தெரியும். எந்த நேரத்தில் எப்படி நடந்து கொள்வார்கள் என்பது தெரியும்.

அவர் யூகம் நூற்றுக்குத் தொண்ணூறு சதவிகிதம் சரியாகவே இருக்கும். சிலரின் பார்வையிலும், சிலரின் நடவடிக்கைகளிலும் நான் குற்றவாளி என்று நெற்றியில் ஒட்டியிருக்கிற மாதிரி தெரியும். சிலரின் நடமாட்டங்கள் அவர்களைப் பளிச்சென்று அடையாளம் காட்டி விடுகிற சந்தர்ப்பங்களையும் அவர் பார்த்திருக்கிறார்.

'இவனுக்கு இங்கே என்ன வேலை?'

சுமங்களாவுக்கு அருகில் காரை நிறுத்திக் கொண்டு பேசிய சுகுமாரனைப் பார்த்தபோது திருமேனிக்கு இந்தச் சந்தேகம்தான் தோன்றியது.

அவன் மாடர்ன் ட்ரை கிளீனிங்கில் வேலை செய்வது பற்றிக்கூட அவருக்கு அவ்வளவாகத் தெரிய நியாயமில்லை. என்றாலும் இவன் பரமேஸ்வரனின் நண்பன், பரமேஸ்வரனின் மேல் ருஜுப்படுத்த முடியாத சில குற்றங்களில் இவனும் சம்பந்தப்பட்டிருக்கிறான். அவன் தப்பித்துக் கொள்ளும்போது இவனும் தப்பித்துக் கொள்கிறான்.

அன்று சுமங்களாவைத் தனிமைப்படுத்திப் பரமேஸ்வரனின் நேரிடையான தாக்குதலுக்கு அவளை உட்படுத்திவிட்டு ஒன்றும் தெரியாதவன் போல் நடித்திருக்கிறான்.

பரமேஸ்வரன் சுமங்களாவை அடித்தது அவர்களது சொந்த விவகாரம் என்று விட்டு விடலாம். ஆனால், இதற்கு சுகுமாரன் சந்தர்ப்பம் உண்டாக்கித் தந்ததைப் பார்க்கும்போது, அது வேறு விதமாகத் தோன்றியது அவருக்கு.

அந்த இரண்டு அயோக்கியர்களுமாகச் சேர்ந்து கொண்டு இந்த அப்பாவிப் பெண்ணிடம் ஏதோ--விளையாடுகிறார்கள். அவளை முழுமையாக ஒழித்துக்கட்டப்பார்க்கிறார்கள்!

இது கோமதியின் பயம். இதை அவரும் முழுமையாக ஏற்றுக் கொண்டார். தம் தங்கை அவளுக்கு எல்லா வகையிலும் உதவுகிறாள், உடனிருக்கிறாள், அரவணைக்கிறாள் என்கிற ஆத்திரம் அவர்களுக்கு இருப்பதில் வியப்பில்லை.

குற்றங்களில் எல்லாத் தன்மைகள் பற்றியும் அவர் ஆராயக் கடமைப்பட்டவர். ஆராய்ந்தார். ஆராய்ந்து கொண்டிருக்கிறார்.

மருத்துவமனை வாசலில் எவ்வித முகாந்தரமுமின்றி சுகுமாரனின் நடமாட்டம் அவர் சிந்தனையைத் தூண்டியது. இவன் இங்கே வரவேண்டிய அவசியமே இல்லை.

குற்றம் செய்துவிட்டுக் குற்றவாளி கூட்டத்துடன் கூட்டமாகக் கலந்து நிற்

பான். ஒன்றும் தெரியாதவன் போலப் பிறரிடம் விசாரிப்பான். மற்றவர்களை விட அவன்தான் அதிக அனுதாபப் படுவான். இவைகளை யெல்லாம் அவர் அறியாதவர் அல்ல.

டாக்டருடன் திருமேனி பேசிக் கொண் டிருந்தாலும் அவருடைய கவனமெல்லாம் மருத்துவமனை நுழை வாசலிலும், சுற்றுப் புறச் சூழ்நிலையிலும் அலைந்து கொண் டிருந்தது.

நோயாளிகள் வருவதும் போவதுமாக இருந்தார்கள். வண்டியில் வந்து இறங்கு வோரும். ஆட்டோ ரிக்ஷாவில் இறங்க முடியாமல் இறங்கும் நோயாளிகளும் அதி கரித்துக் கொண்டிருந்த நேரம்.

வேகமாக ஸ்டாப் நர்ஸ் டாக்டரிடம் ஓடி வந்தாள்.

மெதுவாக மீண்டும் சுய நினை வுக்குத் திரும்பிக்கொண்டிருந் தாள், கோமதி.

டாக்டர்கள் இந்த நிலைக்கா கக் காத்துக் கொண்டிருந்த வர்கள் போலச் சுறுசுறுப்புடன் செயல்பட்டனர்.

வெளியே ஓடிவந்த நர்ஸ், திருமேனி யிடம் வந்தாள்

''அவங்க உங்களைக் கூப்பிடறாங்க. கொஞ்சம் பிரக்ஞை வந்திருக்கு.''

திருமேனி உள்ளே போனார்.

''கோமதி!''

அவள் தன் சகோதரனைப் பார்த் தாள்.

''யாரம்மா உன்மேல் இப்படி மோதித் தள்ளியது?''

''சு...மா...சு...கு...மா....?...''

அவ்வளவுதான் அவளால் பேச முடிந் தது. அருகில் நின்ற கான்ஸ்டேபிளிடம் அவர் ஏதோ கூற...

கான்ஸ்டபிள் வெளியே போனார்.

''சரி... பேச வேண்டாம்... அப் புறம் பேசிக்கலாம். உனக்கு ஒன்னு மில்லே.''

டாக்டரிடம் சென்றார், திருமேனி. அவரிடம் தணிந்த குரலில் ஏதோ கூறிவிட்டு ஓட்டமும் நடையுமாக மருத் துவ மனையை விட்டு வெளியே வந் தார்.

அங்கே!

சுமங்களாவைக் காணவில்லை.

காரில் இருந்த சுகுமாரனையும் காண வில்லை.

அவர் மருத்துவ மனைக்குள் ஓடிவந் தார். அங்கு நின்ற மாணவிகள் கூட்டத் தில் சுமங்களாவைத் தேடினார்.

''சுமங்களா எங்கே?''

''அவங்க வாசல்லே ஒரு கார்கிட்டே நின்னு யாரிடமோ பேசிக்கிட்டிருந்தாங் களே!'' — ஒரு மாணவி பதில் சொன் னாள்.

போலீஸ் ஜீப்பில் பொருத்தப்பட் டிருந்த ஒயர்லெஸ் செட் அருகில் வந்து உட்கார்ந்தார் திருமேனி. சற்று முன் வாசலில் நின்ற சுகுமாரனின் காரைக் கண் காணிக்க அனுப்பப்பட்ட கான்ஸ்டேபிள் எங்கிருந்தோ ஒயர்லெஸ் செட்டில் குரல் கொடுத்தார்.

''அதிலே அந்தப் பொண்ணு இருக்குதா? தெரியுதா?... ஓவர்.''



''பொண்ணு இருக்குதுங்க... ஓவர்.''

''கார் எங்கே போவுது... எங்கே திக்குன்னு உடனுக்குடனே தகவல் குடுங்க... ஓவர்.''

ஒயர்லெஸ் அதிகாரியிடம் போனைக் கொடுத்துவிட்டு மிக வேகமாகத் தம் ஜீப்புக்கு வந்தார், திருமேனி.

சில நிமிஷங்களில் நான்கு பேர் அடங்கிய போலீஸ் படை அவர் தலைமையில் கூடியது.

சுகுமாரனின் உள்நோக்கத்தைச் சுமங்களா சில நிமிஷங்களில் புரிந்து கொண்டு விட்டாள். இந்நேரத்திலும் கூட அவள் அதிகம் அதிர்ச்சியடையவில்லை.

இவனுடைய இந்தச் செய்கை கூட ஏற்கெனவே திட்டமிடப்பட்டிருக்கிற செய்கை தான்.

''கோமதியை, மோட்டார் சைக்கிளில் வந்து யாரோ இடித்துத் தள்ளிவிட்டுப் போய்விட்டான். அவள் அந்த மருத்துவ மனையில் ரொம்ப ஆபத்தான நிலையில் இருக்கிறாள்'' என்றான்.

அவன், புன்னகை மட்டும் செய்தான்.

அவளை, அவன் காரில் ஏறச் சொல்லி வற்புறுத்தும்போது, ''ஹோட்டல் உட்லண்ட்ஸில் என்னுடைய அட்வகேட்டை உட்கார வைத்துவிட்டு வந்திருக்கிறேன். அவரிடம் பேசிவிட்டு, உடனே இங்கே கொண்டு வந்து விட்டு விடுகிறேன். பத்து நிமிஷத்துக்குள் எல்லாம் முடிந்து விடும்'' என்றார்.

எதிர்ப்புறம் பார்த்தாள். பரமேஸ்வரன் மறைவாக நின்று கொண்டிருந்தான்.

இதற்காகவே இந்தச் சந்தர்ப்பத்துக்காகவே காத்திருந்தவள் போல் காரில் ஏறி உட்கார்ந்து விட்டாள்.

அவன் ஏற்கனவே சொன்னபடி கார் நடுவில் எங்கும் நிற்கவில்லை.

மயிலாப்பூர், லஸ்... மந்தைவெளி என்று ஓடி அடையாறு சாலையில் வேகமாகப் போனது. பின்னால் ரொம்ப தூரத்தில் மறைந்து மறைந்து பரமேஸ்வரனின் மோட்டார் சைக்கிள் தெரிந்தது. அதை அவள் வெளிக் காட்டிக் கொள்ளாமல் தனது அடுத்த நடவடிக்கை எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்பது பற்றின சிந்தனையில் ஈடுபட்டிருந்தாள்.

கார் அடையாறைக் கடந்து கடற்கரைச் சாலைப் பக்கம் திரும்பியது.

''நாம் இப்பொழுது எங்கே போகிறோம்?''

''வக்கீல் வீட்டுக்குத்தான். அவரிடம் வழக்கு முழுவதையும் சொல்லிவிட வேண்டாமா?''

''வக்கீல் உட்லண்ட்ஸில் இருப்பதாகச் சொன்னாய்?'

''அவர் அங்கே இல்லை'' என்றான், அவளைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே.

இப்பொழுது அவர்கள் பிரதான சாலையிலிருந்து முற்றிலும் தனிமையாகிவிட்டனர்.

கார் குலுங்கலுடன் ஓடி, பழுதடைந்த கேட் ஒன்றைக் கடந்து போய் இரண்டு மாடிக் கட்டிடத்தின் முன் சென்று நின்றது.

இப்பொழுது சுகுமாரனின் செய்கையிலும் பேச்சிலும் அசாதாரணமான வக்கிரம் புகுந்து கொண்டு விட்டது.

இதை அவள் கவனித்தாள்.

காரை விட்டுக் கீழே இறங்கியவன் கதவை அறைந்து சாத்திவிட்டு, அவளுக்காக முன் கதவைத் திறந்துவிட்டு எடுத்த எடுப்பில் அவள் கரத்தைப் பற்றி இழுத்தான்.

''வேண்டாம். அதெல்லாம் வேண்டாம். அதான் நான் உன்னுடன் வந்திருக்கிறேனே. நான் ஏதேனும் எதிர்ப்புக் காட்டினால்தானே இந்த முரட்டுத்தனம் அவசியம். நீ மேலே போ... நான் பின்னால் வருகிறேன்.''

அவன் அவளுடைய இந்த இளகிய தன்மையால் மயக்கம் அடைந்தான்.

அவளை அதே இடத்தில் கடித்துத் தின்ன வேண்டும் போல ஒரு வெறி, அவனுக்கு.

''எவ்வளவு அழகான இடம்! இந்த இடத்தில் வீடு வாங்க உன்னுடைய அட்வகேட்டுக்கு எப்படி யோசனை உதித்தது?... காடுபோல இருக்கு. இங்கே எது நடந்தாலும் யாருக்குமே தெரியாது.''

தூரத்தில் வளைவுச் சாலையில் மரங்களுக்கு நடுவே பரமேஸ்வரன் வந்து கொண்டிருந்தான். மோட்டார் சைக்கிளை எங்கோ நிறுத்திவிட்டு வெறுமனே மறைந்து வந்தான்.

இதை அவள் பார்த்தாள்.

சுகுமாரன் கவனிக்கவில்லை. போதை கண்ணை மறைத்தது.

மேலே போய்க் கொண்டிருந்த சுகுமாரன் அவளைத் திரும்பிப் பார்த்தான்.

''உன்னை எதற்காக இங்கே அழைத்து வந்தேன் தெரியுமா?''

''நீ சொன்னால்தான் தெரியும். வா என்றாய். வந்துவிட்டேன்.''

அவர்கள் இப்போது இரண்டாவது மாடிக்கு வந்து விட்டார்கள்.

பெரிய ஹால். கண்ணாடி ஜன்னல்கள் எல்லாம் நன்றாகவே இருந்தன.

அதே வேளையில்....

பரமேஸ்வரன்— ஓசைப்படாமல் மேலே ஏறிவந்தான்! மறைந்து நின்று கொண்டான்.


''நம் திட்டம் எதுவும் உன் நண்பருக்குத் தெரியாதே?'' — பலமாகக் கேட்டான்.

சுகுமாரன் சில கணங்கள் விழித்தான். பிறகு வேட்கையுடன் அவளருகில் வந்

"உங்களுக்கு ரெட்டைக் குழந்தை பிறந்திருக்கறதாக் கேள்விப்பட்டேனே சார்...! தொட்டில்லே ஒரு குழந்தை தானே இருக்கு?"

"இன்னொரு சம்சாரம் பக்கத்து ரூம்ல பிரசவிச்சிருக்கா!"

-முத்து தங்க ஐயப்பன்



தவறுகளைக் கண்டுபிடியுங்கள்!

பரிசு ரூ 500/-



இந்த வாரம் நான்கு கதைகளிலும் உள்ள நான்கு படங்களை உன்னிப்பாகக் கவனியுங்கள்: ஒவ்வொரு படத்திலும் வேண்டுமென்றே செய்யப்பட்ட இரு தவறுகள் தெரியும். மொத்தமுள்ள எட்டு தவறுகளில் நான்கினை ஒதுக்கி, நான்கினை மட்டுமே பட்டியல் போட்டிருக்கிறார் ஓவியர் திரு ஜெயராஜ். அந்த நான்கு எவை? ஒரு தபால் கார்டில் எழுதி அனுப்புங்கள். ''நான்கு தவறுகள்'' என்று தலைப்புக் கொடுங்கள். ஜெயராஜின் பட்டியலுடன் உங்கள் பட்டியல் ஒத்துப்போனால் உங்களுக்குப் பரிசு ரூ. 500/- முடிவு தேதி ஏப்ரல் 22. ஒருவருக்கு மேல் சரியான விடை எழுதினால் பரிசுத் தொகை பகிர்ந்து அளிக்கப்படும்.

தான். ''இதற்காக நான் எவ்வளவு நாள் காத்துக் கொண்டிருந்தேன், தெரியுமா... சுமங்களா...''

''எனக்கும் தெரியும். நாம் அன்று பார்க்கில் விவாதித்தோமே அது பற்றி என்ன யோசித்தாய்? அதன் பேரில் ஏதேனும் முடிவுக்கு வந்தாயா?''

''ஒரு வாரமாக அதே சிந்தனைதான்.''

''நமக்குள் ஒரு தெளிவான முடிவு வேண்டும். அவரோ நம் இருவரையும் இணைத்துக் கோர்ட்டில் வழக்குப் போட்டிருக்கிறார். விவாகரத்து செய்யப் போவதாக நோட்டீஸ் அனுப்பி யிருக்கிறார். நான் அவரால் விவாகரத்து செய்யப்படும் பட்சத்தில் நமது அடுத்த நடவடிக்கை என்னவாக இருக்க வேண்டும்? அவருடைய விவாக ரத்தை அப்படியே ஒப்புக் கொண்டு அவரிடமிருந்து விடுபட வேண்டும். அதற்காகத்தான் நீ சொல்லிக் கொடுத்தாயே அப்படியே செய்தேன். அவர் எந்த வங்கியில் பணமெல்லாம் போட்டு வைத்திருக்கிறாரோ, அந்த வங்கியையும், அவர் போட்டிருக்கிற தொகையையும் நீதானே சொன்னாய்....''

சுகுமாரன் ஒன்றும் புரியாமல் விழித்தான். அந்த விஷயங்களைத் தான் அவளுக்குச் சொன்னதாக அவனுக்கு நினைவில்லை. ஆனால், அவள் அப்படிச் சொன்னதும், அவன் ஏதோ கூற முற்பட்டான். அதற்கு அவள் இடம் தராமல் பேசினாள்.

வெளியே கதவுக்கு அருகில் வந்து நின்று கொண்டிருந்த பரமேஸ்வரன் இவைகளைக் கேட்டுக் கொதிப்புடன் நின்றான்.

பரமேஸ்வரன் கதவருகில் வந்துவிட்டான் என்பதையும்... தனது பேச்சுக்களை அவன் கேட்கக் கூடிய தூரத்தில் நிற்கிறான் என்பதையும் புரிந்து கொண்ட சுமங்களா, அந்த அறையைச் சுற்றிப் பார்ப்பது போலப் பார்த்துக் கொண்டே... வெளியே நிற்கும் பரமேஸ்வரனுக்கு மிக அருகில் உள் பக்கமாக வந்து நின்றாள்.

''சுகுமாரன்... நீ என் மேல் வைத்துள்ள அன்பையும், அக்கறையையும் நான் புரிந்து கொண்டுதான் பேசுகிறேன். இன்றெல்லாம் இருந்தால் அந்த லாண்டரியில் வேலை செய்து என்ன சம்பாதித்திருக்கப் போகிறாய்? நமது பிற்கால வாழ்க்கைக்கு நாம் ஏதாவது பாதுகாப்பு செய்து கொள்ள வேண்டாமா? அதுமட்டுமல்ல. உன் ஒத்துழைப்பு மட்டும் இல்லையென்றால் அவரை என்னால் எதிர்த்து நிற்கவே முடியாது!''

வெளியே நின்றிருந்த பரமேஸ்வரன் துடி துடித்துக் கொண்டிருந்தான்.

''நீ அவருக்கும் உண்மையான நண்பன் போல நடித்துக் கொண்டு எனக்குச் சில யோசனைகளை அவ்வப்பொழுது கூறிய உன்னுடைய நிலைமைதான் கத்தி முனையில் நிற்பது போல ஆபத்தானது. இந்த உன்னுடைய இரட்டை வேடம் அவருக்குத் தெரிந்து விடாமல் பார்த்துக் கொள். கடைசி வரை தெரியக் கூடாது. வழக்கு முடிகிற வரை கூட.... ஆமாம்.''

சுகுமாரன் அவளை நெருங்கி வந்து அணைத்துக் கொள்ளத் துடித்துக் கொண்டு நின்றான். அவள் பேசுவது எல்லாம் அவன் காதுகளில் விழாமல் உணர்ச்சிப் பிரவாகத்தின் ஒலி மட்டுமே 'அவளை அணைத்துக் கொள்... அவளைக் கட்டி அணைத்துக்கொள். இதை விட ஒரு தனிமை உனக்குக் கிடைக்காது. இதற்காகத்தானே அவளைக் கடத்திக் கொண்டு வந்தாய்!' என்று உசுப்பி விட்டுக் கொண்டிருந்தது.

''நான்தான் பேசிக் கொண்டிருக்கிறேன். நீ வாய் திறக்கவே மாட்டேன் 'என்கிறாய். சொல்...அவரை... சரியான முறையில் தண்டிக்க வேண்டும். சட்டத்தின் முன்பும் சமுதாயத்தின் முன்பும்... இதற்கு....''

''நிச்சயமாக நான் அவனைத் தண்டிப்பேன். அவனை ஒழித்துக் கட்டும் வரையில் ஓய மாட்டேன்... போதுமா?''

கதவை உடைத்துக் கொண்டு உள்ளே புகுந்த மாதிரி, சாத்தி இருந்த கதவுகள் இரண்டையும் இரண்டு கைகளால் மோதித் தள்ளிக் கொண்டு சூறாவளியாக நுழைந்து நின்றான் பரமேஸ்வரன்.


முதலில் அவன் திருஷ்டியில் பட்டவன்— எதிரே நின்ற சுகுமாரன்.

''ஏண்டா... துரோகி! ராஸ்கல்...''

சுகுமாரன் மேல் அவன் பாய்ந்தான். குப்பை கூளங்கள் நிறைந்த அந்தப் பெரிய ஹாலில் உக்கிரமாக அவர்கள் கட்டிப் புரண்டார்கள். அங்கே கிடந்த மரச் சட்டங்களை எடுத்து பரஸ்பரம் மூர்க்கமாகத் தாக்கிக் கொண்டார்கள்.

சுமங்களா வேகமாக வெளியேறிக்கொண்டிருந்தாள். (தொடரும்)

பயிற்சியாளர்: **டோனி பொன்னையா**
சித்திரம்: படம்: உத்ரா
தயாரிப்பு: குண்டுமணி



கராத்தேயில் தற்காப்புக்கான பயிற்சிகளை ஓரளவு கற்றுக் கொண்டீர்கள். கல்லாதது உலகளவு. இடைவிடாத பயிற்சியும் ஊக்கமுமே உங்களைக் கராத்தேக் கலையில் உன்னத நிலைக்கு உயர்த்தும்.

Kata பயிற்சிகளே கராட்டேக்கு ஆதாரம். Kata வில் உள்ள ஒவ்வொரு அசைவும் தலைசிறந்த கராத்தே ஆசிரியர்களின் அனுபவத்தில் எழுந்த பயிற்சிகள். ஒரு நல்ல கராத்தே மாணவன் Kata பயிற்சிகளைத் தீவிரமாகச் செய்வான். பயிற்சிகளை இசை முழக்கத்துக்கேற்பக் கற்பதும் வழக்கம்.'


கராத்தேயில் ஓடுகள் உடைப்பதோ, மரக்கட்டைகளைப் பிளப்பதோ சர்வ சாதாரணமான காரியம் தான். ஒரு கராத்தே கலைஞனின் பலப் பரீட்சைக்கு உதவும் இந்தப் பயிற்சிகள். இந்தப் பயிற்சிக்கு உடல் வலிமை, மன வலிமை, பிரார்த்தனை அனைத்தும் தேவை. ஒரு கடினமான பொருளை உடைக்கப் போகிறோம் என்ற பயம் நீங்கினாலொழிய இந்தச் சாதனையை நிறைவேற்ற இயலாது. கராத்தே கலைஞர் தமது சக்தி அனைத்தையும் தாக்கும் அவயவத்துக்குச் செலுத்தி, ஒரு சத்தத்தை எழுப்பித் தாக்கும்போது அதீத பலம் பெற்று மரத்தையோ ஓடுகளையோ பிளக்கமுடிகிறது.



கராத்தேக் கலை பயின்ற பெண்களுக்கு பயம், அச்சம் நீங்குகிறது. கராத்தே பயிற்சியில் உதை, குத்து, Thows முதலியவற்றைப் பற்றிப் படித்தீர்கள். என்னதான் படித்தாலும் நேரில் ஆசானிடம் பழகுவதற்கு ஈடாகாது. ஒன்றுக்கு ஒன்று துணையாக இருக்கலாம்.

உங்களுக்குப் பயிற்சிகளின் போது ஏற்படக் கூடிய சந்தேகங்களை நிவர்த்தி செய்யக் கராத்தே பயிற்சியாளர் திரு டோனி பொன்னையா இசைந்திருக்கிறார். கடிதம் எழுத அவர் முகவரி:

திரு டோனி பொன்னையா,
கராத்தே பயிற்சியாளர்,
3 2, ஜெகந்நாதபுரம்
மூன்றாவது தெரு,
சேத்துப்பட்டு,
சென்னை-31.







20. கண்ணதாசன்! கண்ணதாசன்! கண்ணதாசன்!

எந்தப் புகழ் நியாயமானது, நிலையானது நிரந்தரமானது என்பதைத் தெரிந்து கொண்டு அந்தப் பாதையையே தேர்ந்தெடுத்துக் கொள்கிறவன் திறமை குறைந்தவனாக இருந்தாலும், சமூகத்தில் காலூன்றி நின்று விடுகிறான்.

கவர்ச்சியான பக்கமெல்லாம் காலடி வைக்கிறவன், எவ்வளவு திறமைசாலியாக இருந்தாலும் அதிர்ஷ்ட வசமாக ஏதாவதொரு துறையில் முன்னேறினால் உண்டே தவிர, பொதுவில் குழப்பத்திலேயே வாழ்ந்து மடிகிறான்.

அரசியல் கவர்ச்சியாக இருந்தால், அதில் இரண்டு நாட்கள், நண்பர்கள் எதையாவது சொன்னால், அதில் ஒரு தலையீடு; கொஞ்ச நேரம் சினிமா, கொஞ்ச நேரம் பத்திரிகை; இடை இடையே பொழுது போக்குக் களியாட்டங்கள்—

இது ஆனந்தமாக வாழ்ந்து மடிய விரும்பும் ஒரு சராசரி மனிதனுக்கு நியாயமே தவிர, லட்சிய நோக்கோடு செல்பவனுக்கு எப்படி நியாயமாகும்?

அவன் எட்ட வேண்டிய தொலைவுக்கு எட்டாமற் போனதுக்கு இந்த முட்டாள்தனமான பிரவேசங்களே காரணமாகும்!

நாற்றம் மிகுந்த ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டு நறு மலர்களை வர்ணிக்க அவனால் முடிந்தது. அதற்காக நாற்றமே அதற்கு ஏற்ற இடம் என்று முடிவு கட்டிவிட முடியுமா?

அவன் தேர்ந்தெடுத்ததெல்லாம் கிட்டத்தட்ட அதே மாதிரிதான்!

ஒரு கட்டத்தில் கூட 'இது தவறு' என்று முடிவுகட்டி எதையும் முறித்துக்கொண்டு அவன் வெளியேறியதில்லை. பிரக்ஞையற்ற அவனது வாழ்க்கைக்கு இன்று முப்பது வயதாகிறது.

தேர்தல் முடிந்தபோது அதற்குப் பதினேழு வயதுதான். அப்போது பிரக்ஞை வரும்போலிருந்தது. மறுபடியும் அவன் தனக்குத் தானே மயக்க ஊசி போட்டுக் கொண்டான்.

ஆட்சிக்கு வந்துவிட்ட தி. மு. க.வைப் பற்றி அளவு கடந்த விமரிசனங்கள். அவன் எழுதிக் கொண்டிருந்த நவசக்தியும், காங்கிரஸ் எதிர்க் கட்சியானதும் எண்பதினாயிரம் பிரதிகளுக்கு மேல் விற்பனையாயிற்று.

குரங்கு கள்ளையும் குடித்து, அதற்குப் பைத்தியமும் பிடித்து, அதைத் தேளும் கொட்டினால் எப்படி இருக்கும்?

தனக்கும்சேர்த்துத் தோல்வியால் ஏற்பட்ட அவமானத்தை அவன் வெறிப் பேச்சுக்களால் தீர்த்துக் கொள்ள முற்பட்டான்.

இப்போது அவனது நாடகக் கம்பெனி, ஆட்சிக்கு வந்த தி. மு. க.வைக் கிண்டல் செய்து புதிய நாடகம் ஒன்றை அரங்கேற்றிற்று.

எல்லாப் பொழுதும் வீணாவதற்கு அற்புதமான ஏற்பாடு.

அவனது நாடகத்தில் உருப்படியான கதை இருக்காது. பிரமாதமான காட்சி சோடனை இருக்காது. தனியாக மேடையில் பேசுவதை 'நாடகம்' என்ற பேரில் நாலு பேர் பேசுவார்கள்!

ஏன், அந்தக் காலத்தில் தி. மு. க.வினர் நடத்திய நாடகங்களும் அப்படித்தானே!

கருணாநிதியின் 'தூக்கு மேடை'யும், பிற நாடகங்களும் மேடைப் பேச்சைக் காட்சி பிரித்த கதைகள்தானே!

அண்ணாவின் 'சந்திர மோகனு'ம், 'நீதி தேவன் மயக்கமு'ம் தவிர, மற்ற நாடகங்களில் குறைந்த பட்சக் கதை அமைப்புக் கூட இருந்ததில்லையே!

எங்கெங்கே இஷ்டமோ அங்கெல்லாம் அவன் வருவான். எப்போது வர வேண்டாம் என்று நினைக்கிறானோ, அப்போது மற்றவர்கள் வருவார்கள்.

அந்த நாடகத்தையும் காங்கிரஸ்காரர்கள் விரும்பிப் பார்த்தார்கள்.

காங்கிரஸில் பலபேருடைய ஆதங்கத்தையும், கவலைகளையும் தான் ஒருவனே தீர்த்துக் கொண்டிருப்பதாகவும், தான் இல்லாவிட்டால் எல்லாக் காங்கிரஸ்காரர்களும்



மனம் சோர்ந்து போவார்கள் என்றும் அவன் ஒரு கணக்குப் போட்டுக் கொண்டான். சிலர் அவனது காது கேட்க அப்படிச் சொல்லிக் கொண்டும் இருந்தார்கள்.

வழக்கமான மிதப்பு; ஆவேசமான தாக்குதல்!

அப்பொழுது பொதுப் 'பணித் துறை அமைச்சராக இருந்த தோழர் கருணாநிதி, ''ஸ்கூட்டரிலும் மோட்டார் சைக்கிளிலும் போகிறவர்கள் தலைக்கு 'ஹெல்மெட்' போட்டுக்கொள்ள வேண்டும் என்று சட்டம் கொண்டு வரப் போவதாக'' அறிவித்தார்.

'அந்த அறிவிப்புக்கு உள் நோக்கம் இருப்பதாக' அவன் 'நவசக்தி'யில் எழுதியிருந்தான்.

அது குறித்துக் கருணாநிதியின் சார்பில், சென்னை செஷன்ஸ் கோர்ட்டில் அவன் மீது ஒரு மான நஷ்ட வழக்கை அரசாங்கம் தொடுத்தது.

இந்த மாதிரி வழக்குகள் வந்து விட்டால் ஒவ்வொரு விசாரணை வாய்தாவுக்கும் அவன் கூட்டத்தைத் திரட்டுவான். அதுவும் கலைஞர் கருணாநிதியிடம் கற்றுக்கொண்ட பாடம்தான்!

அப்போதெல்லாம் பெட்டியில் ஏறிவிட்டால் விளைவுகளைப் பற்றிக் கவலைப்படாமலேயே பதில் சொல்வான்.

அரசாங்கத்தின் சார்பில் கருணாநிதிக்காக இன்று தலைமை நீதிபதியாக இருக்கும் கோகுல கிருஷ்ணன் அவர்களும், அவனுக்காக வி. பி. ராமனும் ஆஜரானார்கள். செஷன்ஸ் நீதிபதி திரு ராமசாமிக் கவுண்டர் மிகவும் தர்மசங்கடமான நிலைமையில் இருந்தார்.

அவர் வெறும் நீதிபதியாக மட்டுமின்றி உலக நடப்பைக் கவனிப்பவராகவும் இருந்ததால், 'அவனும் கருணாநிதியும் எப்படியும் ஒத்துப் போக மாட்டார்களா' என்பதே அவரது ஆசையாக இருந்தது.

நீதிபதியின் உயர்ந்த மனப்பாங்கினை அறிந்த அவன், எழுதிய கட்டுரைக்காக வருத்தம் தெரிவித்து வழக்கை முடித்து விட்டான்.

இதில் அன்றைய அரசு தரப்பு வழக்குரைஞர் திரு கோகுலகிருஷ்ணன் காட்டிய சமரசப் பாங்குதான் பெரிதும் உதவிற்று. அவரும் இருவருக்கும் வேண்டியவர்.

கோகுலகிருஷ்ணனின் சிரிப்புக்கு ஒரு தனிக் கவர்ச்சி உண்டு. அவர் சிரித்துக் கொண்டே தூக்குத் தண்டனை கொடுத்தாலும், கைதி வருத்தமில்லாது வாங்கிக் கொள்வான்.

ஒரு வக்கீலுக்கு இலக்கிய ஈடுபாடும் இருக்குமானால் அவர் எவ்வளவு பதமாக நடந்து கொள்வார் என்பதற்கு திரு கோகுல கிருஷ்ணன் அடையாளம்.

இந்த வழக்கு முடிவுற்ற நேரத்தில் மதுரையில் இன்னொரு வழக்குப் போடப்பட்டது.

ஒரு பஸ் கம்பெனியையும் மதுரை முத்துவையும் சம்பந்தப் படுத்தி எழுதியதால் தொடுக்கப்பட்ட வழக்கு அது.

இந்த வழக்குக்காக அவன் மதுரை போயிருந்தான். அவனும், மதுரை ப. நெடுமாறனும், திரு ஆ. ரத்தினம் காப்டன் சீனி, திருப்பெருந்துறை வக்கீல் மயிலராஜன், திண்டுக்கல் அழகிரிசாமி ஆகியோரும், மதுரை செண்ட்ரல் பஸ் ஸ்டாண்டுக்கு எதிரே இருந்த கோர்ட்டுக்குப் போனார்கள்.

மதுரை முத்துவும், அவரது நண்பர்களும் எதிர்த் தரப்பில் உட்கார்ந்திருந்தார்கள்.

வழக்கு வாய்தா போடப்பட்டு எல்லோரும் வெளியே வரும்போது, வாய்ப் பேச்சு தகராறாக முற்றி நெடுமாறனும் மதுரை முத்துவும் ஒருவர் சட்டையை ஒருவர் பிடித்துக்கொண்டார்கள்.

அப்போது, காரில் உட்கார்ந்திருந்த அவனைக் ''கவிஞர், கவிஞர்'' என்றழைத்தார் மதுரை முத்து. அவன் அதைக் காதில் போட்டுக் கொள்ளாமல் புறப்பட்டபோது கூட்டத்தில் ஒரு பகுதி அவனைப் பின் தொடர்ந்தது.

அப்போது கட்டபொம்மன் சிலை அருகிலிருந்து நாலு பேர் அரிவாளோடு ஓடியதாகச் சில பேர் சொன்னார்கள். ஆனால் அவன் அதைப் பார்க்கவில்லை.

இந்த மாதிரி நேரங்களில் பரபரப்பை உண்டாக்குவதற்காகக் கூடச் சிலர் கதை கட்டலாம்.

அன்று அவனோடு மதுரை சந்தானம் லாட்ஜில் திரு சம்பத் அவர்களும் தங்கி இருந்தார். அந்த ஹோட்டல் முழுவதிலும் காங்கிரஸ் ஊழியர்கள் நடமாட்டம்.

இரண்டு மூன்று நாட்கள் மதுரைச் சுற்றுப் பயணத்துக்குப் பிறகு அவன் சென்னை திரும்பினான்.

சென்னை வந்ததும் தோழர் மோகன் குமாரமங்கலம் அவனுக்கு டெலிபோன் செய்து அவனைத் தண்டித்த மிஷின் வழக்கு அப்பீல் மறுநாள் உயர்நீதி மன்றத்தில் வருவதாகக் கூறினார். (வளரும்)



''அந்த அம்மா அரச மரத்தை ரிவர்ஸ்லே சுத்தறாங்களே.....என்ன விஷயம்?''

''கு. க. விஷயம்தான்!''

-முத்து தங்க ஐயப்பன்

முன்கதைச் சுருக்கம்

திருத்தணியில் ஜயந்திக்கும் ஹர்ஷனுக்கும் திருமண ஏற்பாடு தடபுடல் பட்டது. பரிசம் போடவிருந்த சமயத்தில் மணப்பெண் ஜயந்தியைக் காணவில்லை! இது சம்பந்தியம்மாள் கஸ்தூரிக்குப் பெரிய அதிர்ச்சி! ஏற்கெனவே ஹர்ஷனுக்கும் ஊர்மிளாவுக்கும் நடக்கவிருந்த நிச்சயதார்த்தம் நின்று போய்ச் சம்பந்தியம்மாள் கஸ்தூரி தவித்து உருகியவள். தாயாரின் வற்புறுத்தலுக்கு இணங்கியே ஹர்ஷன் திருத்தணிக்கு வந்திருந்தான். மற்றொரு பேரிடி அவனுக்கு! கடிதம் எழுதி வைத்துவிட்டு ஜயந்தி தன் காதலனுடன் பம்பாய் பறந்து விடுகிறாள். இந்த அதிர்ச்சியான செய்தியைத் தந்தை தயானந்தன் சம்பந்தியம்மாளிடம் தெரிவிக்கிறார். என்ன செய்வதென்று அனைவரும் தவித்து, முடிவில், பெற்றோர் உயிருடன் இல்லாது பெரியப்பா தயானந்தன் வீட்டில் வளரும் மாதங்கிக்கு ஹர்ஷன் வேண்டா வெறுப்பாகத் தாலி கட்டுகிறான். மாதங்கி தன் மகளின் நல் வாழ்வைப் பறித்துவிட்டாளே என்ற ஆத்திரமும் கோபமும் பெரியம்மா சுமதிக்கு!

ஊர் வந்து சேர்ந்த சூட்டோடு ஹர்ஷன் தனியாகப் பெங்களூருக்குப் புறப்படுகிறான், மாதங்கியைக் கண் கலங்க வைத்துவிட்டு. கஸ்தூரி இதைக்கண்டு அதிர்ந்து போகிறாள்!

''அம்மாவுக்கு அவமானம் ஏற்படக் கூடாதே என்ற ஆதங்கத்தில் ஒப்புக் கொண்டேன். நீ என் மனைவியாகி விட்டதாக மனப்பால் குடிக்காதே! மூட்டை கட்டிக்கொண்டு இங்கிருந்து போய்விடு''என்று ஹர்ஷன் கூறியதை மாமியாரிடம் சொல்கிறாள் மாதங்கி.

பெங்களூரிலிருந்து ஹர்ஷன் திரும்பியதும் கஸ்தூரி மகனைக் கண்டித்து,'மாதங்கி இங்கு தங்கியிருக்க உரிமையுண்டு' என்று உறுதியுடன் சொல்கிறாள்.

இதற்கு நடுவில் ஹர்ஷனைச் சந்திக்க ஊர்மிளா அவர்கள் வீட்டுக்கு வந்து நிம்மதியைக் குலைக்கிறாள்! மாதங்கியின் மனம் உடைகிறது. கஸ்தூரி கவலையால் தவிக்கிறாள். ரத்த அழுத்தம் அவளைப் படுக்கையில் கிடத்துகிறது.

ஊர்மிளா தன் கணவனிடம் சண்டை போட்டுக் கொண்டு வந்துவிட்டவள். கடற்கரையில் ஊர்மிளாவும் ஹர்ஷனும் அமர்ந்திருக்கும் காட்சியைக் குடும்ப நண்பர் நாராயணசாமி பார்த்து விடுகிறார். எச்சரித்து விட்டுச் செல்கிறார்.

நாராயணசாமியின் எச்சரிக்கை ஹர்ஷனை மனம் மாறச் செய்கிறது! ஊர்மிளாவின் மீது ஏற்பட்ட கசப்பு மாதங்கியின் மேல் அன்பாக மலரத் தொடங்கப் பல சம்பவங்கள் காரணமாகின்றன.

இந்தச் சமயம் பார்த்து, பெரியம்மா சுமதி வந்து சேருகிறாள். ஜயந்தி கழற்றிப்போட்ட கிழிந்த புடவைகளைத் தைத்து அணியும் மாதங்கிக்கு இத்தனை யோகமா? சுமதியின் வயிறு பொறாமைத் தீயால் எரிந்தது! அது மட்டுமல்ல, அவளது அருமை மகள் ஜயந்தி கோடம்பாக்கத்தில் ஓர் ஒண்டுக் குடித்தனவாசியாகக் குடும்பம் நடத்துவதை வேறு அவள் பார்க்க நேர்கிறது. இந்த வயிற்றெரிச்சலும் சேர சுமதி ஹர்ஷனைப்பற்றி ஒரு விபத்தில் ஆண்மை இழந்தவன் என்று கூறி மாதங்கியைத் துடிதுடிக்க வைக்கிறாள்.

இந்தச் சமயத்தில் அவர்களிருந்த இடத்துக்கு வருகிறாள் கஸ்தூரி! தான் மாதங்கியிடம் கூறியதைக் கஸ்தூரி கேட்டு விட்டாளோ என்று சுமதிக்கு ஒரே நடுக்கம்!

சில நிமிடங்களில் பனிச்சென்று உடை மாற்றிக் கொண்டு தங்கள் எதிரே முன்னறையில் வந்து உட்கார்ந்த கஸ்தூரியை வியப்புடன் பார்த்தாள் சுமதி.

இவளா ரத்த அழுத்தம் வந்து படுத்துக் கிடந்தாள்? பிடுங்கி எடுத்த முள்ளங்கிப் பத்தையைப் போல நிறமும் செழுமையுமாக, மருமகள் எடுத்துவிட்டவள் என்று சொல்ல முடியாதவாறு மினுமினுவென்று வச்சு வாக்கப் படுத்தும் இளமையில் இன்னமும் ஜம்மென்று இருக்கிறாளே?... படிப்புக்கும் பவிஷுக்கும் ஒரு தனி களையா? பொறாமை, தீயாக அடிவயிற்றைப் பற்றி... புன்முறுவலித்தாள் சுமதி. தனது வரவால் அமைதியாக அழகாகக் காணப்படும் அந்தக் குடும்பத்தில் ஒரு சிறு சலசலப்பை ஏற்படுத்தாவிடில் மண்டை வெடித்து விடும் போன்றதொரு ஆத்திரம் அவளுக்கு.

''காப்பி - டிபன் சாப்பிட்டீங்களா?... நீங்க வந்தது தெரிந்தது. அதுனாலே சட்டுனு எழுந்து வந்துட்டேன். இல்லாட்டா ராத்திரி மாதங்கி கஞ்சி எடுத்துக் கொண்டு வந்து எழுப்பற வரை தூங்கி விட்டிருப்பேன்.''


''அடடா, உங்க ஓய்வை நாங்க கெடுத்துட்டோமா?'' குள் கொட்டினாள் அனுதாபத்துடன் தயானந்த்.

''அப்படி ஒன்னுமில்லே... நாளையிலிருந்து நான் வேலைக்குப் போகணும். தேவையில்லாத ஓய்வுகூட ஒரு வகை வியாதியைப் போல உடம்பைக் கெடுத்திடும்.'' கஸ்தூரி மெல்லியதாகச் சிரித்தாள்.

''மாப்பிள்ளை மாடியில் இருக்காப் போலிருக்கு.....'' முனகியபடி தயானந்த் மெல்ல எழுந்தார்.

''மாதங்கி! போய் ஹர்ஷனை நான் கூப்பிட்டதாக வரச்சொல்.'' மருமகளுக்கு உத்தரவிட்டாள் கஸ்தூரி.

லக்ஷ்மி



என்னதான் சம்பந்தி என்ற போதிலும் மாடி அறைக்குத் தடதடவென்று தயானந்த்



விழுந்த மாலை

தானே உரிமையுடன் செல்ல முயன்றதை அவள் வெறுத்தாள்.

சில விஷயங்களில் கஸ்தூரி மிகவும் கண்டிப்பானவள். உயிர்த் தோழி என்றாலும் தன் பின்னாலேயே சமையலறைக்குள் கழுத்தில் மூச்சு விட்டபடி நெருக்கமாக யாராவது உறவு கொள்வதை அவள் விரும்பாதவள்.

தயானந்த் புரிந்து கொண்டார். முகத்தில் அசடு வழிய அவர் அங்கிருந்து வராந்தாப் பக்கம் நழுவித் தோட்டத்தைப் பார்த்தபடி விழித்துக் கொண்டு நின்றார்.

அறைக் .கதவை லேசாகத் தட்டிவிட்டுத் திறந்து கொண்டு மாதங்கி உள்ளே வந்த போது படுக்கை மீது சாய்ந்தபடி வீக்லியைப் புரட்டிக் கொண்டிருந்தான் ஹர்ஷன்.

''இழே வரச் சொல்லி அம்மாவின் உத்தரவோ? உன் பெரியப்பா நடந்துகொண்ட அழகுக்கு அவரோட நான் வந்து பேசணுமா?''

''அத்தை உடனே உங்களைக் இழே வரச் சொன்னாங்க....''

பட்டென்று பத்திரிகையை மூடித் தரையில் போட்டுவிட்டுக் கோபத்துடன் எழுந்தான். நாற்காலி மீது கிடந்த துண்டை உதறித் தோளில் போட்டுக்கொண்டு இடது கரத்தால் கலைந்த முடியைச் சீராக்கியபடி வெளிவரத் திரும்பினான்.

மாதங்கி அவனுக்கு வழிவிட வெளியே வந்தாள்.

''இந்தா நில்லு!... ஒரு வார்த்தை கேட்கணும்...'' அதட்டினான் ஹர்ஷன்.

அறையை விட்டு வெளியே வந்துவிட்ட மாதங்கி வாயிற்படி அருகில் தயக்கமாக நின்றாள்.

''பல நாட்களாக நான் கேட்க நினைச்ச கேள்வி. வாய்ப்பில்லாமல் வாயை மூடிக் கிட்டிருந்தேன். சம்பந்தி மனுஷனைக் கண்டதும் இப்போ கேட்கணும்னு மனம் துடிக்குது... ஆமாம்! உன் அக்கா வீட்டிலே நீ கூடவே தங்கி நெருங்கி வாழ்ந்தவளாச்சே... உனக்குக் கூட உன் அக்கா விவகாரம் ஒண்ணும் தெரியாதுன்னு சொல்லப் போறே? உன் பெரியப்பா–பெரியம்மா யாருக்கும் உன் அக்காவின் காதல் விவகாரம் கொஞ்சம் கூடத் தெரியாமலா இருந்திருக்கும்?... தன் மகள் திடீரென்று இடக்குச் செய்தால் தம்பி மகளை என் தலையில் கட்டலாம்னு தானே உன் பெரியப்பா இட்டத்தோட திருத்தணிக்குப் புறப்பட்டு வந்திருந்தார்?..''

மாதங்கி திடுக்கிட்டுப் போனாள். சற்று முன் பெரியம்மா சொன்ன செய்தியால் ஏற்பட்ட கலவரத்திலிருந்து ஏற்கனவே குழம்பி விட்டிருந்தாள். இப்போது பெரியப்பா திட்டமிட்டு அவளைப் பலவந்தமாக அவனுக்கு மனைவியாக்கி விட்டதாகக் குற்றச் சாட்டு.

''எனக்கு எதுவுமே தெரியாது.'' சொல்லி விட்டு வேகமாகத் திரும்பினாள்.

''இந்தா!'' — மறுபடியும் ஹர்ஷன் அதட்டினான்.

''கீழே போய் அம்மா கிட்ட நான் கேட்டதைப் பத்தி ஏதாவது வாய் திறந்தியோ நான் பொல்லாதவனா இருப்பேன்...'' உறுமி விட்டு அவளைத் தாண்டிக் கொண்டு படிகளைத் தாவிக் கடந்து கீழே மறைந்தான்.

'இப்போது மட்டுமென்ன? நீங்க ரொம்ப சாதுவென்ற நினைப்பா?...'' தனக்குள்ளே சொல்லிக் கொண்ட மாதங்கி குபீரென்று சிரித்து விட்டாள். சிரிப்பைச் சட்டென்று அடக்க முடியாது... சிரித்துக் கொண்டே அவன் பின்னால் கீழே இறங்கி வந்தாள்.


''சாப்பிட்டு விட்டுப் போகலாமே?'' — கஸ்தூரி உபசரித்ததுதான் சாக்கென்று சுமதி உட்கார்ந்து விட்டாள்.

அதிக நேரம் அங்கே தங்க நேரிட்டால் இன்னும் சில வம்புகளைச் சேகரிக்க இயலுமே என்ற ஆவல்தான் காரணம்.

மாதங்கி இரவு உணவுக்காகத் தயாரித்திருந்த நெய் மணத்த பரோட்டாவும் கூட்டுக் கறியும் சாப்பிட மிகவும் ருசியாகத்தான் இருந்தன. தேவைக்கு மீறி ஒன்றை அதிகமாகவே சாப்பிட்டு விட்டாள் சுமதி. கை கழுவிவிட்டு முன்னறையில் வந்து உட்கார்ந்தவளுக்கு மூச்சு முட்டியது.

''எங்க மாமா சரியான கஞ்சன். கஞ்சன் என்று கூட சொல்லமாட்டார். கஞ்சி என்றுதான் சொல்லுவார்!

-பிரியாபாலு



சுவையாகச்சமைத்துப் போட்டுக் கூப்பிட்ட குரலுக்கு அடிமையாக ஓடோடி வந்து பணி செய்த இந்தப் பெண்ணை இவர்கள் வீட்டுக்கு அனுப்பி விட்டோமே?

''என்னால் நம்பவே முடியலே... படு சோம்பேறியாக எங்க வீட்டில் மசமசவென்று நின்றுகிட்டு இருந்த இந்தப் பொண்ணு இங்கே வந்து ரொம்ப நல்லா வேலை செய்கிறது... எல்லாம் உங்க டிரெயினிங்.''— புகழ்ச்சியாக ஆரம்பித்தாள்

''அப்படி ஒண்ணும் தெரியலேயே. இங்கே வந்த நாளிலிருந்து நாள் முழுதும் நான் சொல்றதுக்கு முந்தி தானாகவே எல்லாம் செய்துடறாளே? இவ மட்டும் இல்லாதிருந்தா.. சில நாளா நான் உடம்புக்கு முடியாம இருந்ததுக்கு.. உதவிக்கு யாருமில்லாமக் கஷ்டப்பட்டிருப்பேன்.''

மாமியார் மெச்சிய மருமகளாக மாதங்கி மாறிவிட்டதை அறிந்த சுமதிக்கு ஆத்திரம் பொங்கிக் கொண்டு வந்தது.

''எங்க வீட்டுக்காரருக்கு நேர் எதிர் குணம் அவர் தம்பிக்கு. நல்ல வேலையில்தான் இருந்தார். ஆனால் குடியும் குதிரைப் பந்தயமும் அவரை ஒழிச்சுக் கட்டிடுச்சு. மாதங்கிக்கு ஆறு வயசிருக்கும். அப்பா பொசுக்குன்னு போயிட்டார். அவ பிறக்கும்போதே தாயை இழந்தவள். தம்பி மகள் அநாதையாகி விடக் கூடாதுன்னு இவர்தான் போய்க் குழந்தையை அவங்க தாய் வழிப் பாட்டன் வீட்டிலிருந்து எடுத்து வந்தார். தலையில் பேனும் உடம்பில் சிரங்குமாக... கயிறுபோல வந்து நின்ன குழந்தையை வளர்க்கப்பட்ட பாடு ஆண்டவனுக்குத்தான் தெரியும்.''

''அப்படியா?''

''படிப்பு நல்லா ஏறியிருந்தா இன்னும் மேலே படிக்க வச்சிருப்போம்.''

''அதனால் என்ன... எங்க வீட்டுக்கு இந்தப் படிப்புப் போதும். மேலே நாங்களே படிக்க வச்சுக்க முடியும். கோடை விடுமுறைக்குப் பிறகு மாதங்கியை நான் செகரட்டேரியட் கோர்ஸில் சேர்க்க ஏற்பாடு பண்ணிக்கிட்டிருக்கேன். அப்படியே கார் ஓட்டக் கத்துக்கவும் ஏற்பாடு செய்ய உத்தேசிச்சிருக்கேன்...தட்டெழுத்து,சுருக்கெழுத்து இதெல்லாம் கத்துக் கொண்டு தேர்ந்து விட்டால் பிற்காலத்திலே அவனுக்கு உதவியாக இருக்கும். வீட்டிலே ஒண்ணுக்கு ரெண்டு கார் நிக்குது. வெளி வாசலில் அவளே ஒரு காரை எடுத்துட்டுத் தாராளமாகப் போய் வரலாமே... என்னைப் பொறுத்த வரை அவள் எனக்கு மகள் போலத்தான்...'' கஸ்தூரி மென்மையாகச் சிரித்தாள்.

சுமதியின் தாடை இறுகியது. என்ன சொன்னாலும் காதில் போட்டுக் கொள்ள மாட்டேங்கிறாளே? மாமியாரை மாதங்கி அப்படிக் கையில் சுருட்டி வச்சுக் கொண்டிருக்கிறாள். கெட்டிக்காரி....

சுற்று முற்றும் பார்த்தாள். குரலை மெல்லத் தாழ்த்திக் கொண்டாள்.

''பி. யூ.சி.க்கு மேலே மாதங்கியை நாங்க படிக்க வைக்காம நிறுத்தினதுக்கு வேறே ஒரு காரணம் இருக்கு.

''மாதங்கி அசலாம்பிகை கல்லூரியில் படிக்க ஆரம்பிச்சவுடனேயே கொஞ்சம்

தன் சுபாவத்தைக் காட்டிட்டா. வீட்டி லேயே நான் அவளை எப்பவும் அடக்கி வைக் கிறதுண்டு. பால்காரனோட பல்லே இளிச் சுண்டு பேசுவாள். தையல்காரர் வந்துட்டா போதும்... ஓடிவந்து தானே பேசத் தொடங் குவா... இந்தப் பொண்ணை வச்சுண்டு எப் படித்தான் மீதிக் காலத்தை ஓட்டப் போறே மோன்னு எனக்குச் சதா திகில்தான் போங்க. நம்ப பெண்ணைப் படிக்க வச்சுட்டுத் தம்பி மகளுக்குப் படிப்புக் கொடுக்காட்டா நல் லாயிருக்காதுன்னு இவர் தான் ஒரே பிடியா காலேஜுலே கொண்டு சேர்த்தார். எனக்கு அப்பவே தெரியும். இவ ஒழுங்காப் படிக்க மாட்டான்னு. பஸ் ஸ்டாண்டிலே பார்த்த ஒருபையனோட சிநேகமாம். எனக் குப் பிறகுதான் தெரியும். அவன், அவளைத் தேடிக் கொண்டு காலேஜுக்குப் போய் விட் டான். ஆபீசிலே போய் விசாரிச்சாளும். இது கல்லூரித் தலைவி காதிலே பட்டு அவுங்கவந்து அவளைக் கூப்பிட்டுக் கடுமையாகச் சாடி வெளியே துரத்திவிட்டு இவருக்கு டெலி போன் செய்தாங்க. இந்தப் பெண் நடத்தை யாலே கல்லூரி பேர் கெட்டுடும், இந்த வருஷத்தோட வேறே காலேஜ் பார்த்துக் கோங்கன்னு காரமாப் பேசிட்டாங்க... பி.யூ.சி. படிப்போட நாங்க அவளை வீட் டோட வச்சிக்கிட்டோம். இந்த மாதிரித் தகராறுகள் மேலே நடக்காதபடி நான் கண் டிப்பும் கருருமாகத்தான் வச்சிருந்தேன்.''

கஸ்தூரி முகம் சுருங்கிப் போனான்.

'மாதங்கியைப் பற்றி அவள் சொல்வ தெல்லாம்உண்மையா?.. தன் பெண்ணுக்குக் கிடைக்காத இடம் தன் கொழுந்தன் மக ளுக்குக் கிடைத்து விட்டதே என்ற ஆத்தி ரதித்ல் ஏற்பட்ட கற்பனையா?' ஆனாலும் அவ னால் மௌனமாக இருக்க முடியவில்லை.

''நீங்கள் இந்த விஷயத்தைத் திருத் தணியிலேயே... பெண்ணை மணையில் வைக்கு முன்பே என்னிடம் சொல்லி யிருக்கணும்... இப்போ வந்து சொல்றதின் அர்த்தம் என்ன?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

''ஆயிரம் பொய் சொல்லியாவது ஒரு கல்யாணத்தை முடிக்கணும்னு சொல் வாங்களே... எங்கேயாவது நம்ப வீட்டுக் குழந்தை சுகமா இருக்கட்டும்னு நல்ல எண்ணத்தோடதான் பேசாம இருந்துட் டேன். இப்போ வேறே யாராவது வந்து சொல்லிடப் போறாங்கங்களேங்கிற கவலே யிலே உண்மையை விளக்கிட்டேன்.''

''அங்கேயே சொல்லியிருந்தா இந்தத் தயானந்த் வீட்டுச் சங்கதியே வேண்டாம்... அக்காளைப்போலவே தங்கையும் இருக்கா... இது குழந்தைகள் தப்பில்லே... அவங்களை வளர்த்தவங்க தப்புன்னு எங்கண்ணு பட்டுன்னு சொல்லி உதறிட்டு எங்க உறவுப் பெண் யாரையாவது வச்சு எப்படியோ கல்யாணத்தை முடிச்சிருப்போம். எங்க உறவிலேயே என் மகனுக்குப் பெண் கொடுக்க எத்தனையோ பேர் தயாரா இருந்தாங்க... அதனாலே உங்க வீட்டுப்பெண்இல்லாதிருந்தா காரியம் ஒன்னும் கெட்டுப்போயிருக்காது.'' அதட்டலாகவே சம்பந்தி என்ற மெதப்பி லேயே கஸ்தூரி பேசினாள்.

''அவ்வளவு அருகில் அவளைப் பார்த்ததும் அந்த அழகில் என்னை மறந்து மூக்கின் மேல் விரல் வைத்தேன்.''

''அதற்காகவா அவள் இப் படிச் சத்தம் போட்டாள்?''

''நான் விரலை வைத்தது அவள் மூக்கில்!''

- பன்னீர்செல்வன்



சுமதிக்கு மேலே என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏன் வீணாக வாய் கொடுத் தோம் என்று உள்ளூறப் பயந்துவிட்டாள்.

''இந்தச் சங்கதியை இத்தோட விட்டு டுங்க. என் மகன் காதில் பட்டால் வீண் பொல்லாப்பு. மாதங்கி எங்க வீட்டு மரு மகளாகி விட்டாள். இனி அவளை அந்தத் தகுதிக்கு ஏத்தவளாக வச்சு நடத்திக் கொள்றது எங்க பொறுப்பு. நீங்க கவலைப் பட வேண்டாம். நடந்து போனதைப் பத்தி நான் கவலைப்படப் போறதில்லே. இனி நடக்கப் போவதைப் பத்தித்தான் கவலைப் படுவேன். நீங்களும் மனத்தைக் குழப்பிக்க வேண்டாம். நாளைக்கு நான் ஆபீசுக்குப் போகலாம்னு தீர்மானிச்சிருக்கேன். அத னுலே...'' சுவரில் தெரிந்த கடிகாரத்தைப் பார்த்தான்.

'நேரமாகி விட்டது.... நீங்கள் கிளம்ப லாம்' என்று பேசாமல் பேசிய அவனது கண்களைச் சந்திக்க சுமதிக்கு மிகவும் வெட்க மாக இருந்தது.

''நாழியாச்சு... நீங்களும் அந்தப் பக்கம் வந்துண்டு இருங்கோ... மாதங்கியை முடிஞ்ச போதெல்லாம் அனுப்பி வையுங்கோ...'' முணு முணுத்து விட்டு எழுந்தாள்.

வராந்தாவில் உட்கார்ந்து ஒப்புக்குப் பேசி ஹார்ஷனை அறுத்துக்கொண்டிருந்த தயானந்த் தாமாகவே உள்ளே வந்தார்.

''புறப்படலாமா?'' என்று அவர் கேட்ட துமே வெற்றிலே, பாக்கு, குங்குமத்தைப் பெற்றுக் கொண்டு சுமதி கிளம்பிவிட்டாள்.

படுக்கை விரிப்பை உதறிப் போட்டுச் சரி செய்துவிட்டு கண்ணாடி கூஜாவில் நீரும் டம் ளரும் கொண்டு வந்து தலைமாட்டிலிருந்த மேஜைமேல் வைத்துவிட்டு... கட்டிலின் ஓரத்தில் வந்து உட்கார்ந்து கொண்ட மாதங் கியை ஓரக் கண்ணால் பார்த்தான் கஸ்தூரி.

விடி விளக்கு ஒளியில் மென்மையான அந்த முகத்தில் ஒளி விட்ட கண்களில் கபடத்தின் சாயையே சிறிதும் தெரியாததை வியப் புடன் பார்த்துக் கொண்டாள்.

'சே! மாதங்கி அப்படிப்பட்ட பெண்ணாக இருக்க முடியாது...இது கட்டாயம் ஒரு கட் டுக் கதையாகத்தான் இருக்கும். முயன்றால் அவளால் இதைப்பற்றி ஆராயவாமுடியாது?'

எத்தனை கட்டுப்படுத்தியும் அமைதியான தொரு நீர்ப் பரப்பின் மேல் விழுந்த சிறு கல்லால் வட்ட வட்டமாக எழுந்த சிற் றலைகள் போல அவன் மனத்தினுள் ஒரு குறு குறுப்பு... சஞ்சலப் படுத்திக் கொண்டிருந்த தால் அவனுக்கு நிம்மதியாக உறங்க முடிய வில்லை.

(தொடரும்)

மருதமலை கோவில் அடிவாரம்.

சோம்பல் முறிக்கும் மத்தியான நேரம்.

நின்றிருந்த இரண்டொரு டூரிஸ்ட் பஸ்களும் போய்விட்ட பிறகு பாண்டிக்குச் சப்பென்றாகி விட்டது.

கூண்டிலிருந்த கிளி கீச் 'கீச்'சென்று பசியால் கத்த ''ச்சூ.. சொம்மா கெட... காலையிலிருந்து இந்நேரம் வரைக்கும் ஒரு பத்துச் சீட்டுக் கூட நீ எடுத்துத் தரலை... நெல்லு மாத்திரம் திங்க வேணுமா?'' என்று பாண்டி வாய் விட்டுத் திட்டினான் அதை.

அது, அவன் திட்டலைப் பொருட்படுத்தாமல், வெட்டி விட்ட அரை குறை இறகுகளோடு கூண்டில் பரபரத்தது. மூக்கைக் கம்பிகளுக்கு வெளியேவிட்டு, பாண்டியை நேசப் படுத்தும் எண்ணத்தோடு தன் சிகப்பு நிறக் கண்களைச் சாய்த்துப் பார்த்தது.

''ஏம்பா... கிளி ஜோஸ்யம் பார்க்க எத்தினி காசு வாங்கறே?'' நெற்றி முழுக்கத் திருநீற்றை அப்பிக் கொண்ட கிராமத்துக் கிழவி ஒருத்தி புகையிலைக் காம்பை மென்றபடியே பாண்டியை நெருங்கினாள். மடியில் செருகியிருந்த சுருக்குப் பையில் சில்லறை கணிசமாகக் குலுங்கியது.

''பதினைஞ்சு காசு ஆத்தா! வா... இப்படி சாவகாசமா உக்காரு. சீட்டு எடுத்துப் பார்த்துடலாம்...'' — பாண்டி ஆசை வலையை விரித்தான்.

''அம்மாடியோவ்! பதினைஞ்சு காசா? எங்கூரு அமாசை ஜோசியன் அஞ்சு பைசாவுக்கு எலி ஜோசியம் பாக்கறானே! நீ என்னன்னு மனசிலே பயமில்லாமே பதினைஞ்சு பைசா கேக்கறே? அஞ்சு பைசாவுக்குச் சீட்டெடுப்பியா?''

கிராமத்துக் கிழவி கறாராய்க் கேட்டாள். பாண்டிக்குச் சுர்ரென்று வந்தது கோபம்.

''அடப்போ! நீயும் வயசுலேபெரியவளாட்டம் கோயிலுக்கு வந்துட்டே....! கோயமுத்தூரிலிருந்து மருதமலைக்கு வர்றதுக்கு அஞ்சு வருஷம் முன்னாடி என்ன பஸ் சார்ஜ்? இப்ப என்ன பஸ் சார்ஜ்?... அஞ்சு பைசாவுக்குச் சீட்டெடுக்கணுமாமில்லே....சீட்டு? முகரையைப் பார்க்கல்லே...!''

கிழவி ஏதோ பேச வாயெடுத்த அதே நேரம்....

மலைப் பாதையினின்றும் சர்ரென்று கீழே இறங்கி அடிவாரத்தைத் தொட்ட அந்தப் படகுக்





ஒரு நடிகை ஜோஸியம் பார்க்கிறாள்!

ராஜேஷ் குமார்

கார் பாண்டி உட்கார்ந்திருந்த இடத்துக்கு வந்ததும் சட்டென்று அதிர்ந்தாற் போல் நின்றது.

கிராமத்துக் கிழவி அரண்டு போய் ஒதுங்கினாள்.

பாண்டி வியப்போடு காரில் இருந்தவர்களைப் பார்த்தான். காரின் பின் சீட்டில் இரண்டு ஆண்களுக்கு நடுவில் அந்த அழகான பெண் அமர்ந்திருந்தாள். முகத்தில் அதிகப்படியான பவுடர் பூச்சு. உதட்டில் லிப்ஸ்டிக். கண்களில் வண்டியாய் மை.

"என்ன டிரைவர்? என்னுச்சு?" — காரில் இருந்தவர்களில் வழுக்கைத் தலையோடு இருந்தவன் கொஞ்சம் கனமான குரலில் கேட்டான்.

"பின் பக்க டயர் ஒண்ணு போயிடுச்சு சார்... நீங்களும் அம்மாவும் ஒரு பத்து நிமிஷம் கீழே இறங்கி நில்லுங்க. ஸ்டெப்னி போட்டுடறேன்..."

"ம்... கீழே இறங்கு பானு! தைரியமா இறங்கு. எந்த ரசிகர் பட்டாளமும் வராது. ஒரு பத்து நிமிஷத்திலே மாணிக்கம் ஸ்டெப்னியை மாத்திடுவான்."

வழுக்கைத் தலை, பானுவுக்குக் கதவைத் திறந்து விட்டான்.

மார்புகளின் மேல் பரவியிருந்த முந்தானை வெகுவாய்ச் சரிந்து பூமியைத் தொட—லோ கட் - ஜாக்கெட்டின் பள்ளத்தாக்கில் பானுவின் கவர்ச்சி அயிட்டங்கள் இலவசக் காட்சி நடத்த — காரைவிட்டு சாவதானமாய் இறங்கி நின்றாள்.



"மருதமலைக் கோயில் ரொம்பவும் பிரசித்தமானது என்று சொல்றாங்க. கூட்டத்தையே காணோமே?" — டம்பப் பையில் இருந்த கூலிங் கிளாஸை எடுத்துக் கண்களில் பொருத்திக் கொண்டே கேட்டாள் பானுஸ்ரீ.

"விசேஷ நாள்லேதான் கூட்டம் ஜாஸ்தி வரும்... இந்த வெட்டி நாள்லே வெய்யில்லே யார் வருவாங்க?"

கிளி ஜோஸ்யக்காரப் பாண்டியன் திறந்த வாய் மூடாமல் அவர்களையே பார்த்துக் கொண்டிருந்தான்; குறிப்பாக அந்தப் பெண்ணை.

எதற்கோ திரும்பிய பானுஸ்ரீ பாண்டி தன்னையே பார்த்துக் கொண்டிருப்பதை உணர்ந்ததும் புன்னகைத்தாள். சட்டென்று அவனை நோக்கி நடந்தாள்.

"என்ன கிளி ஜோஸ்யமா?"—கேட்டாள்.

"ஆமாம்மா..." பாண்டியன் வாயெல்லாம் பல்லாகச் சிரித்தான்.

"எத்தினி காசு?"

"பதினைந்து காசு"

"ம்... ஒரு சீட்டு எடுக்கச் சொல்லு பார்ப்போம்."

"உங்க பேரைச் சொல்லுங்கம்மா."

பானுஸ்ரீ உடனே தயங்கினாள். எந்தப் பெயரைச் சொல்லுகிறது என்கிற பாவனையில் திரும்பி — வழுக்கையையும் கிருதாவையும் பார்த்தாள். அவர்கள் சிரித்தார்கள்.

"லட்ச லட்சமாச் சம்பாதிக்கிற நீ, உன்னோட அதிர்ஷ்டத்தைப் பார்க்கிறதுக்காக இந்தக் கிளி ஜோஸ்யம்தானா கிடைச்சது? பார்த்தா யாராச்சும் சிரிப்பாங்க..."

"பார்க்க யாரும் இல்லேங்கிற தைரியத்திலேதான் கிளி ஜோஸ்யம் பார்க்கிறேன். இதே கிளி ஜோஸ்யம் மவுண்ட் ரோடிலே பார்க்க முடியுமா என்ன?"

பானுஸ்ரீ சிரித்துக் கொண்டே சொல்ல—

கிருதா சொன்னான்... "ம்... ம்...பாரு பாரு.. சீக்கிரமாப் பாரு.. உன்னோட நிஜப் பேரையே சொல்லு..."

வழுக்கை பாண்டியைப் பார்த்துக் கத்தினான். "அம்மா யாருன்னு தெரியுதாய்யா உனக்கு?"

"தெரியல்லீங்களே!"

பாண்டிக்குத் தன்னைத் தெரியாது என்றதும் பானுவுக்கு அவமானத்தில் முகம் சிவந்தது. மனப் பொருமலை அடக்கிக் கொண்டாள். சொன்னாள்: "ரங்கமணி பேருக்குச் சீட்டெடு பார்க்கலாம்."

பாண்டி உற்சாகமாய்க் கிளிக் கூண்டின் கதவைத் தூக்கி விட்டான். ''சாட்சாத் மகாலட்சுமி தேவியாட்டம் வந்து நிக்கிற ரங்கமணி என்ற பேர் நாமம் கொண்ட இந்தப் பெண்ணுக்கு — மருதமலை மருதாசல மூர்த்தியை நினைச்சுட்டு ஒரு சீட்டு எடுத்துத் தாடி என் சிந்தாமணி....''

கிளி வெளியே வந்தது. சிவந்த அலகால் அடுக்கிவைத்திருந்த சீட்டுக்களை ஒன்றன் பின் ஒன்றாய் இழுத்துப் போட்டது. ''நிதானமா அவசரப்படாமே யோசிச்சுச் சீட்டை எடு.'' பாண்டி சொல்லச் சொல்ல ஒரு சீட்டை வாயில் கவ்விப் பாண்டியன் கையில் போட்டது கிளி.

நெல்லைக் கொடுத்துக் கிளியைக் கூண்டுக்குள் அனுப்பிவிட்டுச் சீட்டைப் பிரிக்க ஆரம்பித்தான். கணீரென்ற குரலில் சொன்னான்: ''நேரம் சரியில்லே தாயீ... ஆவேசமான கோலத்திலே காளிமாதேவி வந்திருக்கா பொருள் நஷ்டம்... அபகீர்த்தி... தொழில் தேக்கம்... சத்ரு பங்க... எல்லாமே வர சந்தர்ப்பம் இருக்கு... இதுக்கொரு பரிகாரம்....'' பாண்டி சொல்லி முடிக்கவில்லை.

கிருதாவும், வழுக்கையும், பானுஸ்ரீயும் கெக்கலியிட்டுச் சிரித்தனர்.

''ஏய்யா... சோத்துக்குச்செத்த உன்னோட சொத்தைக் கிளி எடுத்துக் கொடுத்த சீட்டை வெச்சுக்கிட்டு இப்படி ஒரு யானைப் புளுகு புளுகறியே... இது நியாயமா? எண்பத்தஞ்சாம் வருஷம் வரை கால்ஷீட் ஃபுல். வாக்கர்ஃபுல். எல்லாம் நிறைஞ்சு வழியு தய்யா...!''

பாண்டி வெலவெலத்துப் போனான்.

''ஸார்! ஸ்டெப்னியை மாட்டிட்டேன். புறப்படலாம்'' — டிரைவர்.

''உம்... புறப்படலாம்...'' — காருக்குள் ஏறப்போன கிருதாவைப் பார்த்துப் பானுஸ்ரீ சொன்னாள்... ''அந்த கிளி ஜோஸ்யக்காரனுக்கு ஒரு எட்டணா குடுத்துட்டு வாங்க.''

''என்கிட்டச் சில்லறையே இல்லையே'' வழுக்கை.

''என் கிட்டேயும் இல்லே.'' — கிருதா.

பானுஸ்ரீ கேட்டாள்: ''ஏம்ப்பா பத்து ரூபாய்க்குச் சில்லறை இருக்குமா?''

''ம்...தர்றேன்....'' — கிளிக் கூண்டின் மேல் அறையைத் திறந்தான் பாண்டி. பல நாள் சேமிப்பில் சில ஒற்றை ரூபாய் நோட்டுக்கள். அதை எடுத்து எண்ணினான்.

''ஒன்பது ரூபாய்தான் இருக்கும்மா.''

''சரி குடு.''

ஒன்பது ஒற்றை ரூபாய்த் தாள்களை வாங்கி டம்பப் பையில் திணித்து, அந்தப் பத்து ரூபாய் நோட்டைக் கொடுத்தாள் பானுஸ்ரீ.

அந்த நீண்ட சாலையில் கார் ஒரு புள்ளியாய் மறையும் வரையில் — அதையே பார்த்துக் கொண்டிருந்தான் பாண்டி.

கார் கோவை நகருக்குள் பிரவேசித்தது.

பாலதண்டபாணி கோயிலைக் கடக்கையில் எதற்கோ டம்பப் பையைப் பிரித்த பானுஸ்ரீ திடுக்கிட்டாள். ''அடேடே.....!''—கையைச் சொடுக்கினாள். முகம் வெளுத்தது.

''என்ன பானு?'' — வழுக்கையும் கிருதாவும் தவிப்போடு கேட்க... வாய் உலர்ந்து போகச் சொன்னாள் பானுஸ்ரீ: ''அந்தப் பத்து ரூபாய் நோட்டை எடுத்துக் குடுத்துட்டேன்....'' வழுக்கை திடுக்கிட்டுக் கேட்டது: ''எந்தப் பத்து ரூபாய்...?''

''அதான்... பாலக்காட்டிலே இருந்து ராமன் நாயர் கொண்டு வந்து குடுத்த மாடல் பத்து ரூபாய் நோட்டு. நாம பிரிண்ட் பண்ணினதில் தப்பாப் போன நோட்டு....''

கிருதா அலறினான்: ''அடிப் பாவி! கெடுத்தியே காரியத்தை...! மாணிக்கம் காரைத் திருப்பு...! மருதமலைக்கே ஓட்டு. அந்தக் கிளி ஜோஸ்யக்காரன் இன்னமும் அங்கே தான் இருப்பான்....''

கார் திரும்பியது. மருத மலையை நோக்கித் திரும்பவும் சீறியது.

பதினைந்தே நிமிடம்!

கார் மலையடிவாரத்தை நெருங்கியது. மூவரும் காரை விட்டு இறங்கி ஆவலாய்ப் பார்க்க — பாண்டி உட்கார்ந்திருந்த இடம் காலியாய் இருந்தது.

அன்று மாலை....

பாண்டி, பையில் பணம் கணிசமாய் இருந்த தெம்பில் பஸ் பிடித்து, காந்திபுரம் இறங்கி, தென்பட்ட அந்த சொகுசு ஓட்டலில் காப்பி குடிக்க ஆசைப்பட்டு — உள்ளே நுழைந்து ஒரு வடையும் காப்பியும் சாப்பிட்டு சர்வர் கொடுத்த பில்லையும், அந்தப் பத்து ரூபாய் நோட்டையும், கேஷ் கவுண்டரில் இருந்தவரிடம் கொடுக்க — அசல் ரூபாய் நோட்டுக்களைப் பார்த்துப் பார்த்து, ஸ்பரிசித்து ஸ்பரிசித்துப் பழக்கப்பட்டுப் போன கேஷியர் கொஞ்சம் வித்தியாசமாய், மரமரப்பாய் இருந்த அந்தப் பத்து ரூபாய் நோட்டைப் பார்த்ததும் சந்தேகப்பட்டு போலீசுக்குப் போன்செய்ய பத்து நிமிஷத்தில் ஜீப்பில் வந்து இறங்கிய இன்ஸ்பெக்டர் பாண்டியின் கன்னத்தில் செமத்தியாய் ஒரு அறை கொடுத்து அந்தப் பத்து ரூபாய் நோட்டைப் பற்றி விசாரிக்க....

பாண்டி நடுங்கும் குரலில் சொல்லிக் கொண்டிருந்தான்: '' 'பானுஸ்ரீ'ன்னு ஒரு நடிகையம்மாதான் இந்த நோட்டை...''

அவன் கையிலிருந்த கூண்டில் சிறகுகளை அடித்துக் கொண்டு — அந்தக் கிளி 'கீச்கீச்' சென்று கத்த ஆரம்பித்தது.

அது அதனுடைய வெற்றி கீச் கீச்!



லாவோஸ் மக்கள் இன்றளவும் மன்னர்கள் பரம்பரையைக் கடவுளின் தூதர்கள் என்று நினைக்கின்றனர்!

மன்னர் ஆட்சி நடந்த காலத்தில் மன்னர் தெரு வழியே பவனி சென்றால் அவரை ஏறெடுத்தும் பார்ப்பது கடவுள் நம்பிக்கைக்கு எதிரான செயல் என்று கருதி மன்னர் தங்களைக் கடந்து செல்லும் வரை மக்கள் குனிந்து தங்கள் கைவிரல்களால் பூமியைத் தொட்ட வண்ணம் கண்களை மூடிக் கொண்டிருப்பார்கள்.

- பி. நாராயணன்



முழு நாவல்

கம்ப்யூட்டர்கள் உலகை ஆண்டபோது

செம்பியன்

செய்தித் தாள் பெட்டியின் விசையைத் திருப்பினேன். எக்ஸ்பிரஸ் நாளிதழ் அறிவிப்பாளர் அன்றைய செய்திகளுடன் திரையில் தோன்றினார். பண வீக்கத்தைக் கட்டுப்படுத்தி விலைவாசிகளை ஸ்திரப்படுத்தி இந்தியப் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யப்போவதாக நிதி அமைச்சர் கூறியிருந்தார். பிரதமர் தமது மகன் அரசியலுக்கு வருவாரா இல்லையா என்பது தமக்குத் தெரியாது என்றும், தம் மகனைத்தான் கேட்க வேண்டும் என்றும் நிருபர்களுக்குப் பதில் அளித்திருந்தார்.

எத்தனை தலைமுறை வந்து போனாலும் விஞ்ஞானம் எவ்வளவு முன்னேற்றம் அடைந்தாலும் தீராத பிரச்னைகள் என்று முணுமுணுத்தபடியே வேறு விசையைக் கிளிக்கினேன். அமெரிக்கச் செய்திகள்: ஜனாதிபதி

தேர்தல் விரைவிலேயே நடக்கும்... கிளிக்... கிளிக்... விஞ்ஞானச்செய்திகள்... மியாமி நகர் ஸெயிண்ட் ஹாயிமருத்துவ மனையில் இரு எம்பிரையோ பெட்டிகளைக்காணோம்! இது விஞ்ஞானிகளுக்கும் எஃப். பி. ஐ.க்கும் பெரும் கவலை தருகிறது. கர்ப்பமாக விரும் பும் தாய்மார்களின் கருப்பையில் வைப் பதற்கென ஏராளமான பொருட் செலவில் பரி சோதனைச் சாலையில் விஞ்ஞானிகள் தயாரித்திருந்த சூல்கள் இவை. ஒவ்வொரு பெட்டியிலும் பத்து சூல்கள் இருந்தன. இவற் றின் ஐ.கியூ. மிக அதிகம் என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஒவ்வொன்றும் ஒரு மேதை யாக வளரக் கூடிய சூல்.....

பஸ்.... பஸ்... பஸ்... ''ஹலோ பரணி பேசறேன்.'' டெலிஃபோன் திரையில் டாக்டர் ஸீமன்ஸ் தோன்றினர். ''மிஸ்டர் பரணி செய்தி தெரியுமா?''

''இப்பத்தான் கேட்டேன். இருபது எதிர் கால மேதைகள் திருடப்பட்டு விட்டார்கள். அதனால் என்ன?''

''என்னவா? - துர்நோக்கம் கொண்ட வர்கள் கைக்கு அந்தச் சூல்கள் போய்ச் சேர்ந்தால்.....''


''அத்தனை மேதாவிலாசமும் தீய சக்திகள் பலம் ஓங்கவே பயனு கும்! உங்கள் பயம் எனக்குப் புரிகிறது.''

''நீங்கள் உடனே வரமுடியுமா? பத்து பேர் அடங்கிய ஒரு டாஸ்க்ஃபோர்ஸ் உருவாக்கறோம். அவர்களில் ஒருவராக உங்கள் பெயரையும் எஃப். பி. ஐ. கம்ப் யூட்டர் சிபாரிசு செய்திருக் கிறது.''

''தன்யனானேன். குழு என்று கூடுகிறது?''

''நாளை மறுதினம் காலை பத்து மணிக்கு அமெரிக்க நேரம்.''

''ஓகே! நான் வந்து விடுகிறேன்.''



எனக்குப் பெருமையாகவும் இருந்தது: கொஞ்சம் வருத்தமாயுமிருந்தது. ஒரு ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். பிறக்கும் குழந்தை பெற்றோரின் விருப்பத்துக்கு ஏற்பப் பச்சை, நீலம் அல்லது ஊதா நிறத்தில் பிறப்பதை விஞ்ஞானம் சாத்தியமாக் கியதில் ஒரு புதிய பிரச்னை தோன்றியிருந்தது. குழந்தை வளர்ந்து யௌவனப் பருவத்தை அடையும்போது, 'எனக்கு நீல நிறமாக இருக்கப் பிடிக்கவில்லை! மஞ்சளாக இருக்க ஆசைப்படுகிறேன்' என்றது. யுவதிகள்தான் பெரும்பாலும் புகார் செய்தனர். 'இடுப்பு வரை இளம் பச்சையாகவும் இடுப்புக்குக் கீழே இளம் சிவப்பாகவும் பிறந்திருக்கக் கூடாதா நான்?' என்று கூடஏங்கினர். எனவே வளர்ந்து ஆளான பின் மனிதன் நிறம் மாற முடியுமா என்று ஆராய்ச்சி செய்து கொண் டிருந்தேன்.

கம்ப்யூட்டரைப் பார்த்தேன். ''ஸாரி நமது ஆராய்ச்சி பாதியில் நிற்க வேண்டியது தான். நான் அமெரிக்கா போகணும்'' என் றேன்.

புரிந்து கொண்டதற்கு அடையாளமாக அதன் பச்சை விளக்குக் கண் சிமிட்டியது. ரொம்ப அத்யாவசியமானாலொழிய அது பேசாது. நிம்மதி.

ஒரு ஸூட் கேஸை பாக் செய் தேன். அங்கு போய் ஒரு நாள் அணிந்து எறிந்து விடக் கூடிய பேப்பர் உடைகளை வாங்கிக் கொள்ளலாம்தான். ஆனால் வழியில் காப்பியோ டீயோ சிந்தி விட்டால் மாற் றுடை தேவை. ஒரு ஸூட், நாலைந்து ஷர்ட்

டுகள், டைகள், அண்டர்வேர், கர்சிப்... இத்யாதி.

ஆலிவரை இயக்கினேன். கையடக்கமான அந்த மினி கம்ப்யூட்டர் அமெரிக்காவுக்குத் துரிதமாகச் செல்ல எந்த மானோ ரயில், எந்த விமானம், எந்த லைப்மரீன் கோச் என்றெல்லாம் கூறிப் பயணத்தைத் திட்டம் வகுத்துத் தந்தது. ஆலிவரைப் பெட்டியில் வைத்து மூடிப் புறப்பட்டேன்.

தெரு முனையில் மின்காந்த மானோ ரயிலில் ஏறிச்சாலைகளுக்கு மேலாக ஒற்றைத் தண்ட வானத்தின் மீது விரைந்து விமான நிலையத்தை அடைந்தேன். டோக்கியோ வரை தான் விமானப் பயணம் — அல்லது லண்டன்.

''பஸிபிக்அல்லதுஅட்லாண்டிக் மீதாகவிமானங்கள்பறக்கத் தடை வந்த பிறகு ரொம்பச் சிரமம்'' என்றார் சக பயணி.



"என்ன செய்ய? பெட்ரோலியம் தட்டுப்பாடு" என்றேன்.

"'ப்ச... ரயிலிலிருந்து விமானம், விமானத்திலிருந்து ரயில், மறுபடி ரயிலிலிருந்து சப்மரைன் கோச்... எத்தனை மாறுவது? போர்!" என்றார்.

"போர்தான்!" லண்டன் விமான நிலையத்திலிருந்து அண்டர் கிரௌண்டில் ரயிலேறி சப்மரைன் துறைமுகத்தை அடைந்தேன். நியூயார்க்குக்கு டிக்கெட் வாங்கிக் கொண்டு கியூவில் நகர்ந்தேன்.

கஸ்டம்ஸ், நாணய மாற்றம் எல்லாம் சாதாரண மக்களுக்குத்தான். என்னிடமிருந்தது X பாஸ்போர்ட். ஜனநாயக நாடுகளில் எங்கும் எனக்கு விசேஷ மரியாதை. போர்ஜரி பண்ண முடியாத இது போன்ற X பாஸ்போர்ட்கள் உலக ஜனநாயகங்களில் மொத்தமே ஆயிரம்தான் இருந்தன.


ஸப்மரீன் கோச்சில் ஏறினேன். அட்லாண்டிக்குக்கு அடியில் சமைக்கப்பட்ட குகைப் பாதை வழியாக கோச் விரைந்தது. மணிக்கு 600 மைல். அதற்கு மின் விசையைக் கம்ப்யூட்டர்களால் நிர்வகிக்கப்பட்ட ஆழ்கடல் மின்நிலையங்கள் அளித்தன. கடலின் பல்வேறு மட்டங்களில் நிலவும் வெப்ப வித்தியாசத்தைப் பயன் படுத்திக் கொண்ட மின் நிலையங்கள். கடலின் அழுத்தத்தால் நசுங்கிவிடாத உறுதியான உலோகத்தாலான குகைப் பாதை. கோச் நகருவதை உணர முடியவில்லை. ஆனால் ஜன்னல் வழியே பார்த்தபோது ஆழ்கடல் காட்சிகளில் மாற்றங்கள் தெரிந்தன.

நியூயார்க்கில் என்னை வரவேற்று அழைத்துப் போக ஸீமன்ஸ் ஆள் அனுப்பியிருந்தார். அவள் ஒரு ஹியூமனாய்ட். பரிணாம வளர்ச்சியில் ரோபாட்டிலிருந்து தோன்றியவள். இன்றைக்கும் ஜவுளிக் கடை ஜன்னல்களில் நாம் காணும் எழில் நங்கை உருவம் உயிர் பெற்று வந்தது போல காட்சியளித்தாள். ஆனால் அதை விடவும் மென்மையான மிருதுவான உடல். 'உயிர்' கொடுத்தது அவளுக்குள்ளே இருந்த நுணுக்கமான இயந்திரங்கள்.

ஆறுமுகனுக்கு ஆறு கைகள்

கும்பகோணம் ஆதி கும்பேஸ்வரர் ஆலயம். "இக் கோயிலில் உள்ள கார்த்திகேயனுக்கு ஆறு கைகள். வடநாட்டில் ஒரு கோயிலில் இதே போல ஆறு முகங்கள், ஆறுகைகள் மட்டுமே உடைய கார்த்திகேயன் இருக்கிறான் ...." என்ற அறிவிப்புப் பலகை முருகன் சந்நிதியில் காணப்படுகிறது.

- ஏ. சுவாமிநாதன்



"வெல்கம்! கார் காத்திருக்கிறது!" என்றாள்.

2

பாட்டரியால் இயங்கிய கார் புகை எழுப்பாமல் சத்தப்படுத்தாமல் சென்றது. மான்ஹாட்டன் தீவின் 45-வது தெருவில் ஒரு கட்டிடத்தின்வாசலில் கார்நின்றது. நீங்கள்" சுமார் மூன்று மாதங்கள் வரை இங்கிருக்க நேரும் என்பதால் தாற்காலிக குடும்பம் ஏற்பாடு செய்திருக்கிறார் ஸீமன்ஸ். 108வது மாடி அபார்ட்மெண்ட் 522."

"எல்லாம் ஒன்பது; அதிர்ஷ்டம்" என்றேன்.

"காலை பத்து மணிக்கு மீட்டிங். ஒன்பதுக்கு உங்களை அழைத்துப் போக வருகிறேன். அதுவரை பயணக் களைப்புத் தீர ஓய்வெடுங்கள்."

நன்றி கூறி நடந்து லிஃப்டில் ஏறினேன்.

பஸ்ஸரை அழுத்தியதும் 522 கதவு திறந்தது. நான் எதிர்பார்க்கவில்லை. அத்தனை அழகு. நியூயார்க் குளிரை விரட்ட வெம்மைப்படுத்தப்பட்ட அந்தக் கட்டிடத்தின் உஷ்ணத்தையும் விட அதிகமாக என் உடலில் சூடேறியது.

"குட் ஈவினிங். நான் பரணி!" என்றேன்.

"வாருங்கள், எதிர்பார்த்திருக்கிறேன்.. நான் சித்ரா!" என்றாள். என் அறையை எனக்குக் காண்பித்து விட்டு காப்பி கொண்டு வரச் சென்றாள்.

பாத் ரூமில் ஷேவிங் முடித்து, புது சோப் சுத்தமான டவல் எல்லாம் பயன்படுத்தி உடை மாற்றி, வாசனை பூசி வெளியே வந்தேன்.

காப்பி அருந்தியபடியே அவளைக் கவனித்தேன். நர்வஸ்ஸாக இருந்தாள்.

"சித்ரா! உடம்பு சரியில்லையா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

"பிறகு?"

"பயமாயிருக்கிறது!"

சிரித்தேன். "என்னைக் கண்டா?"

"இல்லை! இல்லை! எனக்குத் தாற்காலிகக் குடும்பம் நடத்தி முன் அனுபவமில்லை."

"என்றாவது ஒரு நாள் முதல் அனுபவம் ஏற்பட வேண்டியதுதானே?"

"நியூயார்க்கில் உள்ள லட்சக் கணக்கான பெண்களில் கம்ப்யூட்டர் என்னை ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?"

"நீ எனக்குச் சகல விதத்திலும் பொருத்தமானவள் என்பதால்தான்!"

"எனக்குப் பிடிக்கவில்லை."

"பிடிப்பதும் பிடிக்காததும் உன் கையில் இல்லையே. இன்று தற்காலிக அலுவல்களும், தற்காலிகக் குடும்பங்களும் சர்வ சாதாரணமாகி விட்டன அல்லவா? என்னையே எடுத்துக்கொள். சென்னையில் மிக முக்கியமான ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தேன். ஆனால் அவசரமான ஒரு பிரச்னையை ஆராய நிறுவப்பட்ட குழுவில் அங்கம் வகிக்க வருமாறு உத்தரவு வந்தது. மூன்று மாதமாகும் என்று எதிர்பார்க்கிறார்கள்."

"என் கணவரும் இப்படித்தான் திடுமென ஸியாட்டில் வருமாறு அழைக்கப்பட்

டார். போயிங் நிறுவனத்துக்குப் புதிய விண்கல ஆர்டர் வந்திருக்கிறதாம். விமானப் படை வேறு விண்கலப் படை வேறு என்று பிரிந்த பிறகு ஏகப்பட்ட புதிய ஆர்டர்கள். ஏதோ ரகசிய ஆயுதங்களைத் தாங்கிய விண் கப்பல்கள் தயாராகின்றனவாம். அதற்கென ஆறு மாதத்துக்கு ஒரு நிபுணர் குழுவும் மூன்று ஆண்டுகளுக்கு உழைப்பாளர் பட்டாளமும் உருவாகியுள்ளன.''

''ஸியாட்டல் நகரில் அவருக்கும்தான் ஒரு தற்காலிகக் குடும்பத்தை கம்ப்யூட்டர் தேர்ந்தெடுத்திருக்கும்!''

''இருக்கலாம்! நான் கேட்கவில்லை.. அவரும் சொல்லவில்லை!''

''நான் சொல்கிறேனே!''

''சரி!''

''என்ன சமையல்?''

அவள் சொன்னாள். எனக்குப் பிடித்தமான உருளைக் கிழங்கு பொடிமாஸ், காலி ஃப்ளவர் சாம்பார், தக்காளி பச்சடி, மிளகு அப்பளம், தயிர். தொடக்கத்தில் டர்ட்டில் சூப்; முடிவில் ஃப்ரூட் சாலட். சமையலறை ரோபாட்டிடம் பொறுப்பை விடாமல் சித்ரா தானே தன் கையால் எனக்காகத் தயாரித்தவை!

''கம்ப்யூட்டரின் நுண் அறிவு எப்படி ஒவ்வொன்றையும் கவனித்து எனக்கு ஏற்ற குடும்பத்தைத் தேர்ந்தெடுத்திருக்கிறது, பார்த்தாயா? குழந்தைகள் எங்கே?''

''எங்களுடன் இல்லை. உத்யோகத்தில் இருக்கிறார்கள். கல்யாணமாகிப் பிரிந்து விட்டார்கள்.''

''அப்படியானால் உனக்கு வயது நாற்பத்தைந்துக்குக் குறைவில்லை.''

''ஐம்பத்தி மூன்று!''

''பிறகென்ன? இன்னுமா பயம்? பத்து வருஷத்துக்கு ஒரு முறை இளமை இயந்திரத்துக்குள் புகுந்து என்றும் இருபதாக இருக்கிறாய். எனக்கு என்ன வயது தெரியுமா? முப்பதுதான்!''

''அதனால்தான் நடுக்கமே!''

''பிதற்றல். வயது என்பது மரணத்தை நெருங்கும் நேரத்தைக் குறிப்பதற்கான ஓர் அளவுகோல். எழுபதானதும் நாமே மரண மண்டபத்தைச் சென்றடைகிறோம். அல்லது அரசாங்க மரணக் காவலர்கள் வந்து அழைத்துப் போய் விடுகிறார்கள், ஜனத் தொகையைச் சமன்படுத்த. மற்றபடி குடும்பம் பந்தம் பாசம் காதல் வயது வித்தியாசம் இதற்கெல்லாம் அர்த்தம் ஏது இந்த உலகில்? அதுவும் அமெரிக்காவில்! இவ்வளவு அபிவிருத்தியடையாத வேறு நாடுகளில் வேணுமானால் கொஞ்சம் நஞ்சம் ஒட்டிக் கொண்டிருக்கலாம். நீங்களோ அமெரிக்கப் பிரஜைகள்.''

''அவர் என்ன நினைப்பார்?''

''அவருக்கு இது பற்றி நினைக்கவே நேரமிருக்காது. மேலும் நான் உன்னைப் பற்றிச் சாதகமான ரிப்போர்ட் தரவில்லையெனில் கம்ப்யூட்டர் உன்னைப் பற்றி என்ன நினைக்கும் என்பதல்லவா முக்கியம்? இப்படி வா!''

அவள் நடந்தாள். இலேசாகத் தடுமாறிய போது பற்றி, பக்கவில் அமரப் போனவளை



மனைவி: ''உங்களுடைய துணிமணியெல்லாம் கொடுத்துப் பாத்திரம் வாங்கிவிட்டேன்.''
கணவன்: ''இன்றும் ஏன் வாசலில் நிற்கிறாய்?''
மனைவி: ''ஒரு சின்ன கரண்டி வேணும். அதற்காக உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.'' -எஸ். மாரியப்பன்

மடி மீதே அமர்த்திக் கொண்டேன். அவள் இதயம் பெரிதாக அடித்துக் கொள்வதைக் கேட்க முடிந்தது. என் கரங்களின் அணைப்பிலும் விரல்களின் வருடல்களிலும் அதரங்களின் ஸ்பரிசத்திலும் அவள் இதயம் படிப்படியாக அமைதியுற்று இயல்பாக இயங்கியது. அவள் கரங்கள் என் தோள்களில் கொக்கி போட்டன.

''தற்காலிகத் திருமணம் வேணுமானால் செய்து கொள்ளலாம்... உன் மன அமைதிக்காக.... ஃபோனில் நான் பேசட்டுமா?''

''வேண்டாம். அவசியமில்லை'' என்று தலையசைத்தாள்.

ஆடைகள் நெகிழ்ந்தபோது, இளமை இயந்திரம் அவள் யௌவனத்தை நன்றாகவே பாதுகாத்திருப்பது தெரிந்தது. எனக்குப் பிடித்த உணவு விஷயத்தில் மட்டுமல்ல; ஸெக்ஸ் உறவு விஷயத்திலும் கம்ப்யூட்டர் என் தேவைகளை உணர்ந்து கவனம் செலுத்தியிருப்பது புரிந்தது. நான் எதிர்பார்த்தவை கேட்டுப் பெற அவசியமின்றியே நிறைவேறின.

3

கூட்டம் நடைபெறவிருந்த அறையில் பத்து நிமிஷங்கள் முன்பாகவே நான் ஆஜர். வேறு சிலரும்தான். ஸிமன்ஸ் எங்கே?

ஜன்னலை ஒருவர் கட்டை விரலால் சுட்டிக் காட்டினார். 112வது மாடியிலிருந்த நான் எட்டிப் பார்த்தேன். கீழே 110வது மாடியின் வெளித் தாழ்வாரத்தில் பெரிய நீச்சல் குளம் தெரிந்தது. சுற்றிலும் சின்னப் பூங்கா. சுடு நீரில் ஸிமன்ஸ் நீந்திக்கொண்டிருந்தார். அவருடன் சேர்ந்து நீந்தியது ஒரு பெண்ணுருவம் — ஹியூமனாய்ட்தான். சட்டென அது மூழ்கி மறைந்தது. நீந்திக் கொண்டிருந்த ஸிமன்ஸ் களுக்கென்று சிரித்தார். ''லிலியன்! போக்கிரி! சும்மா இருக்க மாட்டாய்!'' என்று செல்லமாக அதட்டிய போது, இன்னொரு தரம் என்று கெஞ்சியது போலிருந்தது. படியேறி வந்தார். இன்னொரு பெண் — மற்றொரு ஹியூமனாய்ட் — டவல் தந்தாள்; பாத்ரோபுடன் தயாராய் நின்றாள். காரியதரிசியாக மூன்றாவது ஒருத்தி அழகாக நடந்து வந்தாள். கூட்டம்

தொடங்கும் நேரம் நெருங்கி விட்டதை அவள் நினைவூட்டியிருக்க வேண்டும்.

ஸீமன்ஸ் நாங்கள் காத்திருந்த அறையை ஒரு முறை அண்ணாந்து பார்த்தார். அவசரமாக பாத்ரோப் தரித்து விரைவாக நடந்து மறைந்தார்.

அவருக்கு ஹியூமனாய்ட்களிடம் கொஞ்சம் சபலம் அதிகம் என்று கேள்வி. ஒரு ஹியூமனாய்ட் பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளவும் விரும்பினாராம்! ஆனால் சட்டம் இடம் தரவில்லை. இன்னும் திருமணம் ஆகாமலேதான் இருக்கிறார். இது விஷயத்தில் சட்டத் திருத்தம் கொணர வேண்டும் என்று அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினரிடையே அபிப்பிராயத்தை உருவாக்கி வருகிறார்.

அறைக்குள் அவர் நுழைந்ததும் பின்னோடு அந்த ஹியூமனாய்ட் பெண்களும் வந்தனர். லிலியன், நான்ஸி, ஒளாரா என்று அறிமுகம் செய்வித்தார். ஒளாராதான் நேற்றும் இன்றும் எனக்குக் கார்ஓட்டியவள். என்னைப் பார்த்து வேடிக்கையாகக் கண்ணடித்துப் புன்னகைத்தாள்.

''இன்றைய கூட்டத்தின்போது உங்களுக்குத் தேவையான உதவிகளை இந்த மூவரும் செய்வார்கள். காப்பி, டீ, சிகரெட் எது தேவையானாலும் இவர்களிடம் கேட்கலாம். மதிய உணவு ஒரு மணிக்கு வரும். இம்மூவரும் பரிமாறுவார்கள். வேறு யாரும் இந்த அறைக்குள் அனுமதிக்கப் படமாட்டார்கள். இந்தக் கூட்டத்தில் பேசப்படுவதை இம்மூவரும் கேட்கத்தான் நேரும். ஆனால் கூட்ட முடிவில் இரேஸ் பட்டனை அழுத்தி அவர்கள் கேட்டதையெல்லாம் மறந்துவிடச் செய்யலாம். ஹியூமனாய்ட்களிடம் இது ஒரு பெரிய சௌகரியம். இன்னொன்று: இந்த ரகசியக் கூட்டத்தில் பேசப்படுவதை யாரும் குறிப்பு எடுத்துக் கொள்ளக் கூடாது. மறதியாக அதை எங்கேனும் நீங்கள் வைக்கலாம். அல்லது இருட்டுப் போய் விரோதி கையில் கிடைத்து விடலாம்....''

முன்னுரைக்குப் பின் விஷயத்துக்கு வந்தார் ஸீமன்ஸ். ''ஸெயிண்ட் லூயி மருத்துவ மனையில் சீதோஷ்ண நிலை கட்டுப்படுத்தப் பட்டிருந்த ஓர் அறையிலிருந்து இரு எம்பிரையோ பெட்டிகள் காணாமல் போயின. ஒவ்வொன்றிலும் பத்து சூல்கள். பெண்களின் கருப் பையில் பதித்தால் ஒன்பதாவது மாதம் குழந்தையாகப் பிறந்து பின்னர் மாமேதைகளாக வளரக் கூடிய சூல்கள். யார் அவற்றைக் கொள்ளையடித்துப் போனார்கள்? எதற்காக? என்று புரியவில்லை. ஏராளமான பணம் பெற்றுக் கொண்டு யாருக்காவது விற்றிருக்கலாம் எனில் வாங்கியவர்கள் யார் என்று தெரியவில்லை. டீன் உள்பட மருத்துவமனை நிர்வாகிகள் காவலர்கள் நோயாளிகள் அனைவரும் விசாரிக்கப்பட்டு வருகிறார்கள். ஆனால் இதுவரை உபயோகமான தகவல் ஏதும் தெரியவில்லை.''

''இந்த விவரம்தான் பத்திரிகைகளில் வந்து விட்டதே! எங்களுக்குத் தெரியாத விஷயம் ஏதாவதுஇருந்தால் சொல்லுங்கள்'' என்றார்பிரிட்டிஷ் அறிஞர் ஒருவர் பொறுமை இழந்து.

''உண்மை சற்றுப் பயங்கரமானதுதான்'' என்றார் ஸீமன்ஸ். ''கேளுங்கள்: நள்ளிரவுக்கு மேல் ஒரு ஹைட்ரோஃபில்லில் நாலு. பேர் வந்திருக்கிறார்கள். காற்று குஷனில் மிதந்து' வந்த அந்த வாகனமோ அல்லது அவர்கள் கரத்தில் இருந்த லாஸர் கதிர் இயக்கத் துப்பாக்கிகளோ ஓசை எழுப்பவேயில்லை.' மருத்துவ மனை வாசலிலும் உள்ளேயும் கண்ணில் தென்பட்டவர்களையெல்லாம் லாஸர் துப்பாக்கி எரித்துவிட சாம்பலை நியூமேடிக் உறிஞ்சிகள் அள்ளிக்கொள்ளச் சுத்தமாக முன்னேறியிருக்கிறார்கள். பழக்கப் பட்டவர்கள்போல் நேரே எம்பிரையோக்கள் பாதுகாப்பாக இருந்த அறைக்குச் சென்று அதன் எஃகுக் கதவின் பூட்டை மீண்டும் லாஸர் ஒளியால் உடைத்துத் திறந்திருக்கிறார்கள். உள்ளே புகுந்து தாங்கள் நாடி வந்த இரு பெட்டிகளை எடுத்துக் கொண்டு திரும்பி மீண்டும் ஹைட்ரோஃபில்லில் ஏறி விரைந்து விட்டார்கள்.''

''அந்த எம்பிரையோக்களைப் பாதுகாப்பாகச் சரியான சீதோஷ்ண நிலையில் வைத்திருக்கும்ஆற்றலைஅவர்கள்பெற்றிருப்பார்கள். சரி, எங்கே போனார்கள்?''

''மியாமிக்கும் வெஸ்ட் பாம் பீச்சுக்கும் இடையில் ஒரு வயல் வெளியில் அவர்கள் வந்திறங்கிய பறக்கும் தட்டு காத்திருந்தது. அதன் திறந்த கதவின் சரிவில் ஹைட்ரோஃபில் தவழ்ந்து ஏறி உட்புகக் கதவு உயர்ந்து மூடிக்கொள்ள அது மேலெழும்பிச் சென்று மறைந்து விட்டது.''

''சாட்சியங்கள்?''

''இரண்டே பேர். மருத்துவ மனையில் ஒரு நோயாளி இரவு விழித்தெழுந்து இயற்கையின் அழைப்புக்குப் பதில் கூறக் கட்டிலை விட்டு இறங்கி நடந்திருக்கிறான். இவர்களைப் பார்த்துவிட்டு அப்படியே பீதியுடன் கத



அவன்: "வீட்டை விட ஹோட்டலே தேவலை!"

இவன்: "ஏண்டா?"

அவன்: "மாவாட்டினால்தான் இட்லி என்கிற மனைவியைவிட இட்லி தின்றபின் மாவாட்டச் சொல்கிற ஹோட்டல் முதலாளி பரவாயில்லைன்னு நான் நினைக்கிறேன்!"

-உ. ராஜாஜி

வுக்குப் பின்னால் பதுங்கிக் கொண்டான். வெஸ்ட் பாம் பீச் அருகே விடியு முன்னர் தன் வயலில் அறுவடை ஆரம்பிக்க எண்ணி டிராக்டரில் வந்த விவசாயி பிரமித்து டிராக்டரை நிறுத்திவிட்டு இருந்தான். உயர்ந்து வளர்ந்திருந்த சோளப் பயிர் இவனை அவர்கள் பார்வையிலிருந்து மறைத்திருக்கிறது. இல்லையெனில் இந்த இருவரையும் கூட அவர்கள் விட்டு வைத்திருக்க மாட்டார்கள்.''

''எப்படி இருந்தார்களாம்?''

''இரு சாட்சியங்களின் வர்ணனைகளும் ஒத்துப் போகின்றன. முக்கியமான இரு அம்சங்கள்: வந்தவர்களுக்கு வால் இருந்தது! அவர்களில் பெண்களுக்கு நான்கு நெஞ்சங்கள் இருந்தன!''

சற்று நேர மௌன அமைதி.

''சாட்சிகள் இருவரும் இப்போது எங்கே?''

''அவர்களைத் தனிமைப்படுத்தி வைத்திருக்கிறோம். அவர்களை யாரும் பார்க்கவோ பேசவோ முடியாது.''

''கிட்டத்தட்ட சிறை வாசம் போல் தான். பாவம்!''

''என்ன செய்ய? மக்களிடம் பீதியைக் கிளப்ப அரசு விரும்பவில்லை.''

''நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?''

என்னை நோக்கிப் பிரெஞ்சுப் பேர்வழியின் கேள்வி.

''அல்ட்ரா ஆசாமிகள்தான். எனக்கு ஐயமேயில்லை!'' என்றேன்.

''செவ்வாய்க் கிரகத்திலிருந்து இங்கு வந்து ஒரு மருத்துவ மனையைத் தாக்கிப் பலரைக் கொன்று கொள்ளையும் அடித்துப் போனார்கள் எனில் பூமி மீது செவ்வாய் போர் தொடுத்ததாகவே கொள்ளலாம்!'' என்றார் ஜப்பானியர்.

''ஆயினும் தாங்கள் வந்து சென்றதாகச் சாட்சியம் ஏதும் இருக்க வேண்டாம் என்பதிலும் அவர்கள் கவனமாயிருந்திருக்கிறார்கள். எனவே அவர்கள் போரை விரும்பவில்லை என்றும் ஊகிக்கலாம்'' என்றார் ஸீமன்ஸ்.

''போர் என்று வந்தால் நம்மை அவர்கள் வெல்ல முடியாது!''

''இப்போதைக்கு!'' என்றேன் நான். ''எதிர்காலப் பேரறிவாளர்களை இங்கிருந்து அவர்கள் திருடிச் செல்வதன் நோக்கமே எல்லாத் துறைகளிலும் நம்மை விட உயர்ந்துவிட வேண்டும் என்பதாகத்தானே இருக்கும்! நம் கவனத்துக்கு வராமல் இன்னும் எத்தனை சூல்கள் இப்படிக் கடத்தப்பட்டனவோ?''

''அடேயப்பா! மிக உயர்ந்த ஐ. க்யூ வுடன் விளங்கப் போகிற டெஸ்ட் ட்யூப் பேபிகளை உருவாக்க நாம் படுகிற பாட்டையும் அவை இப்படிச் சுலபமாகப் பறிபோவதையும் பார்த்தால் வயிறு பற்றி எரிகிறது'' என்றார் பிரிட்டிஷ் ஜெனிடிக்ஸ் நிபுணர்.

''பறக்கும் தட்டு எப்படி இயங்கியதாம்?''

''அதைச் சுற்றி ஓர் ஒளி பரவியதாகவும் தனது சோள வயலின் மத்தியில் சூரியோதயம் ஆவது போல் தோன்றியதாகவும் அந்த விவசாயி கூறுகிறான். கண்கள் கூசவே இறுக மூடினான். இமைகள் மீண்டும் பிரிந்த

மேலட்டை வண்ணப்படம்:
எம்.கே.ராமமூர்த்தி

போது பறக்கும் தட்டு வெகு தூரத்தில் தொடு வானத்தருகே சென்றிருந்தது. நொடிப் பொழுதில் மறைந்து விட்டது.''

''அவர்கள் சூரிய சக்தியைத் திறம்படப் பயன்படுத்த அறிந்திருக்கிறார்கள். ரொம்பத் துரிதமான முன்னேற்றம்தான். ஆனால் அதுவும் டாரஸ்ஸுக்குத் திருப்தி தரவில்லை போலிருக்கிறது. அறிவைக் கொள்ளையடிக்கிறான்!''

''செவ்வாய் உலகில் உள்ள நமது தூதருக்குச் செய்தி அனுப்பி ஆட்சேபணை எழுப்பலாமே?'' — ஒரு யோசனை பிறந்தது.

''அதில் என்ன பயன்? டாரஸ் உடனே அதனைக் கற்பனையான குற்றச்சாட்டு என்று மறுத்துவிடப் போகிறான்.''

''எஃப். பி. ஐ.யின் மாஸ்டர் கம்ப்யூட்டர் என்ன சொல்கிறது?'' என்று கேட்டேன்.

''எச்சரிக்கிறது!'' என்றார் ஸீமன்ஸ். ''நிச்சயமாக ஏதோ கெட்ட எண்ணத்துடன்தான் செவ்வாய்க் கிரக அதிபர் டாரஸ் தமது ஆட்களை அனுப்பி இங்கே இருந்து சூல்களைச் சூறையாடிச் சென்றிருக்கிறார் என்கிறது.''

''அதன் எச்சரிக்கையை அலட்சியப்படுத்துவதற்கில்லை'' என்றார் லண்டனிலிருந்து வந்திருந்த ஸ்காட்லண்ட் யார்ட் நிபுணர்.

மூன்று நாள் ஆலோசனைக்குப் பிறகு நிபுணர் குழு ஏகமனதாகப் பின்வரும் அறிக்கையை அமெரிக்க ஜனாதிபதிக்குத் தயாரித்தளித்தது.

ரகசியம், பரம ரகசியம்

ஸீமன்ஸ் தலைமையில் கூடிய இந்த நிபுணர் குழு செயின்ட் லூயி மருத்துவ மனையிலிருந்து இருபது சூல்கள் காணாமல்போனதை மிகவும் கவலையுடன் கவனிக்கிறது. இந்த சூல்கள் மாமேதைகளாக உருவாக விசேஷ கவனமுடன் தயாரிக்கப்பட்டவை. இவை அல்ட்ரா நாகரிகம் பரவியுள்ள செவ்வாய் கிரகத்திலிருந்து பூமியில் வந்து இறங்கியவர்களால் அபகரித்துச் செல்லப்பட்டதாக நம்ப இடம் இருக்கிறது. காரணம் புலப்படவில்லை. ஆனால் ஊகிக்க இயலும்.

இந்தச் சூல்களைத் தங்கள் கிரகப் பெண்களின் கருப் பையில் இட்டு வளர்த்து, குழந்தை பெறச் செய்து அவற்றுக்குப் பிராயம் வந்ததும் ஆராய்ச்சிகளில் ஈடுபட வைத்து செவ்வாய்க் கிரகத்தின் வளர்ச்சிக்குப் பாடுபடச் செய்யலாம். அல்லது குறிப்பிட்ட பணிகளைச் செய்ய அவர்களைத் தயார்ப்படுத்தி மீண்டும் பூமியிலேயே கொண்டு வந்து விடலாம்!

அந்தக் குறிப்பிட்ட பணிகள் என்னவாக இருக்கும் என்று எத்தனையோ விதமாகக் கற்பனை செய்யலாம். நன்மையோ தீமையோ எதுவும் நிகழலாம். எதற்கும் எச்சரிக்கை தேவை!

ஒன்று நிச்சயம். சூல்கள் வயிற்றில் வளர்ந்து பிறந்து யௌவனப் பருவம் அடையக் குறைந்தது பதினேழு ஆண்டுகள் ஆகும். எனவே அடுத்த பதினேழு வருஷங்களுக்குக் கவலை யில்லை. அதன் பின் உலகை ஆபத்து சூழ இடமிருக்கிறது. அவர்கள் நோக்கம் தெரியவில்லை ஆதலால் ஆபத்து எந்த விதமாக வரும் என்று அனுமானிப்பதற்கில்லை. இது விஷயம் ருஷ்ய அதிபருக்கும் தெரிவிப்பது நல்லது.

● ● ●

அமெரிக்க ஜனாதிபதி அறிக்கையைப் படித்தார். சிரிப்பை அடக்கிக் கொண்டார். மேதைகளின் ஒரு கூட்டறிக்கையைப் படித்துத் தாம் சிரித்ததாக வெளி உலகம் அறிந்தால் மக்களின் மதிப்பில் தாழ்ந்து போவோம் என்பது அவருக்குத் தெரியும். கடைசி வரியைப் படித்ததும் அவருக்குக் கோபம் வந்தது.

ஜனநாயக நாடுகளின் மேதைகள் தமக்குத் தந்த ஒரு கூட்டறிக்கையை கம்யூனிஸத் தலைவருடன் பகிர்ந்து கொள்வதா? ஒரு நாளும் முடியாது! கடைசி வரியை ஜனாதிபதி அடிக்கோடிட்டு மார்ஜினில் 'No' என்று எழுதினர்.

● ● ●

"இங்கு என் பணி முடிந்தது. நாளை நான் சென்னை திரும்புகிறேன், என் ஆராய்ச்சிகளைத் தொடர'' என்றேன் சித்ராவிடம். ''மூன்று மாதமாகும் என்று அனுமானித்தோம். ஆறு மூன்று நாள் கூட்டத்திலேயே ஒரு முடிவுக்கு வந்து விட்டோம். அறிக்கை சமர்ப்பித்தாகி விட்டது. குழு கலைந்து விட்டது.''

அவள் மௌனமாகத் தலை குனிந்து இருந்தாள்.

''மூன்று நாட்களுக்காக நாம் தற்காலிகக் குடும்பம் நடத்தியிருக்கவே வேண்டாம். நான் ஒரு ஹோட்டலில் அறை எடுத்துத் தங்கி இருந்தாலே போதும்!''

அவள் ஏறிட்டுப் பார்த்தாள்.

''மேலிடத்தில் தவறு நேர்ந்துவிட்டது. சரியான கணிப்பு இல்லை. வருந்துகிறேன்'' என்றேன்.

அவள் விழிகள் நீரில் மிதந்தன.

''என்னிடம் குறை ஏதும்...''

''சேச்சே! கொஞ்சமும் இல்லை. முதல் தர ரிப்போர்ட் அனுப்பப் போகிறேன். கம்ப்யூட்டரில் பதிவாகும். கவலைப்படாதே.''

அவள் உதடுகளைக் கடித்துக் கொண்டாள்.

''வரட்டுமா?'' என்று கேட்டபடியே வாசலை நோக்கி நகர்ந்தேன், ஸூட் கேஸுடன்.

''உங்களுக்குப் புரியவில்லை'' என்றாள் மிருதுவான குரலில்.

நின்றேன்.

''போகத்தான் வேண்டுமா?'' என்று அதைவிட மென் குரலில் கேட்டாள்.

திரும்பினேன்.

மகிழ்ச்சி முகத்தில் படர அவளை நோக்கி நான் நகர அவள் எழுந்து என்னை நோக்கி ஓடியே வந்தாள். அவள் முதுகை வருடிய படியே இன்னொரு கரத்தால் ஃபோனை எடுத்து ரிஸப்ஷனிஸ்ட்டை அழைத்தேன்.

''எனக்காகக் கிளாரா வாசலில் காருடன் காத்திருப்பாள். அவளைப் பேசச் சொல்!''

விரல்களால் சித்ரா என் காதுடன் விளையாடினாள்.

''கிளாரா ஹியர்!''

''நீ போகலாம். நான் இப்போது ஸப்மரைன் ஸ்டேஷன் செல்லவில்லை. அமெரிக்காவிலேயே சில காலம் சுற்றுப் பயணம் செய்து விடுமுறை அனுபவிக்கப் போகிறேன்!''

''புரிகிறது!'' என்று கூறிச் சிரித்தாள். ''குட்லக்!''.

சித்ராவின் அதரங்களுக்கு என் கன்னங்கள் எட்டவில்லை. ஃபோனை வைத்துவிட்டுக் குனிந்து கொடுத்தேன்.

''அடுத்த கம்ப்யூட்டர் உத்தரவு வரும் வரை நான் உங்களுடையவள்!'' என்று கிசுகிசுத்தாள் சித்ரா.

''இரண்டு மாதம் இருபத்தேழு நாட்களுக்குக் கவலை இல்லை!'' என்றேன்.

"நீ எழுதி இருக்கிற இந்த ஜோக் எனக்குக் கொஞ்சம் கூட புரியலையே!"

"எனக்கும்தான் புரியலே! அதற்காக அஞ்சு வருஷத்துக்கு முன்னே இதை எழுதினவரை போய்க் கண்டு பிடித்துக் கேட்பதென்பது ஆகக் கூடிய காரியமா?"

– பூபால் சிங்



சல்லியன்



சல்லியன் பாண்டவர்களின் மாமன். பாரதப் போரில் கர்ணனுக்குச் சாரதியாக வாய்த்தான் சல்லியன். கர்ணனைத் தோல்வியடையச் செய்ய வேண்டும் என்பதே சல்லியனின் நோக்கம். எனவே கர்ணன் வீறு கொண்டு எழும்போதெல்லாம் ஏதாவது பேசி அவனை அமர்த்திவிடுவான். இப்போது குறுக்கேகுறுக்கே பேசுபவர்களை 'என்னடா, சல்லிப் பயல்மாதிரிப் பேசுகிறாய்?' என்று சொல்வதுண்டு. 'சல்லிய'னிலிருந்து வந்ததுதான், சல்லிப்பயல்!

— பாரத்வாஜன்

4

மறுநாள் நான் ஸிமன்ஸை அவர் காரியாலயத்தில் அல்லாது ஒரு ஹோட்டல் அறையில் அந்தரங்கமான முன்னேற்பாட்டின்படி சந்தித்தேன்.

''நீங்கள் சொன்னபடியே நாடகமாடிவிட்டேன். வேலை முடிந்து இந்தியா திரும்ப இருந்தவன் சித்ராவுடன் சில காலம் உல்லாசமாகப் பொழுது போக்கத் தீர்மானித்து, பின்தங்கி இருப்பதாக ஒரு பிரமையை உருவாக்கிவிட்டு இங்கு உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன்'' என்றேன்.

கொஞ்சமாக விஸ்கி ஊற்றி நிறையச் சோடா கலந்தார். இரண்டு கோப்பைகளில் ஒன்றை என் கரத்தில் வைத்து விட்டு மற்றொன்றை யோசனையாக ஸிப்பினார். மேலும் யோசனையாகப் பைப்பைப் பற்ற வைத்தார்.

''அவர்களுக்குச் சுதந்திரம் தந்ததே தப்பு!'' என்றார்.

''யாரைச் சொல்கிறீர்கள்? செவ்வாய்க் கிரக வாசிகளையா?''

''உம்!''

''இருக்கலாம். ஆனால் உலகுக்கு வேறு வழி என்ன இருந்தது? ஐம்பதாண்டுகளுக்கு முற்பட்ட கதை அது. அவர்களை இங்கிருந்தபடி அடக்கி ஆள்வது கஷ்டமாக இருந்தது. பொழுது விடிந்தால் பிரச்னைகள் தலைவலி தந்தன. நமது கம்ப்யூட்டர்களே கதற ஆரம்பித்து விட்டன அவற்றைச் சமாளிக்க முடியாமல்....''

''வாஸ்தம்! எந்த ஒரு இனத்தவரையும் அவர்கள் விருப்பத்துக்கு விரோதமாக யாரும் அடிமைப்படுத்தி வைக்க முடியாது— நீண்ட காலத்துக்கு. சரித்திரம் திரும்பத் திரும்ப இதைத்தான் சொல்கிறது.''

''அல்ட்ரா இனம் என்று அவர்கள் மாறியதே அதிசயம். ஜப்பானியர் இந்தியர் அமெரிக்கர் பிரிட்டிஷ் என்று பல்வேறு தேசத்திலிருந்தும் எம்பிரயோக்களை கொண்டு போய் நம் முன்னோர்கள் செவ்வாய் கிரகத்தில் வளர்த்தனர். வளர்ந்து ஆளானவர்கள் தங்களைச் செவ்வாய்க் கிரகத்தினர் என்று எண்ணினார்களே யன்றி பூமி அவர்களுக்கு வேற்றுலகமாகத்தான் இருந்தது! இன்னும் இருக்கிறது.''

''அதில் அதிசயமில்லை. அமெரிக்காவுக்கு உலகின் பல தேசங்களிலிருந்தும் ஆதிநாளில் வந்து குடியேறினார்கள். அனைவரும் அமெரிக்கர் ஆனார்கள் இல்லையா?''

''வாஸ்தவம், ஆக மனித இனத்தின் முதல் தவறு செவ்வாய்க் கிரகத்தில் குடியேற்றம் செய்ததுதான்!''

''அன்று அது தேவைப்பட்டது. நூற்றிருபது ஆண்டுகளுக்கு முன் நமது மூதாதையர்கள் அதை அவசியம் என்று கருதினார்கள். பூமியில் மனித பாரம் மிகுந்தது. ஜனத்தொகை நெருக்கடியைச் சமாளிக்க முடியாமல் ஒரு திணறல். செவ்வாய் கிரகத்திலோ கிட்டத்தட்ட பூமிக்கு நிகரான சூழல். அங்கே அறிவு வளர்ச்சியுற்ற உயிரினங்கள் எதுவுமில்லை என்று கண்டுகொண்டோம். ஆனால் நம் மக்கள் அங்கு சென்று வாழ்வதற்கான சாதகமான சீதோஷ்ண நிலை இருந்தது. பரீட்சார்த்தமாகச் சில ஆயிரம் பேர்களை அனுப்பினோம். செவ்வாய் உலகம் முழுதும் அமெரிக்காவுடையது என்று உரிமை கொண்டாடப் போகிறோமே என்ற அச்சத்தில் ருஷ்யாவும் போட்டி போட்டுக்கொண்டு சில ஆயிரம் மக்களை அனுப்பியது. அப்படியே பிரிட்டன், ஜப்பான், பிரான்ஸ், சீனா எல்லாம். அங்கே சென்றவர்கள் செவ்வாயின் கனி வளங்களைக் கண்டு கொண்டார்கள். அவ்வளவுதான். அந்தச் செல்வங்களைப் பயன்படுத்துவதில் போட்டி. எனவே எத்தனை அதிகமான மக்களை அமெரிக்கா குடியேற்றுகிறதோ அவ்வளவுக்கு நல்லது என்று அமெரிக்கர்கள் எண்ணினார்கள். ருஷ்யர்களும் அப்படியே. விண் கலங்களில் குறைந்த எடையில் ஏராளமான மக்களைக் கொண்டு செல்ல விஞ்ஞானம் வழி வகுத்தது. மனிதர்களை அல்லாமல் பரிசோதனைச் சாலைகளில் நாம் தயாரித்த லட்சக் கணக்கான சூல்களைக் கொண்டு சென்றோம். அங்கிருந்த பெண்களை இரட்டைக் குழந்தைகள், சில சமயம் மூன்று நான்குகூட ஒரே சமயத்தில் பிரசவிக்கும் இயந்திரங்களாக்கினோம்.''

''மனித எம்பிரியோக்களை மட்டுமா? மிருகங்களின் சூல்களையும் அல்லவா பல்லாயிரக் கணக்கில் தயாரித்துக் கொண்டு சென்றது மனித இனம்? மாதிரிக்கு ஒவ்வொரு மிருக ஜாதியிலும் சிலவற்றை விண் கலங்களில் சுமந்து சென்ற பிறகு இந்தச் சூல்களைக் கொண்டு துரிதமாக இனப் பெருக்கம் செய்தோம்.''

''அதோடு நின்றதா? செவ்வாய்க் கிரகத்துக்குச் சென்று விநோதமான பூனைத் தலையுடன் நாய்களையும் யானைத் தலையுடன் குதிரைகளையும் உருவாக்கினர் சில கோணல் புத்தியுடைய விஞ்ஞானிகள்.''

''இதற்கும் ஒரு படி மேலே போய் இன்றைய அஸ்ட்ரா நாகரிகம் வாலுள்ள மனிதர்களையும் நான்கு ஸ்தனமுள்ள பெண்களையும் படைக்கிறது. ஆண்களுக்கு நெஞ்சிலே நான்கு காம்புகள்.''

''பூமியில் உள்ள மனிதர்களையும் அஸ்ட்ரா மக்களையும் வேறுபடுத்திக் காட்டுவதற்காக இந்த ஏற்பாடாம். சர்வாதிகாரி டாரஸ் பெருமையாகக் கூறிக் கொள்கிறான்!''

''வேடிக்கை! பூமிக்கு அடிமையாக இருக்க விரும்பாமல் சுதந்திரம் பெற்ற செவ்வாய் கிரக மக்கள் இன்று டாரஸுக்கு அடிமையாக இருக்கிறார்கள்! தனது கிரகத்தில் தான் உருவாக்கி வரும் நாகரிகத்துக்குத் தன் மனைவியின் பெயரைச் சூட்டி அஸ்ட்ரா நாகரிகம் என்கிறான்!''

''அந்த நாகரிகம் எப்படிச் செயல்படுகிறது நீ நேரில் சென்று பார்த்து அறிய வேண்டாமா?''

''அஸ்ட்ரா நாகரிகத்தை அறிவது மட்டும் தான் நோக்கமா?''

''வெளிப்படையாக அது. உன் நோக்கம் இங்கு சூல்கள் சூறையாடப்பட்டது ஏன் என அறிவது. அந்த இருபது எதிர் கால மேதைகளாலும் பூமிக்கு ஏதாவது ஆபத்து ஏற்படக் கூடும் என்றால் அதைத் தவிர்க்க முயல்வது!''

''இதற்குத்தான் மூன்று மாத அவகாசமா?''

''அதில் மூன்று நாட்கள் ஏற்கனவே வீணாகி விட்டன!''

''சித்ராவை உடன் அனுப்புவதானால் செவ்வாய் என்ன நரகத்துக்குக்கூடச் செல்ல நான் தயார்!''

''கவலைப்படாதே! நரகத்துக்கும் டாரஸின் கொடுங்கோலாட்சிக்கும் அதிக வித்தியாசமில்லை!'' என்று உறுதியளித்து என்னை அனுப்பினார் ஸீமன்ஸ்.

5

நான் — சித்ரா — விண்கலம் — முதல் வகுப்பின் சகல வசதிகள் — ஒரு மாதம்.

இதைவிடச் சிறந்த விடுமுறை என்ன இருக்க முடியும்?

அனுபவித்தேன் — பவித்தேன் — தேன்!

கேப்கென்னடி கடுகாகியது.

425 பயணிகளுடன் பூஸ்டர் ராக்கெட்டிலிருந்து விடுபட்ட விண்கலம் சூரிய சக்தியைப் பெற்று இயங்கியது. சூன்ய வெளியில் பாய்ந்தது. ஒரு மாதம் சென்று செவ்வாய்க் கிரகத்தில் இறங்கும்வரை எடையற்ற நிலை பாதிக்காதபடிக்கு விசேஷ பூட்ஸ்கள் அணிந்து விண்கலத்தின் பார், எந்தத் தேசத்து உணவு வகையையும் ருசியாகச் சமைத்துத் தரும் கம்ப்யூட்டர், படுக்கை வசதிகள், சினிமா, சூதாட்ட காஸினோ அனைத்தையும் ரசித்தேன்.

சூதாட்டங்களில் ஸ்டேக்ஸ் மிகவும் அதிகம். டாலர் ஸ்டெர்லிங் எல்லாம் பணயம் வைத்து அலுத்து விட்டது. இப்போது மனிதர்களை வைத்துத்தான் ஆடினார்கள். தோற்றவர் வென்றவருக்கு அடிமை — நாலு நாட்களுக்கு, நாற்பது நாட்களுக்கு, அல்லது ஆயுள் பரியந்தம். என் மனைவியைப் பணயம் வைத்து ஆடுகிறேன் அல்லது என் சிறுநீரகங்களில் ஒன்றை. ஏகாந்தச் சிறைவாசம் அனுபவிக்கிறேன் — தோற்றேனானால்— இப்படிப் பல வகை....

சித்ரா கெட்டிக்காரி. நான் ஆட வேண்டியது அவளுடன்தான் என்று நிபந்தனை போட்டாள்! வேறு யாரிடமும் தான் தோற்பதை அல்லது வேறு யாரையும் நான் வெல்வதை அவள் விரும்பவில்லை.

சித்ராவிடம் தோற்றாலும் இன்பம்; வென்றாலும் இன்பம். அடிமைக்கு எஜமானன் போடும் குறும்புத்தனமான கட்டளைகள். வேண்டுமென்றே தோற்று, பணிவாகக் குனிந்து அவள் கால் விரல்களை முத்தமிடும் பாக்கியம் பெற்றேன்.

ஒரு மாதம் போனதே தெரியவில்லை. செவ்வாயின் தலைநகர் அஸ்ட்ராவில் நாங்கள் இருந்தோம். ஹோட்டல் 'பூமி'. நீச்சல் குளத்துடன் கூடிய பெரிய அறை எங்களுக்காக ரிஸர்வ் ஆகியிருந்தது. டாரஸ் உபயம். எக்ஸ் பாஸ்போர்ட்டுடன் வரும் எனக்கு அவன் காட்டும் விசேஷ மரியாதை.

அமெரிக்கத் தூதர் சொன்னார். ''அவன் உனக்குப் பண்ணும் உபசாரத்தைப் பார்த்தால் இப்போதைக்கு உன்னைச் சந்திக்க மாட்டான் போலிருக்கே?''

''அவசரமில்லை'' என்றேன். அவர் என்னையும் சித்ராவையும் மாறி மாறிப் பார்த்தார். ''அவசரமில்லைதான்'' என்று கூறிச்சென்றார்.

சித்ராவுக்காக நான் கடமையில் அசிரத்தையாக இருந்து விடவில்லை. என் பிரச்னை ஆபத்தானதுதான். ஆனால் அவசரமற்றது. உயர்ந்த, மிக உயர்ந்த ஐ.க்யூ உடைய



கண்ணன்: மாலாவும் கலாவும் இரட்டைப் பிறவி என்றாயே எப்படி அடையாளம் கண்டு பிடிக்க உன் காதல் கடிதத்தை மாலாவிடம் தருவாய்?

முரளி: அதுவா? சுலபம்! கடிதத்தைப் படித்து விட்டு பளார் என்று என் கன்னத்தில் ஒன்று கொடுத்தால் அவள் கலா என்று தெரிந்து விடும். கடிதத்தை மாலாவிடம் தந்து விடுவேன்!

- லலிதா செல்லப்பா

எம்பிரையோக்கள் இங்கு திருடி வரப்பட்டுள்ளன. ஏன்? எதற்கு என்று அறிந்து ஆபத்தைத் தவிர்க்க முயல்வது என் பணி: ஆனால் அந்த எம்பிரையோக்கள் வளர்ந்து ஆளாக ஆண்டு பலவாகும்! இப்போது என்ன அவசரம் தலைபோகிறது? டாரஸ்ஸை நெருக்குவானேன்?

தூதரின் யோசனையைச் சிரமேற் கொண்டு விடுமுறையை நீடித்தேன். அஸ்ட்ரா அரசின் செலவில் விடுமுறையை அனுபவிக்கவும் செய்தேன். செவ்வாய்க் கிரகத்தின் அதிசயங்களைப் பார்க்க வாகன வசதிகளை டாரஸ் செய்து தந்தான். சித்ராவுடன் சுற்றி வந்தேன்.

ஆள்வோர் — அடிமைகள் — புத்திசாலிகளான மிருகங்கள். இதுதான் அஸ்ட்ரா நாகரிகம். வாலும் நான்கு ஸ்தனங்களும் உடைய ஆள்வோர். மனித உருவில் அடிமைகள். என்னைப் போல் பூமியிலிருந்து வந்து போகிறவர்கள் விசேஷ அடையாளச் சீட்டுகளை வைத்திருக்க வேண்டும். இல்லையெனில் எந்த விருடியும் அடிமையாகக் கருதப்படலாம்!

அப்புறம் மிருகங்கள். புத்தியுடைய மிருகங்கள். இடுப்புக்குக் கீழே குதிரை வடிவிலும் மேலே மனித வடிவிலும் ஸெண்டார்கள்; நாகக் கன்னிகைகள், இடுப்புக்குக் கீழே மீன் வடிவில் மெர்மெய்டுகள், பூனைத் தலையர்கள் ... இன்னும் பல ரகம்.

இவற்றை வேட்டையாடி மகிழும் ஆளும் வர்க்க அஸ்ட்ராக்கள். அவர்களுக்கு உதவும் அடிமை வர்க்க மனித உருவங்கள்.

வீட்டிலே வளர்க்கப்படும் பிராணியானால் கழுத்திலே லைசென்ஸ் கட்டித் தொங்க விடப்பட வேண்டும். இல்லையெனில் வேட்டையாடப்படலாம். புத்திசாலி மிருகங்கள் ஆதலால் தப்புவதற்கு அவை மேற்கொள்ளும் தந்திரங்களும் மிகுதி...வேட்டை நன்றாகச் சூடு பிடிக்கும்.....

சித்ராவுக்குக் குமட்டிக் கொண்டு வந்தது. அவள் என்னுடன் செவ்வாயில் இயற்கை அழகுகளைச் சேர்ந்து ரசிப்பதுடன் நிறுத்திக் கொண்டாள். மனிதனோ மிருகமோ அஸ்ட்ரா நாகரிகமோ எதுவுமே எட்டிப் பாராத பச்சைப் பகுதிகள் ஏராளமாய் இருந்தன. திக்கு திசை புரியாமல் திரிந்து விட்டு வாகனத்தில் உள்ள கம்ப்யூட்டரின் உதவியின்றித் திரும்பி வர முடியுமா என்று பார்ப்பது ஒரு சாகச விளையாட்டு.

பேச்சிலும், விளையாட்டிலும், உண்டு உறங்குவதிலும் காதல் செய்வதிலும் காலம் விரைந்தது.

6

"எக்ஸ் பாஸ்போர்ட்டுடன் வந்தவனைச் சந்திக்க நேரமில்லை என்கிறீர்கள். பூமிக் கணக்குக்கு ஒரு மாதம் தள்ளித் தேதியும் நேரமும் குறிப்பிட்டிருக்கிறீர்கள். ஆனால் என்னைக் கொஞ்சுவதற்கு மட்டும் நேரம் அகப்பட்டு விடுகிறதாக்கும்!" என்று கிண்டல் செய்தாள் அஸ்ட்ரா.

டாரஸ் அவளுடைய வாலை மெல்லத்தூக்கி இடக் கரத்தில் வைத்து அதன் பட்டு ரோமங்களை வலக்கரத்தால் தடவினான்.



அவன்: "இந்த நட்சத்திர ஹோட்டலில் நிரந்தரமா நாலு டாக்டர்களை வைச்சிருக்கீங்களாமே.... எதுக்குப்பா?"

சர்வர்: "தினசரி நிறையப் பேர் மயக்கம் போட்டு விழுந்து தொலைக்கிறாங்க ஸார் .... பில்லைப் பார்த்துட்டு!"

—உ. ராஜாஜி

"காரணமாகத்தான் தாமதிக்கிறேன். காத்திருக்கட்டும். அவன் பார்வையில் நம் மதிப்பு உயரும்!" என்றான் டாரஸ். "வந்த அன்றிலிருந்தே அஸ்ட்ரா மொழியையும் கற்க ஆரம்பித்திருக்கிறானாம், கம்ப்யூட்டரிடம். மகா கெட்டிக்காரன். என்னை அவன் சந்திக்கும் போது மொழி பெயர்ப்பு கம்ப்யூட்டருக்கே அவசியம் இல்லாது போனாலும் வியப்பதற்கில்லை!"

அஸ்ட்ராவின் வாலைப் பயபக்தியோடு எடுத்துத் தன் கன்னங்களில் உரசிக் கொண்டான் டாரஸ். அவன் அதரங்கள் அதனை முத்தமிட்ட போது அவள் சிரித்தாள். அவன் கழுத்தைக் கரங்களால்சுற்றி வளைத்துக் கேலியாகக் கேட்டாள்: "இந்த வாலில் அப்படி என்னதான் காண்கிறீர்கள்? கொஞ்சிக் கொஞ்சி மாய்ந்து போகிறீர்களே!"

"அஸ்ட்ரா! நம்மை மனித இனத்திலிருந்து வேறு படுத்துவதே இந்த வால்தானே!" என்றான் டாரஸ். "அப்புறம் அதிகப்படியான இந்த இரு ஸ்தனங்கள்!"

அவளுடைய மாராப்பை அவன் நேராக்கினான். அப்படியும் பூரித்தெழுந்த நான்கும் அவனைக் கிறங்கச் செய்தன. அவற்றில் முகம் புதைத்த போது அவனுக்கு ஆனந்தக் கண்ணீர் பெருகியது. நெஞ்சு விம்மியது.

அவள் அவனை விலக்கி விட்டு எழுந்தாள். சேலைத் தலைப்பை ரவிக்கை அணியாத கரத்தால் இழுத்துச் சரி செய்து கொண்டு அதன் நுனியால் அவன் கண்ணீர் முத்துக்களைத் துடைத்தாள். அவள் கேச அலங்காரத்தில் மின்னிய முத்துக்கள் கலகலத்தன."

"மனிதன் மட்டமானவன், மனித நாகரிகம் கீழ்த்தரமானது. அஸ்ட்ரா மக்களாகிய நாம் உயர்ந்தவர்கள். இந்த செவ்வாய் கிரகத்தை மட்டுமல்ல. சூரிய மண்டலம் முழுவதையுமே ஆளப் பிறந்தவர்கள்!" என்றான் டாரஸ்.

"அதற்கான ஏற்பாடுகள் நடக்கின்றன அல்லவா?" என்று கேட்டாள் அஸ்ட்ரா.

''என்னால் அதிகக் காலம் காத்திருக்க முடியாது. பூமியில் மனித ஜாதி பூண்டோடு ஒழிய வேண்டும். மனித ஜாதி என்று ஒன்று இருந்தது என்ற எண்ணமே மறைந்து விட வேண்டும். மனிதன் செவ்வாய்க் கிரகத்தை வெற்றிக் கொண்டான். அவனுடைய கோணலான விஞ்ஞான மூளையில் உதித்தவர்கள் தாம் செவ்வாய் கிரகத்தின் ஆளும் வர்க்கத்தினர் — அதாவது நம் மூதாதையர் என்ற சரித்திரமே அழிந்து விட வேண்டும். புதிய சரித்திரம் எழுதப்பட வேண்டும்: ஆதி — பகவன் அஸ்ட்ரா—டாரஸ். அவர்கள் செவ்வாயை வசப்படுத்தினார்கள்; பூமியை வென்றார்கள்: அங்கே அஸ்ட்ரா நாகரிகத்தைப் பரப்பினார்கள்; நாம் வணங்கும் தெய்வங்கள் அஸ்ட்ரா—டாரஸ்.....''

''எழுதப்படும் அப்படி புதிய சரித்திரம் நிச்சயம் எழுதப்படும். அதை எழுதப் போகிறவனே இங்கே, இப்போது எக்ஸ் பாஸ்போர்ட்டுடனும் ஒரு பெண் துணையுடனும் வந்திருப்பவன்தான்!'' என்றான் டாரஸ்.

7

பூமிக் கணக்குப்படி இரு மாதங்கள் ஓடி விட்டன. எனக்குத் தரப்பட்டிருந்த அவகாசம் மூன்றே மாதங்கள். பூமிக்குத் திரும்பவே ஒரு மாதம் ஆகும். டாரஸ்ஸைச் சீக்கிரம் சந்திக்க வேண்டும். அவன் இனியும் சந்திப்பை ஒத்திப் போட அனுமதிக்கக் கூடாது அழைப்பு வரவில்லை என்றால் அழையா விருந்தாளியாகச் செல்ல வேண்டியதுதான். காவலை மீற வேண்டியதுதான்...

அதற்கு அவசியம் நேரவில்லை. குறித்திருந்த தேதியில், நேரத்தில் வாகனம் என்னை அரண்மனைக்கு அழைத்துப் போயிற்று. சித்ராவை முதன் முறையாகப் பிரிந்து சென்றேன். அவள் பயந்தாள். ஆனால் வேறு வழி? தேறுதல் கூறினேன். அனுமதி ஒருவருக்கு மட்டுமே!

ரத்தினங்களும் வைரங்களும் பதிக்கப் பெற்ற உடையும், முத்துச் சரங்களுடன் கூடிய சிகை அலங்காரமும் கூடி அஸ்ட்ரா ஜாஜ்வல்யமாகக் காட்சி யளித்தாள். அவளுடைய உயர் பீடத்துக்குச் சற்றுத் தாழ்வாக டாரஸ்.

நான் அவளை ஏறிட்டேன். ''அஸ்ட்ராவுக்கு அமெரிக்காவின் நல்வாழ்த்துக்கள்!''

''நீ இந்தியன்!'' நினைவூட்டினாள்.

''நான் ஜனநாயக உலகின் விஞ்ஞானி. எக்ஸ் பாஸ் போர்ட் உள்ளவர்கள் உலகின் குறுகிய தேச எல்லைகளைக் கடந்து நிற்பவர்கள். ஜனநாயக உலகு எந்த உதவி கோரினாலும் செய்யத் தயாராக இருப்பவர்கள்!''

''விளக்கம் சரி, வந்த நோக்கம்?''

''ஒரு திருட்டு நடந்திருக்கிறது. பல எம்பிரையோக்கள் களவாடப்பட்டிருக்கின்றன. உயர்ந்த, மிக உயர்ந்த ஐ. கியூ உடைய சூல்கள். அவற்றைத் திருடியது அஸ்ட்ரா ஆசாமி என்று நம்பகமாகத் தெரிகிறது.''

அஸ்ட்ராவின் புருவங்கள் உயர்ந்தன. ''புகாரா?''

''புகார் மட்டுமல்ல; எச்சரிக்கை! ஏதேனும் துர் நோக்கத்துடன் அந்தச் சூல்கள் திருடப்பட்டிருக்குமானால்...''

''—மானால்?''

''அஸ்ட்ரா நாகரிகமே அழிந்து போகும்!''

''அதென்ன அவ்வளவு சுலபமா?''

''செவ்வாய்க் கிரகத்தை நாங்கள் பூமியிலிருந்து அனுப்பிய செயற்கைக் கோள்கள் சுற்றி வருகின்றன. அவற்றில் அணு ஆயுதங்களுடன் கூடிய ஏவு கணைகள். பூமியிலிருந்தவாறே நாங்கள் உத்தரவுகளைப் பிறப்பித்தால் போதும். தானியங்கு முறையில் ஏவுகணைகள் பிரிந்து வந்து தலைநகர் அஸ்ட்ராவையும் பிற முக்கிய நகரங்களையும் தாக்கும். அணு குண்டுகள், ஹைட்ரஜன் குண்டுகள், நியூட்ரான் குண்டுகள் எல்லாம் சேர்ந்து அழித்த பின் என்ன எஞ்சும்? உங்களுக்குத் தெரியாதது அல்ல.''

''தெரியும், ஆனால் ஒரு சந்தேகம்.''

''என்ன?''

''இவ்வளவு புத்திசாலிகளான நீங்கள், இவ்வளவு விஞ்ஞான வளர்ச்சி பெற்ற மனித இனம், ஏன் இன்னமும் ஜனநாயக உலகு என்றும், கம்யூனிஸ உலகு என்றும் பிரிந்து நிற்கிறது? ஒருவரை ஒருவர் தாக்கி அழிக்க ஏவுகணைகளை ஏன் உருவாக்கித் தயாராக வைக்கிறது? அஸ்ட்ரா நாகரிகத்தை அழிக்கத் தயங்காதது போலவே கம்யூனிஸ நாகரிகமும் ஜனநாயக நாகரிகமும் ஒன்றை ஒன்று அழிக்கத் தயார். எல்லாம் அழிந்துபோனால் மிஞ்சுவது என்ன?''

இதற்கு எனக்குப் பதில் கூறத் தெரியவில்லை. வற்புறுத்தப்பட்டபோது, ''அது எங்கள் தலையெழுத்து'' என்று முணுமுணுத்தேன்.

அஸ்ட்ரா சிரித்தாள்.

''தலையெழுத்தை விஞ்ஞானம் வெற்றி கொண்டு விட்டதாக மார் தட்டினான் மனிதன். ஆனால் நீ இப்போது சொல்வதைப் பார்த்தால் தலையெழுத்துத்தான் விஞ்ஞானத்தை வெல்லும் போலிருக்கிறதே!''

''நான் நடக்கிற விஷயம் பற்றிப் பேச வந்தேன். நடக்கக் கூடும் என்று அனு

''ஈரான் அதிபர் எனக்குக் கிடைக்க இருந்த வேலையைக் கெடுத்துட்டார்....?''

''அதெப்படி?''

''ஈரான் அதிபர் யார்னு இண்டர்வியூவில் கேள்வி கேட்டுத் தொலைச்சிட்டாங்களே....!''

-கிணத்துக்கடவு ரவி



கல்கி

சந்தா விவரம்

★

மானேஜர்
கல்கி
கிண்டி, சென்னை - 600 032

	ஓராண்டு	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 60	ரூ. 30
இலங்கை	ரூ. 70	ரூ. 35
இதர வெளிநாடுகள்	ரூ. 110	ரூ. 55

மாணிக்கப்படுகின்ற விஷயங்களைப் பற்றித் தர்க்கம் பண்ண வரவில்லை.''

''ஒன்று செய்வோம்'' என்றான் டாரஸ். ''நீங்களோ மாமேதை. என்னுடன் செஸ் ஆடுங்கள். என்னை வென்று விட்டால் பிறகு நீங்கள் கேட்டதற்கெல்லாம் ஒளிவு மறைவு இல்லாமல் பதில் கூற நான் கடமைப்பட்டவன். உங்கள் ஆலோசனைப்படி நடக்க வேண்டியவன். சுருங்கக் கூறுவதெனில், நான் உங்கள் அடிமை!''

நான் யோசித்தேன். செஸ்ஸில் இவனை வெல்வது அப்படியொன்றும் சிரமமான காரியமாக இருக்கப் போவதில்லை. ஆனால் அஸ்ட்ரா?

என் சந்தேகத்தைப் புரிந்து கொண்டவள் போல் அஸ்ட்ரா கூறினாள்:

''அவர் தோற்றால் நானும் உங்கள் அடிமைதான். பிறகு இந்தச் செவ்வாய்க் கிரகமே உங்களுக்கு அடிமைதான். அவர் இன்றி என்னால் எதைச் சாதிக்க முடியும்? அவர் சிவம் நான் சக்தி. உங்களுக்குத் தெரிந்த கதை அது.''

''சரி!'' என்றேன். சூதாட்டம் எனக்குப் பிடிக்கும். செஸ்ஸும் பிடிக்கும். மூளைக்கும் வேலை; வெற்றிக்கும் வாய்ப்பு. 'ரொம்பப் பெரிய ரிஸ்க் எடுத்துக் கொள்கிறாய்' என்று ஸிமன்னின் எச்சரிக்கை ஒலிப்பது போல் ஒரு பிரமை. அதை ஒதுக்கினேன்.

அவர்கள் என்னை உல்லாச புரிக்கு அழைத்துப் போனார்கள்.

8

உல்லாசபுரியின் காட்சிகள் கிறங்கச்செய்தன. டாரஸ் – அஸ்ட்ரா இருவருக்கும் இடையில் நடந்ததால் என்னால் அங்கே நுழைய முடிந்தது. ஆள்வோருக்கு மட்டுமே அனுமதி.

பல்வேறு வர்ணங்களை வாரி இறைத்த ஒளி விளக்குகள். மாறும் வர்ணச் சேர்க்கைக்கு ஏற்ப மாறுகின்ற மணங்கள். தரையெல்லாம் மிருதுவான மெத்தைகள்.

மலர்கள், மலர்களென மங்கைகள்.

சிரிப்பு, கலகலப்பு.

மது.

நீச்சல் குளம்.

வேடிக்கை விளையாட்டுக்கள்.

விசித்திரமான இசைகள், அதற்கேற்ப விநோதமாய் ஆடும் அணங்குகள்.

எல்லாம் நின்றன. டாரஸ் - அஸ்ட்ராவுக்கு மரியாதை!

''தொடரட்டும்'' என இவர்களுடைய அனுமதி.

மீண்டும் இசை, மணம், ஆடல், வர்ணம் வேடிக்கை விளையாட்டு, சிரிப்பு, மது, மங்கை.

''உன்னையும் இந்த விளையாட்டில் சேர்த்துக்கொள்ளச் சொல்லட்டுமா?'' — விஷமச் சிரிப்புடன் அஸ்ட்ரா.

''நீ மானுடன் அல்லவா? எங்கள் உத்தரவு பிறந்தால்தான் இவர்களில் ஒருவனாக முடியும்'' — டாரஸ்.

இன்னும் சற்று நேரம் போனால் எனக்கு வந்த காரியமே மறந்து விடுமோ? இங்கேயே இவர்களுடனேயே ஐக்கியமாகி அஸ்ட்ராவைத் தெய்வமாக ஏற்று....

நான் சித்ராவையும் அவளுக்கு என்னிடமிருந்த அன்பையும், என்னைப் பேராசையுடன் அவள் கட்டிக் காத்ததையும் நினைவு படுத்திக் கொண்டேன்.

''நான் விளையாட வந்தது இவர்களுடன் அல்ல; உங்களுடன் செஸ் ஆட வந்தேன்'' என்றேன்.

டாரஸ் ஜாடை காண்பித்து விட்டு மேலே நடக்க ஒரு கதவு திறந்து கொள்ள என்னை முதலில் அனுப்பி விட்டு அவர்கள் பின் தொடர்ந்தனர்.

ஏகாந்தமான அறை. இதமான குளிர் தேவையான அளவில் ஒளி, மிருதுவான கார்பெட், மையத்தில் மேஜை, செஸ் போர்டு.

ஆடத் தொடங்கிச் சற்று நேரத்துக்குள்ளேயே எனக்குப் புரிந்து விட்டது — டாரஸ் மகா திறமைசாலி! என் வீரர்கள் சரிந்தார்கள், ஒரு குதிரை குளோஸ்.

''கம்ப்யூட்டர் மூளையா உன்னுடையது? இவ்வளவு திறம்பட ஆடுகிறாயே?''

''சரியாக ஊகித்து விட்டாய்!'' என்றாள் அஸ்ட்ரா.

நான் திடுக்கிட்டேன்.

டாரஸின் மூளையில் ஒரு சின்னஞ் சிறு கம்ப்யூட்டர் — செஸ் ஆட்டத்துக்கென்றே புரோக்ராம் செய்யப்பட்ட கம்ப்யூட்டர்— சஸ்திர சிகிச்சையால் பொருத்தப்பட்டுள்ளது. அதனால் செஸ் ஆட்டத்தில் இவரை யாராலும் வெல்ல முடியாது!''

''இது ஏமாற்றுவதாகும்!'' என்றேன்.


''அது எப்படி? இந்த கிரகத்தில் மூளையில் மினி கம்ப்யூட்டர்கள் பதியப் பெற்றவர்கள் ஏராளம். அது அவர்களின் ஓர் அங்கமேயன்றி வேறில்லை. செயற்கை ரத்த நாளம், செயற்கைக் கல்லீரல் போல் அதுவும் ஒன்று. ஒவ்வொருவரையும் ஒரு விஷயத்தில் ஸ்பெஷலிஸ்ட் ஆக்குகிறது.''

''அஸ்ட்ராவின் மூளைக்குள் உள்ள கம்ப்யூட்டர் எதற்கு புரோகிராம் செய்யப்பட்டது?''

தச்சர்: உங்க ஆபிஸுக்கு நாற்காலி மேஜை எல்லாம் செய்யணும் என்று சொன்னீர்ங்களே எந்த மரத்தில் செய்யலாம்?

அவர்: தூங்கு மூஞ்சி மரத்தில் தவிர வேற எந்த மரத்தில் செய்தாலும்சரி.

–ஆர். கோபாலகிருஷ்ணன்



அவள் மெல்ல காமாதுரமாய்ச்சிரித்தாள். ''சொல்லட்டுமா?''காதோடு கிசுகிசுத்தாள். என் காதுகளில் ஜிவ்வேறியது.

''இவரை ஜெயித்துவிடு. அதன் ஆற்றலை உனக்கு நிரூபிக்கிறேன்!''

இப்போது உடம்பெல்லாம் ஜிவ்வேறியது எனக்கு.

சிரமப்பட்டு, புத்தியைத் திசை திருப்பி செஸ் போர்டின் மீது செலுத்தி... 'டேய் பரணி! உன் விஞ்ஞானமூளை கேவலம் ஒரு மினி கம்ப்யூட்டரிடம் தோற்றுப் போகிறதா?... கவனம்...கவனம்.. ஆழ்ந்த கவனம்!'

காய்கள் நகர்ந்தன!

நேரம் நகர்ந்தது.

மந்திரியை நகர்த்தி ''செக்!'' என்றேன்.

டாரஸ் விழித்தான். பற்களை நறநறத்தான். இலேசான அச்சத்தோடு அஸ்ட்ராவை ஏறிட்டுப் பார்த்தான்.

''நீங்கள் எங்கள் அடிமைகள்'' என்றேன்.

''நீ தோற்றுவிட்டாய்'' என்றாள் அஸ்ட்ரா என்னை நெஞ்சிலே தட்டி.

''உளறாதே! தோற்றது டாரஸ்.''

''செஸ்ஸில் அவன் தோற்றது சரி. ஆனால் நீ எந்த நோக்கத்துடன் இங்கு வந்தாயோ அந்த நோக்கத்துக்குப் படு தோல்வி! நீ தேடி வந்த அந்த எம்பிரையோக்கள் வளர்ந்து ஆளாகிவிட்டன. எட்டுப் பெண்கள், பன்னிரண்டு ஆண்கள்!''

''அதற்குள்ளாகவா?'' – திறந்த வாய் மூடாத நான்..

''ஆமாம்'' என்றான் டாரஸ். ''இளமையைக் காத்துக் கொள்ள விஞ்ஞானம் நமக்கு உதவுகிறதல்லவா? அறுபது வயதானாலும் இருபதாகத் தோற்றமளிக்கிறோம் இல்லையா? இதற்கு மறுபுறமாக...

''வளர்ச்சி வேகத்தையும் அதிகரிக்க முடியும். அந்த விஞ்ஞானத்தைப் பூமி இன்னும் அறியவில்லை. ஆனால் செவ்வாயில் நாங்கள் சாதித்து விட்டோம். ஒரு மாத வளர்ச்சியை ஒரு மணி நேரத்தில் காண்பித்து விடுவோம்.''

என்னைச் சந்திக்க டாரஸ் ஒரு மாதம் தாமதித்ததன் காரணம் எனக்குப் புரிந்தது.

''சூல்கள் வளர்ந்து, பிறந்து, உயர்ந்து, வாலிபப் பருவத்தை அடைந்தபோது வளர்ச்சியின் வேகத்தைச் சராசரிப்படுத்திவிட்டோம்.''

''இப்போது எங்கே அவர்கள்?''

பூமியை நெருங்கிக் கொண்டிருப்பார்கள். அவர்கள் – புனி ருஷ்யாவில். கிரெம்ளினில் சிலர், மாஸ்கோவின் எல்லைக்கு அப்பால் ருஷ்ய அதிபரின் விடுமுறை கால விவசாய' பண்ணையில் சிலர்!''

''எதற்கு... அங்கே...அவர்கள்?''

''ருஷ்ய அதிபர் ஓய்வு நாடித் தமது பண்ணைக்குச் செல்வார். அங்கே எட்டுப் பெண்களில் மூவர் அவருக்குக் ''கம்பெனி'' கொடுப்பார்கள். அன்று இரவோ மறுநாளோ அவருக்குத் தலை வலி ஆரம்பமாகும். ஆரம்பமாகும்படி அந்தப் பெண்கள் கவனித்துக் கொள்வார்கள். அதிபர் வழக்கமான தம் டாக்டரை நாடுவார். பயனிராது. பிறகு ஸ்பெஷலிஸ்டுகளைத் தேடுவார். நாம் அனுப்பியுள்ள பன்னிரண்டு ஆண்களில் நால்வர் டாக்டர்கள்.மூளைச் சிகிச்சை நிபுணர்கள். அவர்கள் அதிபரைச் சோதிப்பார்கள். சஸ்திர சிகிச்சை சிபாரிசு பண்ணுவார்கள். ஆபரேஷனையும் அவர்கள்தான் நடத்துவார்கள். மற்ற ஐந்து பெண்களும் எட்டு ஆண்களும் திட்டம் நிறம்பட யாரும் சந்தேகிக்காதவாறு நிறைவேறப் பக்க பலமாக இருப்பார்கள்.''

''நிஜமாகவே இது சாத்தியம் என்று நம்புகிறீர்களா? ருஷ்ய அதிபரை இப்படி ஏமாற்றுவது அவ்வளவு எளிதான காரியமா?''

''கஷ்டமே இல்லை. அதனால்தானே மிகச் சிறந்த ஐ க்யூ உடைய எம்பிரையோக்களைத்



''அவர்: உங்கள் திட்டங்களை 'அமுல்' படுத்த முடியாவிட்டால் என்ன செய்வீர்கள்''
''இவர்: 'ஸீபாரெக்ஸ்' செய்வோம்.''
-பிரியாபாலு

திருடி வந்தோம். இந்த இருபது பேரால் இதைச் சாதிக்க முடியவில்லை எனில் வேறு யாராலுமே முடியாது!''

''ஆபரேஷன்போது என்ன ஆகும்?''

''இப்போது என் மூளைக்குள் ஒரு மினி கம்ப்யூட்டர் இருக்கிறதல்லவா? அதுபோல் ருஷ்ய அதிபர் மூளைக்குள்ளும் ஒரு மினி கம்ப்யூட்டர் பொருத்தப்படும். அது அணு ஆயுதப் போர் தொடக்கத்துக்குப் புரோகிராம் செய்யப்பட்டது.''

''அப்படியானால்...''

''ஆபரேஷன் முடிந்து இரு தினங்களில் உடல் சற்றுத் தேறியதும் அவர் சிவப்புப் பட்டனை அழுத்தி உலகில் அணு ஆயுதப் போரைத் தொடங்கி வைத்து விடுவார்! அமெரிக்காவை நோக்கித் தரையிலிருந்தும் விண்வெளியில் செயற்கைக் கோள்களிலிருந்தும் ருஷ்ய ஏவு கணைகள் புறப்பட்டுப் பாயும். அமெரிக்கா ருஷ்யா மீது எதிர்த் தாக்குதல் நடத்தும்!'' என்றான் டாரஸ்.

அஸ்ட்ரா சொன்னான்: ''மற்ற தேசங்களும் போரில் இறங்க, கம்யூனிஸம் ஜனநாயகத்தை அழிக்க, ஜனநாயகம் கம்யூனிஸத்தையழித்துக்கட்ட சர்வநாசம்விளையும். மனித நாகரிகமே இல்லாது போய்விடும்!''

''அதன் பிறகு அஸ்ட்ரா நாகரிகம் உலகில் பிரவேசித்துத் தழைக்கத் தொடங்கும்!''

''இவ்வளவு திறமைகளை வளர்த்துக் கொண்டிருக்கும் நீங்கள் எதற்காகச் சிரமப்பட்டு பூமியிலிருந்து எம்பிரையோக்களைத் திருடி வரவேண்டும்? அஸ்ட்ராவே பூமி மீது போர் தொடுக்கலாமே! அழிக்கலாமே!''

''அமெரிக்க அறிவாற்றலில் உருவான சூல்கள் வளர்ந்து ஆளாகி ருஷ்யா சென்று அமெரிக்காவையே அழிக்கச் சதி பண்ணுவதில் ஒரு காவிய நீதியை நீ காணவில்லையா?''

''மனிதனுடைய அறிவு வளர்ச்சி அகம்பாவத்துடன் துஷ்பிரயோகமாகும் போது அதுவே அவனை அழிப்பதுதானே நியாயம்?''

''சூரிய மண்டலத்தில் முதலில் உயிரினங்கள் தோன்றியது செவ்வாய் கிரகத்தில் தான் என்றும் பூமி வளம் பெற செவ்வாய்க் கிரகம் உதவியதாகவும் இனி வரலாறு கூறும்''

''மோசம் போய்விட்டாயடா பாவி!'' என்று என் இதயம் என்னையே இடித்துக் காட்ட, நேரம் இருக்கிறதா உலகைக் காக்க முடியுமா என்று அறிவு வினா எழுப்ப முடியுமோ இல்லையோ முயன்று பாரேன் என்று கடமை உணர்வு உந்த...

என் எண்ணத்தைப் படித்தவனாக அஸ்ட்ரா கூறினான்: ''நீ பூமிக்குத் திரும்ப எண்ணினால் இங்கே யாரும் தடுக்கப் போவதில்லை. தாராளமாகப் போய் வா!''

''நீ வாஷிங்டனை அடையும்போது அங்கே பிடி சாம்பல்தான் மிஞ்சி இருக்கும்!'' என்றான் டாரஸ்.

ஆத்திரத்தை எதன் மீதாவது காட்ட வேண்டும் போலிருக்க செஸ் போர்டு இருந்த மேஜையை உதைத்து உருட்டி விட்டுத் தலை தெறிக்க ஓடினேன்.

அஸ்ட்ரா — டாரஸ் சிரிப்பொலி என்னைத் தொடர்ந்தது.

9

பூமி. இடிபாடடைந்த என் வீடு. முன் அறையில் அமர்ந்து எழுதுகிறேன்.

உள்ளே இருந்து ''என்ன எழுதுகிறாய்?'' என்று சித்ராவின் குரல்.

''சரித்திரக் கதை.''

''உலகம் அழிந்த கதையா?''

''ஆம். அதோடு இணைந்த நம் காதல்!''

''உண்மைச் சரித்திரம் அதில் இருக்கிறதா?''

''இருக்கிறது.''

''அதை நான் அனுமதிக்க முடியாதே!''

''நீ யார் அனுமதிப்பதற்கு?''

''நான் உன்னைக் கண்காணிக்க அஸ்ட்ராவால் அனுப்பப்பட்ட அதிகாரி. அதைத் தீக்கிரையாக்கிவிடு அன்பே! யாருக்காக அதை எழுதுகிறாய்? அதைப் படித்து உண்மையை உணர வேண்டிய மனித குலமே அழிந்த பிறகு யாருக்காக எழுதவேண்டும்?''

நான் பெருமூச்சுடன் எழுந்து எழுதியதை எரியும் அடுப்பில் இடுகிறேன்.

''அன்பே வா! பூமண்டலத்தில் அஸ்ட்ரா நாகரிகம் நம்மால்தான் தோன்றிப் பரவப் போகிறது. வா என் அருகில்!'' என்றாள் சித்ரா.

நான் அவளை நெருங்கி அவளருகே சயனிக்கிறேன்.

களுக்கென்று சிரித்து அவள் என்னை அணைக்கிறாள். என்மீது பரவுகிறாள். மிருதுவான ரோமங்களுடன் அவளுடைய வால் உயர்ந்து என் கன்னங்களைத் தடவுகிறது.

செவ்வாய்க் கிரகத்தில் சில மணி நேரம் அவளைத் தனியே விட்டு விட்டு அஸ்ட்ரா—டாரஸ்ஸைச் சந்திக்க நான் சென்ற அந்தத் தினத்தை எண்ணிப் பார்க்கிறேன். நான் திரும்பு முன் அவளுக்குப் பலவந்தமாக ஹார்மோன் சிகிச்சை நடத்து மூளையில் ஒரு மினி கம்ப்யூட்டரும் பதிக்கப் பெற்றுவிட்டது.

''அன்பே! என்னுடன் சேர்!'' என்றாள். ''நிறையக் குழந்தைகளைப் பெற்றெடுப்போம். அஸ்ட்ரா மக்களைத் தோற்றுவித்துக் கடமையாற்றுவோம்.''

நான் அவளுடைய நான்கு ஸ்தனங்களின் இடையில் முகம் புதைத்து விம்மினேன்.

முடிவாக ஒன்று:

கதை கற்பனைதான்; ஆனால் ஆதாரமற்ற கற்பனையல்ல என்பது ALVIN TOFFLER எழுதிய FUTURE SHOCK படிப்போருக்குப் புரியும்.

(முற்றும்)

Printed by V. Murali and Published by V. Vaidyanathan on behalf of Messrs Bharathan Publications Private Ltd, at the Bharathan Press, Race Course Road Guindy, Madras-600 032. (Phone: 431543) Editor : K. Rajendran

எவ்வகை உணவாயினும்
அதனை முழுமையாக்குவது
டி. எஸ். ஆர். ஊறுகாய்களே!

புதிய
கிடாரங்காய்
ஊறுகாய்



டி.எஸ்.ஆர்

டி. எஸ். ஆர். & கோ
"கோகுல் கார்டன்ஸ்"
கும்பகோணம்

CRITERION

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka

மொரார்ஜீ :.பேப்ரிக்ஸ்

ஏனென்றால் டிசைன்கள் எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும்.



நீங்கள் மொரார்ஜீ மில்ஸ் வழங்கும் துணிகளை வாங்கும் போது பகட்டான டிசைன்கள், எடுப்பான வண்ணங்களுக்கு மேலான ஒன்று உங்களுக்குக் கிடைக்கிறது. அதுதான் அவற்றின் தரம். அந்த உயர்வான தரம்தான் மொரார்ஜீ செய்யும் ஒவ்வொரு இழையுடனும் கவனமாக பின்னப்பட்டு உருவாக்கப் பட்டுள்ளது. இன்று அது நூறு ஆண்டுகளுக்கும் மேலாக பூரணத்வம் பெற்று அற்புதக் கலையாக விளங்குகிறது.

ஏனென்றால் நாங்கள் டிசைன்கள் எவ்வளவுதான் கண்ணுக்கு அழகாக இருந்தாலும் நல்ல அடிப்படை அம்சங்கள் அவசியம் இருக்க வேண்டும் என்று உறுதியாக நம்புகிறோம்.

சூட்டிங்குகள் • ஷர்ட்டிங்குகள்
• புடவைகள்
• ட்ரெஸ் மெட்டீரியல்கள்

MORARJEE MILLS

தி மொரார்ஜீ கோகுல்தாஸ் ஸ்பின்னிங் & வீவிங் கம். லிட்.,
டாக்டர் அம்பேத்கர் ரோடு, பரேல், பம்பாய் 400 012.

Contour Ads-MM-9g/81 Tam

மொரார்ஜீ மில்ஸ்